மே 07 - 13, 2006 | May 07 - 13, 2006 | 28 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்

## தலைமையின் கட்டளைக்கு காத்திருக்கும் புலிகள்

## சர்வதேசம் யார் பக்கம்?



## அரச படைகளுக்கு சோதனைக் களமாகும் யாழ்ப்பாணம்

# புலிகள் நடத்திய ஆயுதக் களைவு

சமாதானப் பேச்சுவார்த்தையின் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் பின்வாங்கவில்லை என்றே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திரும்பத்

அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா நாட்டின் தற்போதைய நிலைபற்றி அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு விளக்கி உள்ளதாகவும் நோர்வே சமாதான

ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

அவரது பேரினவாத சிந்தனைகளின் விளைவை நாடு அறுவடை செய்துள்ள இன்றைய நிலையிலேனும் தனது தவறை உணர்ந்து நாட்டை அதன் அவலத்தில்

வருவதற்கு அவர்கள் மீது சர்வதேச நாடுகள் பிரயோகிக்கக் கூடிய செல்வாக்கையும் மஹிந்தர் இழந்து தவிக்கப் போகிறார்'' இவ்வாறு அவர்கள்

# தலைமையின் கட்டளைக்கு காத்திருக்கும் புலிகள்

திரும்பக் கூறிவருகிறார். ஆனால், வடக்கு - கிழக்கில் வெடித்துள்ள அரச பயங்கரவாதமும் கொழும்பில் ராணுவத்தளபதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலும் நாடு யுத்த நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு இருப்பதையே துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

### சம்பூர்கிராமம் மயானபூமி

கடந்த இரு வாரங்களாக இடம் பெற்றுவரும் வன்முறைகள் காரணமாக பாதுகாப்புப் படையினர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள - தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் நடத்திய சரமாரியான விமானக் குண்டு, மற்றும் ஷெல் தாக்குதல்களினால் பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகள், குடியிருப்புகள் தரை மட்டமாக்கப் பட்டுள்ளன. கோடிக்கணக் கான பெறுமதி உள்ள சொத்துகள் நாசமாக்கப் பட்டுள்ளதுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி கோயில் களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். தாக்குதலினால் பாதிக்கப் பட்ட மூதூர் சம்பூர் கிராமம் மயான பூமிபோல் காட்சிஅளிக்கிறது.

திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது தாக்குதல் தொடருமாயின் தற்பாதுகாப் புக் கருதி தாக்குதல்களை நடத்த நேரிடும் எனத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள் தமது தலைமையின் கட்டளைக்கு காத்திருப் பதாகவும் எச்சரித்துள்ளனர்.

### நெருக்கடிகளுக்கு புலிகளே காரணம்

தமிழர் தாயகத்தில் அரசு நடத்தும் கொடூர தாக்குதல் கள் பற்றிய செய்திகள் சர்வதேசத்தின் காதுகளுக்கு எட்டியுள்ள நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் நோர்வேயின் அனுசரணையுடன் கூடிய சமாதானப்பேச்சுகளை முன்னெடுக் குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரச தரப்பின் கண்மூடித் தனமான மிருக வெறித்தாக்குதல்கள் தமிழ் மக்களின் நெஞ்சத்தை நெகிழ வைத்துள்ள வேளையில் யுத்த நிறுத்தம் இன்னும் அமுலில் உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தவிர, ஊடக அனுசரணையாளர்களும் ஸ்ரீலங்கா கண்காணிப்புக் குழுவும் விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தை மேசைக்கு

> தமிழர் தாயகத்தில் அரசு நடத்தும் கொடூர தாக்குதல் பற்றிய செய்திகள் சர்வதேசத்தின் காதுகளுக்கு எட்டியுள்ள நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் நோர்வேயின் அனுசரணையுடன் கூடிய சமாதானப்பேச்சுகளை முன்னெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
>
> அரச தரப்பின் கண்மூடித் தனமான மிருக வெறித்தாக்குதல் தமிழ் மக்களின் நெஞ்சத்தை நெகிழ வைத்துள்ள வேளையில் யுத்த நிறுத்தம் இன்னும் அமுலில் உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அழைத்து வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.



ஜனாதிபதி மஹிந்த, ராஜபக்ஷ தற்போது வெடித்துள்ள யுத்த நெருக்கடிக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் குற்றஞ்சாட்டி இருப்பதுடன் முழு அளவிலான யுத்தம் ஒன்று வெடிக்காமல் இருப்பதற்கு தான் பொறுமைகாத்துவருவதே காரணம் என்றும் சொல்லி இருக்கிறார்.

ஆனால்

- ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பதவிவெறி கொண்டு நித்திரை செய்து கொண்டிருந்த பேரின வாதத்தை தட்டி எழுப்பிவிட்டதாலும்,
- தனது வெற்றியை அடுத்து, பேரினவாதிகளின் கவசமாக இராணுவ, அரச உயர் மட்டங்களில் அடிப்படைவாத - பேரினவாத சிந்தனை கொண்டவர்களை பதவியில் அமர்த்தியதாலுமே

தற்போது யுத்த நெருக்கடி தோன்றி உள்ளது. இதை மஹிந்தருக்கு

இருந்து மீட்டெடுக்கும் வழி பற்றி அவர் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மாறாக, சமாதானப் பேச்சுவார்த்தை என்றும் கௌரவ சமாதானம் என்றும் பழையபல்லவியையே பாடிக்கொண்டு பேரினவாதிகளையும் அவர்களது மேலாண்மைக்கருத்துகளையும் தனது கிடுக்குப் பிடிக்குள் இறுக்கி வைத்திருக்கவே அவர் விரும்புவது நன்றாகத் தெரிகிறது.

### ஜே.வி.பிக்கு அழைப்பு

இதன் ஒரு அம்சமாக அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வருமாறு தனது ஆருயிர் தோழர்களான ஜே.வி.யினருக்கு மீண்டும் ஒரு முறை அழைப்பு விடுத்துள்ளார் அவர். விடுதலைப் புலிகளுக்குப் பாடம் படிப்பிக்க அரசாங்கம் பலமான நிலையில் இருக்க வேண்டும் எனவும் அதற்கு ஜே.வி.பி அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் எனவும் மஹிந்தர் ஜே.வி.பி யினருக்கு வற்புறுத்திக் கூறி உள்ளதாக அறிய முடிகிறது.

மஹிந்தரின் இந்த வேண்டுகோளுக்குப் பதில் அளித்த ஜே.வி.பி யினர்,

1. சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்கு அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற தமக்கு காத்திரமான பங்கு வழங்கப்பட வேண்டும் என்றும்
2. சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்கு அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தமக்கு காத்திரமான பங்கு தரப்பட வேண்டும் என்றும்

அவரைக் கேட்டுள்ளனர்.

அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதுடன் சர்வதேசத்திடம் இருந்து மஹிந்தரை தனிமைப்படுத்தி முற்றுமுழுதாக அவரை தமது கைப்பொம்மையாக்குவதே ஜே.வி.பியினரின் அந்தரங்க நோக்கம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

''இவ்வாறான சுயநல சிந்தனை கொண்டு ஜே.வி.பியினரை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்வதன் மூலம் நோர்வேயையும் சர்வதேச சமூகத்தையும் பகைத்துக்கொள்ள நேரிடும். அது மட்டுமல்ல, பேச்சு வார்த்தை மேசைக்கு விடுதலைப்புலிகளைக் கொண்டு

மேலும் தெரிவிக்கின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில்

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்யுங்கள்.
- அனுசரணைப்பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுங்கள்.
- விடுதலைப்புலிகளின் மீது தாக்குதலை ஆரம்பியுங்கள்.

என்று கூறி ஜே. வி. பியினர்

அரசாங்கத்தின் கழுத்தைத் திருகி வரும் தற்போதைய களநிலையில் மஹிந்தர் அவர்க ளுடன் தனது உறவுக ளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு ஆர்வமாக இருப்பது சர்வதேச நாடுகளின் கவனத்தை அவர் பக்கம் திருப் பியுள்ளது.

### நோர்வே என்ன சொல்லுகிறது

இங்கு இடம்பெறும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள் பற்றிக்கருத்துவெளியிட்ட நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் 2002 ஆம் ஆண்டுக்குப்பின்னர் மிக மோசமான நிலை இப்போது உருவாகி இருப்பதாகக் கூறியுள்ளார்.

இரு தரப்பினரும் மேற்கொண்டுவரும் தாக்குதல்களினால் தமது பணி கடினமாகி உள்ளதாகத் தெரிவித்திருக்கும் அவர் இருதரப்பினருடனும் இணைந்து தாம் ஏற்றுள்ள பணியை முன்னெடுத்து

நேதாஜி

வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் தாக்குதல் மற்றும் விடுத லைப்புலிகளின் மீதான தாக்குதல்கள் குறித்து இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வருவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

கொழும்பில் தங்கியுள்ள நோர்வேயின் சிறப்புத் தூதர் ஹன்சன் போவரும் இந்திய அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பலப்படுத்தியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### இந்தியா என்ன செய்கிறது

நோர்வே மட்டுமல்ல இந்தியாவும் இங்குள்ள நிலைமைகளைக் கண்காணித் துக்கொண்டே இருக்கிறது. மனித்தியாலத்துக்கு மனித்தியாலம் இலங்கை நிலைமையை நாங்கள் மிக விழிப்பாக அவதானித்துவருகின்றோம் என இந்திய இராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் நடத்திய ஆயுதக் களைவு

பலத்த இராணுவப்பாதுகாப்பு நிலைகளுக்கு மத்தியில் அமைந்திருந்த இராணுவத்துணைக்குழுக்களின் கசங்குளம் முகாம் மீது விடுதலைப்புலிகளின் சிறப்புக்கொமாண்டோ அணியினர் நடத்திய அதிரடித்தாக்குதல் படைத்தரப்பை மட்டுமன்றி அவர்களின் பாதுகாப்பை நம்பியிருந்த துணைக்குழுக்களுக்கும் பேரிடியாக அது இருந்தது.

அண்மைக்காலமாக இராணுவத்துணைக்குழுக்கள் எனப்படும் ஒட்டுக்குழுக்களின் நடவடிக்கைகள் சமாதான நடவடிக்கைக்கு மட்டுமன்றி தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவந்தன. கடந்த ஜெனிவாப்பேச்சுகளில் புலிகளின் முக்கியவலியுறுத்தலாகவும் துணைக்குழுக்களின் ஆயுதக்களைவு என்பது இடம்பெற்றிருந்தது. அரசும் துணைக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக்களைய இணக்கம் தெரிவித்துவிட்டு பின்னர் அதனை வழமைபோல் காற்றில் பறக்கவிட்டிருந்தது. துணைக்குழுக்களின் நடவடிக்கைகள் மிகவும் அதிகரித்து எல்லைகடந்தவேளையில் தான் மட்டு. பொலனறுவை எல்லைப்பகுதியில் இந்தத்தாக்குதல் நடவடிக்கை அமைந்துள்ளது.

புலிகளின் புலனாய்வு அணிகளால் உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மிகவும் நுட்பமாக இந்தத்தாக்குதல் திட்டம் வரையப்பட்டுள்ளது. துணைக்குழுக்களின் பிரதான தளங்கள் வெலிக்கந்தைப்பகுதியிலேயே அமைந்துள்ளன. தீவுச்சேனை, காசங்குளம், மற்றும் அதனைச்சூழ உள்ளபகுதிகளில் சில ஒட்டுக்குழுக்களின் முகாம்கள் அமைந்திருந்தன. இந்த முகாம்களுக்கு பாதுகாப்பு அரண்களாக இராணுவமுகாம்கள் அமைந்திருந்தன. இவை அமைந்திருந்ததும் காட்டுப்பகுதியாகும். தீவுச்சேனை கருணாகுழு முகாம் குறித்து கடந்த வருடம் கொழும்பு ஆங்கில ஊடகம் ஆதாரத்துடன் தகவல் வெளியிட்டிருந்தது. அந்த முகாம் மீது கடந்த ஆண்டு புலிகள் அதிரடித்தாக்குதல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் துணைக்குழுக்களின் நடவடிக்கைகள் மட்டு. அம்பாறையுடன் மட்டுமல்லாது திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் என எங்கும் வியாபித்து காணப்படுகின்றன. இராணுவப்புல னாய்வுப்பிரிவினரும் இந்தத்துணைக்குழுக்களை தமிழர் தாயகம் எங்கும் பரவிவிட்டு குழப்பத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தி விடுதலைப்போராட்டத்தின் மீது உளவியல் போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதற்கு நமது இராணுவவலிமையின் மூலம் முடிவுகட்ட அல்லது அவ்வாறான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள புலிகள் நீண்ட காலமாகவே முயற்சி செய்து வருகின்றனர். இந்தத்துணைக்குழுக்கள் மீது சிறியளவில் தாக்குதல்களை நடத்தி அல்லது அவற்றின் முக்கிய உறுப்பினர்கள் மீது தாக்குதல்நடத்தி எச்சரிக்கை விடுத்து வந்த புலிகள் பெரும் பாய்ச்சல் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடத்தினர். இதனால் ஒட்டுக்குழுக்களுக்கு பெரும் ஆள்

இழப்புகள் மட்டுமன்றி கடும் மன அழுத்தத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

தாக்குதல் திட்டம் பற்றியும் எவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

விடுதலைப்புலிகளின் சிறப்புஅணியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 20 முதல் 25 வரையான போராளிகளுக்கு தாக்குதலுக்கு முன்னதாக சிலவாரங்கள் சிறப்புப்பயிற்சிகள்



வழங்கப்பட்டன. காட்டுப்புற நகர்வுகள், உள் ஊடுருவல், தாக்குதல் ஒத்திகைகள் என சிறப்புப்பயிற்சிகள் வழங்கப்பட்டன. இறுதியாக தாக்குதல் தினத்துக்கும் சில நாள்களுக்கு முன்னரும் மாதிரி முகாம் அமைக்கப்பட்டு தாக்குதல் ஒத்திகை நடத்தப்பட்டது. தாக்குதல் நடவடிக்கைகள் யாவும் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்டக்கட்டளைத்தளபதியுமான கேணல்.பானு அவர்களின் கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட்டன.

விடுதலைப்புலிகளின் மிகச்சிறந்த தளபதிகளில் ஒருவரான பானு ,1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டுகாலப்பகுதிவரை யாழ்.மாவட்டத்தளபதியாக இருந்தவர். 1990 ஆம் ஆண்டு யாழ்.கோட்டை புலிகளால் வீழ்த்தப்பட்ட போது அங்கு புலிக்கொடியேற்றும் பொறுப்பு பானுவிடமே வழங்கப்பட்டது. பின்னர் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புலிகளினால் ஆனையிறவு பெரும் தளம் வெற்றிகொள்ளப்பட்ட போது அங்கு புலிக்கொடியேற்றும் பொறுப்பு பானுவிடமே தலைவர் பிரபாகரன் வழங்கினார். ஆனையிறவுத்தாக்குதல் வெற்றிக்குக்காரணம் கருணாவே என்பது போல் கருணா புலிகளை அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட காலப்பகுதியிலும் அதன்பின்னரும் பல தரப்பாலும் பிரசாரம் செய்யப்பட்டது. எனினும் ஆனையிறவில் புலிக்கொடியேற்றும் பொறுப்பு பானுவிடம் தலைவர் வழங்கியமையிலிருந்து ஆனையிறவு வெற்றியில் பானுவின் முக்கியத்துவம் அறிந்துகொள்ளமுடியும். ஆனையிறவு வீழ்த்தப்பட்ட காலப்பகுதியல் பானு புலிகளின் மோட்டார்ப் படையணிக்குப்பொறுப்பாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் அபாரதுணிச்சல் கொண்ட பானு கருணாவைவிட திறமையான இராணுவவிற்பன்னர் ஆவர். இனித்தாக்குதல் நடவடிக்கைபற்றி ஆராய்வோம்.

வெலிக்கந்தையிலிருந்து 7 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது காசங்குளம் பகுதி. அந்தப்பகுதியிலிருந்த கருணா குழுவின் முகாம் மீதே புலிகள் பாரிய அதிரடித்தாக்குதல் நடத்தியுள்ளனர். தீவுச்சேனை மற்றும் சில முகாம்களில் இருந்து ஒன்றுகூடலுக்காக சுமார் 50 வரையான கருணாகுழு உறுப்பினர்கள் மற்றும் ஈ.என்.டி.எல்.எப்., இதரஇயங்கங்களின் உதிரி உறுப்பினர்கள் கூடியிருந்தனர். புலிகளின் புலனாய்வுப்பிரிவு இந்தத்தகவலை உள்ளிருந்தே பெற்றிருந்தது. இதையடுத்து ஏற்கனவே தயாராக இருந்த புலிகளின் 25 பேர் கொண்டசிறப்புத்தாக்குதல் அணி இரவோடுஇரவாக காட்டுப்பாதைகள் ஊடாக பயணித்தது. துணைக் குழுக்களின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்த ஏற்ற விதத்தில் நிலையெடுத்துக்காத்திருந்தனர்.

நேரம் 1 மணியை நெருங்கியிருந்தது. தாக்குதல் நடத்துமாறு உத்தரவு பறந்தது. தாக்குதல் அணியினரின் துப்பாக்கிகள் அனலைக்கக்கின. ஆர்.பி.ஜி. ரொக்கெட்கள், கிரனேட் லோஞ்சர்கள் மற்றும் கையெறி குண்டுகளால் அந்தப்பகுதி குமுறிக் கொண்டிருந்தது. போதாக்குறைக்கு இராணுவ முகாம்களில் இருந்து எறிகணைத்தாக்குதல்கள் நடத்தப் பட்டன. இதனால் அந்தப்பகுதி அதிர்ந்து கொண்டிருந்தது.

சுமார் இருதரப்புக்கிடையேயும் 45 நிமிடங்கள் சமர் நடந்தது. எனினும் தாக்குதல் உக்கிரத்துக்கு ஒட்டுக் குழுக்களால் நின்றுபிடிக்கமுடிய வில்லை. முகாமைக்கைவிட்டு பின்வாங்கி வெளியேறின துணைக்குழுக்கள். சுமார் ஒரு மணிநேரம் இராணுவக்கொலை வலயத்தினுள் நின்ற தாக்குதல் அணி மெல்ல வெளியேறத்தொடங்கியது. இந்தப் பாரிய அதிரடித்தாக்குதலில் 18 துணைக்குழுவினர் பலியாகினர். மேலும் 10 பேர்வரை காயமடைந்தனர். 5 பேர் புலிகளால் கைது செய்யப்பட்டனர். இது தவிர அண்மையில் வவுனியாவில் வைத்து கடத்தப்பட்ட வர்த்தகர் ஒருவர் ஒட்டுக்குழுக்களின் முகாமிலிருந்து மீட்கப்பட்டார். இந்தத்தாக்குதலில் கருணாவின் நீண்டகால மெய்பாதுகாவலராக இருந்த கிருஷ்ணா மற்றும் மணாளன் ஆகிய கருணா குழு முக்கிய நபர்களும் பலியாகினர்.

ஈ.என்.டி.எல்.எப் குழுவின் முக்கிய உறுப்பினர் ஒருவரும் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர் ஈ.என்.டி எல்.எப்.குழுவின் மத்தியகுழு உறுப்பினரும் 'றோ' வின் முக்கிய கையாளுமான றீகன் என்பவர்.கொல்லப் பட்டுள்ளார் என்றும் தாக்குதல் நடந்த முகாமில் அண்மையில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக வாகனமும் நின்றதாகத் தெரிவிக்கப் படுகிறது. இந்தத்தாக் குதலில் துணைக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றியுள்ளதாக புலிகள் அறிவித் துள்ளனர். அதில் 81 எம்.எம். மோட்டர் பீரங்கியும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத்தாக்குதல் அணி திரும்பிய சமயம் இராணுவத்தினர் வழிமறிப்புத்தாக்குதலை மேற்கொண்ட போதிலும் அதனைமுறியடித்து புலிகள் அணி எந்தவித இழப்புகளுமின்றி தளம் திரும்பியதாக புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் அணிபுதைத்துவிட்டுவந்த கண்ணிவெடியில் சிக்கி கப்டன் தர அதிகாரி உட்பட 5 படையினர் பலியாகினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் படைத்தரப்பு இதனை மறுத்து வருகிறது.

இந்தத்தாக்குதல் படைத்தரப்புக்கும்

**ஷோபா**

துணைக்குழுவினருக்கும் பலத்தபின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் தமது பலம் குறையவில்லையெனக்காட்ட துணைக்குழுக்களைப்பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொள்ள இராணுவப்புலனாய்வுப்பிரிவு முனையக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிர்ச்சித்தாக்குதலில் இருந்து மீள துணைக்குழுக்களுக்கு நீண்ட காலம் எடுக்கும் என்றே நம்பப்படுகிறது. இந்ததாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் தயாமோகன், ஜெனிவா உடன்பாட்டின்படி அரசதரப்பு துணைக்குழுக்களின் ஆயுதங்களை களையவில்லை. அதனால் தமது அணியினர் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக்களையும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சர்வதேசம் யார் பக்கம்?

போரா? பேச்சா? எது நடக்கப் போகின்றது என்ற ஏக்கத்துடன் மக்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில்-

இலங்கை விவகாரத்தில் ஆழக்கால் ஊன்றும் வகையான செயற்பாடுகளை சர்வதேசம் முன்னெடுத்து வருகின்றது.

சர்வதேசத்தின் பிரசன்னத்தில் யுத்தநிறுத்த உடன்பாடு, சர்வதேசத்தின் பிரசன்னத்தில் ஜெனிவா உடன்பாடு என்று எல்லாம் நடந்து முடிந்தும்-

தமிழர் விவகாரம் சர்வதேசத்தின் கைகளில் சிக்கி தமிழீழ விடுதலைப் போராட்டம் பெரும் பின்னடைவை அடைந்தும்- சிங்களத்தலைமைகளில் இன்னமும் மனமாற்றம் ஏற்படவில்லை. மனமாற்றம் ஏற்படுமா என்ற கேள்வி தான் விஞ்சி நிற்கின்றது.

ஈழத்தமிழ் மக்கள் தங்கள் அபிலாஷைகளை வெற்றெடுப்பதற்காக கடந்த 30 வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

ஆரம்பத்தில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் தமிழ் மக்கள் போராடி வருகின்றனர். காலத்துக்குக்காலம் வந்து போன சிங்களத்தலைமைகள் தமிழ்மக்களின் பிரச்சினையை வைத்து அரசியல் வியாபாரம் செய்தார்களே தவிர, அந்த மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வையோ, உரிமையையோ வழங்க முன்வரவில்லை.

தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவும், அடிமைகளாகவும் கருதிய சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பை முழுவீச்சில் முன்னெடுத்தன.

தெற்கில் பாமர சிங்கள மக்களிடையே பேரினவாதக் கருத்துக்களை விதைத்து, தமிழ் மக்கள் சிங்கள மக்களின் விரோதிகள் என்ற மாயையை உருவாக்கின சிங்களத் தலைமைகள்.

ஆட்சியைப் பிடிக்க வேண்டும். அதற்கு வாக்கு வங்கிகளை எப்படிப் பலப்படுத்தலாம் என்ற சிந்தனையில் தெற்குச் சிங்களத் தலைமைகள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தனவே தவிர, தமிழர் விவகாரத்தை தீர்க்க முன்வரவில்லை.

ஒரு தரப்பு தீர்வுக்கான ஒப்பந்தங்களைச் செய்ய முனைய, மறுதரப்பு அந்த ஒப்பந்தங்களைக் கிழித்து எறியும் வரலாறுதான் தெற்கில் அரங்கேறி வந்துள்ளது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முதல் டட்லி சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, ஆர்.பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க போன்ற தெற்கின் தலைவர்கள் தமிழர் விவகாரத்தை தமது அடுத்த கட்ட நகர்விற்கு-வளர்ச்சிக்கு- பயன்படுத்தி வந்துள்ளனர்.

தமிழர்களுக்கு உரிமை வழங்கப் போகின்றோம் என்று வெளிப்படையாகவும் அந்த மக்களை எப்படி அழிக்கலாம் என்ற சிந்தனையில் மறைமுகமாகவும் இந்தத் தலைவர்கள் செயற்பட்டார்கள். இது வரலாறு கூறும் செய்தியாகும்.

இந்தத் தலைவர்களின் ஏமாற்றும் போக்கை உணர்ந்த தமிழர் தரப்பு சர்வதேசத்தின் பிரசன்னத்தில் தமிழர் விவகாரத்துக்குத் தீர்வுகாண வேண்டும் என்று கோரிநின்றது.



இதன் பலனாக தமிழர் தரப்பின் ஏகப் பிரதிநிகளும் அதிகாரபூர்வப் பிரதிநிதிகளுமான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் தெற்குத் தலைமை பேசவேண்டிய நிலை உருவானது.

இலங்கை வரலாற்றில் முதன்முதலாக தமிழர் தரப்பான தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் சிங்களத் தரப்பின் தலைவராக முன்னாள் பிரதமரும், ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் நிலை உருவானது.

இலங்கையின் அயல்நாடான இந்தியா இலங்கை விவகாரத்தில் 1987 ஆம் ஆண்டு தலையிட்டது. அதன் மூலம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒன்று வந்தது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைதிப் படையாக இலங்கை வந்த இந்தியப்படைகள் பின்னர் தமிழ்மக்களை ஆக்கிரமிக்கும் படையாக மாறின. அதன் பயனாக உருவான யுத்தம் தமிழர் தரப்புக்கு வெற்றியைத் தந்தது. இந்தியப் படை வெளியேறியது.

சிங்களத்தலைமைகளும் தமிழ் தலைமைகளும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தது போல, இலங்கை-இந்திய ஒப்பந்தமும் தோல்வி கண்டது.

நீண்ட வரலாற்றின் பின் 2002 ஆம் ஆண்டு சர்வதேசத்தின்-நோர்வேயின்-பிரசன்னத்தில் உருவான ஒப்பந்தம் வீழ்ந்து-எழுந்து- ஒருவாறு நிமிர்ந்து நிற்கின்றது.

## தெற்குத் தலைமைகளுக்கு கிட்டியுள்ள இறுதிச்சந்தர்ப்பம்

தமிழர் தரப்பும் சிங்களத் தரப்பும் சம பலமுள்ள- சம அந்தஸ்துள்ள- நிலையில் உருவான இந்த ஒப்பந்தம் கடந்த நான்கு வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகின்றது.

இந்த ஒப்பந்தம் மூலம் யுத்தம் நிறுத்தப்பட்டு, துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு, தற்கொலைத்தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சுகள் ஆகியவற்றுக்கு முடிவு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், இன்று மீண்டும் துப்பாக்கிகள் வெடிக்கின்றன. தற்கொலைத் தாக்குதல்கள், வான் தாக்குதல்கள் எல்லாம் ஆரம்பமாகி விட்டன.

மீண்டும் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதா என்ற கேள்வி எழுந்து நிற்கின்றது.

வன்செயல்கள் பெரிய அளவில் வெடித்து, யுத்த நிறுத்த உடன்படிக்கை-சிங்களத் தரப்பும் தமிழர் தரப்பும் செய்து கொண்ட ஆகப் பிந்திய உடன்படிக்கை- செயலிழந்து விட்டது போன்ற சூழல் நிலவுகின்றது.

இந்த அபாய-நெருக்கடி நிலையின் தன்மையை உணர்ந்த சர்வதேச சமூகம் குறிப்பாக நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் இணைத்தலைமை அவசரமாக ஒஸ்லோவில் கூடியது.

இலங்கையில் தற்சமயம் உருவாகியுள்ள நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்த இணைத்தலைமை, வன்செயல்களைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நடந்த தற்கொலைத் தாக்குதல் குறித்தோ, திருமலை சம்பூரில் நடந்த விமானத் தாக்குதல் குறித்தோ, வடக்கு-கிழக்கில் நடக்கும் கொலைகள் குறித்தோ தனித்தனியாக கண்டனத்தை வெளியிடாத இணைத்தலைமை வன்செயல்களை நிறுத்துமாறு இரு தரப்பினரையும் கேட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிராக பெரிய அளவில் சர்வதேச மட்டத்தில் அரசு முன்னெடுத்துள்ள பயங்கரவாதப் பிரசாரத்திற்கு நல்ல பாடத்தை இணைத்தலைமை கற்பித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் பற்றுதியுடன் செயற்படுகின்றோம் என்று சர்வதேசத்துக்குக் காட்டிக் கொண்டு, மறைமுகமாக ஒட்டுக்குழுக்களை ஊக்குவித்து, அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு, இனஒழிப்புப் போர் ஒன்றை அரசு நடத்தி வருகின்றது என்பதை நன்குணர்ந்து அரசின் முகத்திரையை சர்வதேசம் கிழித்துள்ளது.

தமிழர் தரப்பின் நியாயப்பாடுகளை சர்வதேசம் உணர்ந்து, அதற்கு ஏற்ற வகையில் செயற்படுகின்றது என்பது தற்போது நிருபணமாகின்றது.

இன்னமும் இந்த யதார்த்த நிலையை அரசும், தெற்குப் பேரினவாதச் சக்திகளும் புரியாமல் செயற்பட்டால், சர்வதேசம் தமிழர் பக்கம் சாய்ந்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

இந்தியாவின் பிரசன்னம் தோல்வியில் முடிந்தது போல, தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேசத்தின் பிரசன்னமும் முடிவுக்கு வருமாயின் எதிர்காலம் இருளாகிவிடும். பேச்சுகள் யாவும் முடிவுக்கு வந்துவிடும்.

இந்த நிலையை உணர்ந்த தமிழர் தரப்பு, அரசு சீண்டிய போதும் பொறுமை காத்து சமாதானத்தின் பற்றுதியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஜெனிவாவில் எட்டப்பட்ட உடன்படிக்கையை அரசு நடைமுறைப்படுத்தாத போதும்-

கிழக்குத் தளபதிகள் வன்னி வர அரசுத் தரப்பு தடைகளைப் போட்ட போதும்-

போராளிகள், பொதுமக்கள் கொல்லப்பட்ட போதும்-

தமிழர் தரப்பு சர்வதேச பிரசன்னத்தில் இருந்து விலகாமல், சிங்கள அரசின் இனப் படுகொலை, அராஜகச் செயற்பாடுகள் குறித்து சர்வதேசத்திற்கு எடுத்து விளக்கிக் கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசின் போக்கை சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறி, அரசின் இரட்டை வேடப் போக்கை அம்பலப் படுத்திக் கொண்டிருக்கின்றது தமிழர் தரப்பு.

**யாழவன்**



சர்வதேச நாடுகளில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்து, பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்விக்கும் அரசின் செயற்பாடுகள் இனிப் பயன்தரப்போவதில்லை என்ற உண்மையை அரசு உணர வேண்டும்.

இந்த நாட்டில் அமைதி நிலை நிலவ - சமாதான முயற்சிகள் பயன்தரக்கூடிய வகையில் முன்னெடுக்கப்பட்டு தீர்வுகிட்ட- முழு அர்ப்பணிப்போடு தெற்குத் தலைமைகள் செயற்பட வேண்டிய காலகட்டம் இது.

சர்வதேசத்தின் பிரசன்னத்தில் நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் இறுதிச் சந்தர்ப்பத்தையும் இலங்கைத் தெற்குத் தலைமைகள் தவற விடுமானால் இரு தேசங்களின் தலைவர்கள் சந்தித்துப் பேசும் நிலைதான் உருவாகும்.

இந்த யதார்த்த நிலையை உணர்ந்து தெற்குத்தலைமை செயற்படப் போகிறதா? அதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# நுஆவும் தேசிய காங்கிரஸும் இணைவதற்கு முயற்சி!

பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் நுஆவில் இருந்து விலகி ஸ்ரீலங்கா முஸ்ஸிம் காங்கிரஸில் இணைப் போகிறார் என்றும் உள்ளு ராட்சி சபைத் தேர்தலில் அக்கரைப் பற்றுப் பிரதேசசபைக்கு சேகு இஸ்ஸதீன் சார்பு



நுஆக் கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து போட்டியிடவுள்ளன என்றும் கடந்த வாரங்களில் செய்திகள் வெளியாகின.

அதனையடுத்து இப்போது வெளியாகியிருக்கும் செய்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமயிலான நுஆவும் அமைச்சர் அதாவுல்லாவின் தலைமையிலான தேசிய காங்கிரஸும் இணையவுள்ளன என்பதே.

நுஆவின் செயலாளர் நாயகம் எம்.ஐ.றபீக் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளாராம். சேகு இஸ்ஸதீன் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைப் போகிறார் என்ற செய்தி வெளியானதும் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவாம்.

சேகு இஸ்ஸதீன் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்தால் நுஆவின் வாக்கு வங்கியில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என்பதையும் பேரியலின் அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பதையும் நன்கு உணர்ந்த நுஆ தனித்து நின்றால் விழ்ந்துவிடுவேம் என்ற உண்மை நிலையை இப்போது உணர்ந்துள்ளது.

வெகுவிரைவில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று இடம்பெறலாம் எனக் கூறப்படுகின்ற இந்த நிலையில், அவ்வாறு தேர்தல் நடைபெற்றால் அதை எதிர்கொள்ளக்கூடிய - வெற்றியடையக்கூடிய தந்திரோபாய மார்க்கம் ஒன்றை உருவாக்க வேண்டி யது நுஆவின் கட்டாய - காலத்தின் தேவையாகிவிட்டது.

அந்த வகையில், சேகு இஸ்ஸதீன் இணைவால் முஸ்லிம் காங்கிரஸில் ஏற்படப்போகும் பலம் நுஆவின் நிரந்தர வீழ்ச்சிக்கு வழிசமைக்காத வண்ணம் திட்டம் வகுத்துச் செயற்பட நுஆ முடிவு செய்துள்ளது.

அவ்வாறு தமது பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதென்றால் ஏதேனும் ஒரு கட்சியுடன் கூட்டுச் சேர்வதே ஒரே வழியென்பதை உணர்ந்து அவ்வாறு கூட்டுச் சேர அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸைத் தேர்ந்தெடுத்துள்ளது நுஆ.

நுஆவின் செயலாளர் நாயகம் எம்.ஐ.றபீக் தேசிய காங்கிரஸின் தலைவர் அமைச்சர் அதாவுல்லாவைச் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சு நடத்தியுள்ளார். பெரும்பாலும் சாதக முடிவே கிட்டியுள்ளதாம்.

இதேநிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை சக்தி டீவியில் இடம்பெற்ற மின்னல் நிகழ்ச்சியில் காலந்துகொண்ட பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீனிடம், அவர் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைவதாகக் கூறிப்படுவதுபற்றியும் அவர் சார்பு நுஆவும் முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து அக்கரைப்பற்று பிரதேசசபைக்குப் போட்டியிடுவது பற்றியும் அத்நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஸ்ரீரங்கா கேள்வி எழுப்பினார். அவ்வாறு இடம்பெறக் கூடிய சத்தியப்பாடுகள் இருக்கின்றன என சேகு இஸ்ஸதீன் பதில் அளித்தார்.

பொதுவாக, தற்போது முஸ்லிம்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றால் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைய வேண்டும் எனத் தான் தொடர்ந்தும் முஸ்ஸிம் காங்கிரஸிற்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றேன் எனசேகு இஸ்ஸதீன் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸுடன் இணைவது தொடர்பாக பட்டும்படாமல் கூறினார். அக்கரைப்பற்றுப் பிரதேச சபைக்கு இணைந்து போட்டியிடுவது தொடர்பாகப் பேச்சுகள் இடம்பெற்றன- முயற்சிகள் மேற்கொள்ப்பட்டன எனக் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் 65வீத முஸ்லிம்களின் செல்வாக்கு உள்ள கட்சி என்பதால் அக்கட்சியின் சார் பிலேயே அதிக வேட் பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என அக்கட்சி நிபந்தனை விதித்ததன் காரணத்தினாலேயே அது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்க முடியாமல் உள்ளது என அவர் மேலும் கூறினார்.

இருப்பினும், மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் தொடர்பாக இப்போதைக்கு முரண்பாடுகள், விட்டுக்கொடுப்பின்மை போன்றவை காணப்படுகின்ற போதிலும் அவை தீர்க்கப்பட்டு சுமுகமான ஒரு முடிவு எட்டப்படலாம் என நம்பப்படுகிறது.

பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் பேச்சில் இவை தொடர்பாக மறுப்புகள் எதும் தெரிவிக்கப்படவில்லை. அவர் முஸ்லிம் காங்கிரஸில் இணைவதற்குப் பரிசாக வழக்கப்படும் கட்சிப் பதவிகள் தொடர்பாகவே மறுப்புத் தெரிவித்தார். கட்சிப் பதவிகள் கேட்டு எந்தப் பேச்சிக்களும் இடம்பெறவில்லையென அவர் கூறினார்.

அவர் அவ்வாறு மறுத்தாலும் கூட அவருக்கு முஸ்லிம் காங்கிரஸில் முக்கிய பதவி ஒன்று வழங்கப்பட வேண்டும் என சேகு இஸ்ஸதீன் சார்பில் அவரைச் சார்ந் தோர் கூறி வருகின்றனர்.

அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸும் அவருக்குக் கட்சிப் பதவியொன்றை வழங்கத் தயாராக இருக்கின்றதும் உண்மை.

எனினும், இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்த நுஆ கட்சியினர், சேகு இஸ்ஸதீன் எப்படியும் ஏதேவொரு வகையில் முஸ்லிம் காங்கிரஸுடன் ஓர் உறவை ஏற்படுத்தப்போகிறார், நுஆவை விட்டு நிரந்தரமாய் பிரியப்போகிறார், நுஆவின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமையப் போகிறார் என்பதை நன்கு உணர்ந்து விட்டனர்.

இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை அடுத்து நுஆ மிகவும் தீவிரமாகியுள்ளது. அதாவுல்லாவும் உசாராக்கியுள்ளார். முஸ்லிம் காங்கிரஸும் சேகு இஸ்ஸதீனும் இணைந்தால் வீழ்ச்சி நுஆவுக்கு மட்டுமல்ல தனக்கும்தான் என்பதை நன்கு அறிவார். அதனால், நுஆவும் அவரது தேசிய காங்கிரஸும் இணைவது மிக முக்கியம் என உணர்ந்துள்ளார். அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந் துறையில் நுஆவும் தேசிய காங்கிரஸும் இணைந்து தான் போட்டியிட்டன. அதேபோல் நடைபெறப் போகின்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, நிந்தவூர் மற்றும் அட்டாளைச்சேனை உள்ளூராட்சி சபைகளுக்கும் இணைந்து போட்டியிடுகின்றன. 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும்இணைந்து போட்டியிட்டனர்.

அந்த வகையில் எட்டப்பட்ட ஓர் இணக்கம் இந்த இணைவுக்கும் பயன்படுத்தப்படும் என நம்பப்படுகிறது. இருப்பினும், ஒருவரை யொருவர் விஞ்சிவிடாத வண்ணம் இருதரப்பினரும் செயற்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கவ னிக்கத் தக்க ஒரு விடயம் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடைபெறலாம் என எதிர் பார்க்கப் படுவதால், அவ்வாறு நடந்தால் தான் எப்படியும் தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்ற முயற்சியில் இருக்கிறாராம் நுஆவின்

**எம்.ஐ.முபாறக்**

செயலாளர் நாயகம் எம்.ஐ.றபீக்.

அந்தத்திட்டத்தை மனதில் வைத்துக்கொண்டே அவர் செயற்படுகிறார் என்றும் அதற்கமைவாகவே நுஆவையும் தேசிய காங்கிரஸையும் இணைக்க முயற்சி செய்து வருகிறார் என்றும் அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த வார மளவில் இந்த இரு கட்சிகள் இணைவது பற்றி பகிரங்க அறிவிப்பு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.


## வீடு விற்பனைக்கு

கொழும்பு - 12, புதுக்கடையில் நான்கு பக்க மதில் சுவருடன் தனிவீடு ஒரு மாடியுடன், 4 படுக்கை அறைகளுடன், 3 குளியல் அறைகளுடன் 2 வாகன தரிப்புகளுடன் 12 பேர்ச்சஸ் காணியில் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு**

☎ 2431935
2473051
2433900

## தேவை

நல்ல ஆரோக்கியம் உள்ள ஒரு வயோதிபரை பராமரிக்க தக்க நடுத்தர வயதுடன் பெண் ஒருவர் தேவை. அவரைப் பற்றிய சகல விவரத்துடன் விண்ணப் பிக்கவும்.

Advt 101
Sudar Oli
85, Mahawatte Rd,
Colombo - 14.

## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

2006 ஏப்ரல் 21 - 26 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

2006 மே 06 - 07
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

2006 மே 9 - 11
A.S.N. சுற்றுலா விடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

மே 07 - 13, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## சொல்வது ஒன்று செய்வது வேறொன்று

முரண்பாடுகள் ஜனநாயக ரீதியிலும் பேச்சுவார்த்தை மூலமும் தீர்க்கப்படவேண்டும் என்பதே எமது அசையாத நம்பிக்கை என்று ஜனாதிபதி தலைமையில் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போதைய நெருக்கடியை கையாளுவதில் அரசு முற்றிலும் முரணாகவே செயற்படுகிறது. சொல்வது ஒன்று செய்வது வேறொன்று.

அரசின் இத்தகைய நிலைப்பாடு காரணமாக முழு தென்னிலங்கையுமே குழப்பத்தில் இருந்து வருகிறது.

நாட்டின் பாதுகாப்பு விடயங்களை கோதாபய தாம் நினைத்தபடி கையாண்டு வருகிறார். சாமாதானச் செயலகம் போர்ச் செயலகமாக மாறி வருகிறது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதத்தில் அரச ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன.

இரு தரப்பினரையும் எப்படியாவது ஜெனிவா பேச்சு மேசைக்கு கொண்டுவர வேண்டும் என்பதில் சர்வதேசம் முனைப்பாக இருந்து வருவது நன்கு தெரிகிறது. ஆனால் உள்நாட்டில் இயல்பு நிலைமை உருவானால் மாத்திரமே இது சாத்தியம் என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்ளத் தவறுவது தான் வேதனை தருகிறது.

ஜெனிவாவில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் சமாதான முயற்சிகள் குழம்பிப் போனதற்கு அரச படைகளுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக் குழுக்கள்தான் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை. ஒட்டுக்குழுக்களை அரவணைத்துக் கொண்டு அரசாங்கம் ஒரு போதும் பேச்சு மேசைக்கு வர முடியாது.

'ஒட்டுக்குழுக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லை. புலிகளின் பகுதியில் தான் அவை இயங்குகின்றன' என்று அரச தரப்பு அடித்துக் கூறியது பொய் என்பது வெலிகந்தையில் ஒட்டுக் குழுக்கள் மீது புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் மூலம் பகிரங்கமாக்கப்பட்டு விட்டது. ஒட்டுக்குழுக்களுக்கு உதவ வந்த இராணுவத்தின் கப்டன் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆகவே, அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக்குழுக்கள் இயங்குகின்றன. அவை இலங்கை இராணுத்தின் உதவியுடன் இயங்குகின்றன என்பது நிருபணமாகி இருக்கின்றது. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக் குழுக்கள் இல்லை என்று படைத் தரப்பு இனியும் கூறமுடியாது.

வெலிக்கந்தையில் நடத்தப்பட்ட தாக்குதல் முன்னரே எதிர்பார்க்கப்பட்டது தான். ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களை களைவதற்கு அரசாங்கம் தவறினால் புலிகள் அதைக் களைவர் என்று புலிகள் தரப்பு ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்தது. தற்பொழுது முதலாவது பெரிய அடி கொடுக்கப்பட்டுள்ளது. அரச படையினருடன் சேர்ந்து 18இற்கும் மேற்பட்டோர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆகவே ஜெனிவாவில் நடைபெற்ற முதலாது சுற்றுப் பேச்சில் இணக்கம் கண்டவாறு ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களை அரசு களைந்திருந்தால் இத்தகைய அனர்த்தங்களைத் தவிர்த்திருக்கலாம். ஜெனிவாவில் இரண்டாவது சுற்றுப் பேச்சும் நடந்தேறி இருக்கும்.

அரசு விட்ட தவறு காரணமாக தற்பொழுது தினமும் உயிர்ப்பலி எடுக்கப்பட்டு வருகிறது. கொழும்பில் தற்கொலை குண்டுத்தாக்குதல், சம்பூர் பகுதியில் கிபீர் விமானம் குண்டுவீச்சு, வெலிகந்தையில் ஒட்டுக்குழு (கருணாகுழு) முகாம் தாக்கி அழிப்பு என்று நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து வருகிறது.

தற்போதைய கடினப் போக்கு குறைந்து சுமுகமான சூழ் நிலை உருவாகும் என்பதை சிந்தித்தும் பார்க்க முடியாது உள்ளது.

கிழக்கில் உள்ள புலிகளின் பொறுப்பாளர்களும் தளபதிகளும் வன்னி சென்று திரும்ப அரசு கடல் விமானம் வழங்கும் யோசனையை புலிகள் ஏற்றுக் கொண்டாலும் சுமுக நிலை திரும்பும் சாத்தியம் ஏற்படப்போவதில்லை. இதனால் மட்டும் நம்பிக்கையை கட்டி எழுப்ப முடியாது. ஒட்டுக் குழுக்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதால் மட்டுமே தற்போதைக்கு இயல்பு நிலை திரும்ப முடியும்.

# போரா? சமாதானமா?

# தெரிவு மஹிந்தரிடம்

ஜெனிவாப் பேச்சுகள் முடிவடைந்த பின்னர் ஏப்ரல் மாதம் முடியும் வரை அரச படைகளும் ஒட்டுக் குழுக்களும் இணைந்து நடத்திவரும் கண்மூடித் தனமான தாக்குதல்கள் காரணமாக 103 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள.

### படுகொலைகள்

இப்படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டு நான்கு விதமாக நிகழ்த்தப்பட்டு



வருகின்றன.

1.இராணுவத்தினரின் நேரடித் துப்பாக்கிச் சூடு.

2.இராணுவத்தினரின் துணையுடன் ஒட்டுக்குழுக்கள் படுகொலை செய்வது.

3.பொது மக்களை இலக்குவைத்து கிளைமோர் கண்ணிவெடிகளை இயக்குவது, பொது மக்கள் குடியிருப்புகள் மீது விமானக் குண்டுவீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்துவது.

4.தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலைப் பகுதிகளில் ஊடுருவி கிளைமோர் தாக்குதலையும், நேரடித் தாக்குதலையும் நடத்துவது.

இராணுவம் மற்றும் ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்தி அரச தரப்பு செயற்படுத்திவரும் மேற்படி கொலைத்திட்டம் காரணமாகவே, ஜெனிவா முதற்சுற்றுப் பேச்சுகள் நடந்து முடிந்த பின்னர் இன்றுவரை 103 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் படுகொலைகளில் தமிழ் சமூகத்தின் மூன்று முக்கிய பிரமுகர்களும் அடங்குகின்றனர். படுகொலை செய்யப்பட்ட இம் மூன்று பிரமுகர்களும் வடக்கு - கிழக்கின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக ரீதியான தலைவர்கள் உருவாவதை அழித்தொழிக்கும் நோக்கில்தான் இவர்களது படுகொலைகள் அரங்கேறி உள்ளன.

### இது நியாயமா?

அது மட்டுமா? முப்படைகளும் இணைந்து மூதூர் கிழக்கு கிராமங்களில் மேற்கொண்ட கோரமான விமானத் தாக்குதல்கள் மற்றும் ஷெல் வீச்சுகள் காரணமாக மூவாயிரத்து அறுநூறு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இருபதாயிரம்பேர் இதுவரை இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகள் இராணுவ இலக்குகளையும் இராணுவத்தினரையும் தாக்குகின்றனர் என்று கூறிக்கொண்டு அந்தத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக அப்பாவி மக்கள் மீதும் அவர்கள் வசிக்கும் குடிமனைகள் மீதும் அரச இராணுவம் கண்மூடித்தனமாக குண்டு மற்றும் ஷெல் மாரி பொழிவதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்.

இந்நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு எவ்விலை கொடுத்தேனும் பாதுகாக்கப்படும் என்றும் இலங்கை அரசின் இறைமை துண்டாடப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாதென்றும் கூறும் அரசு தனது ஆளுகைக்கும், இறைமைக்கும் உட்பட்ட பகுதியில் வாழும் மக்களைப் படுகொலை செய்ய அனுமதிப்பதும் அவர்களை வாழ்விடங்களற்ற அநாதைகளாக்குவதும் ஜனநாயகமாகுமா?

இப்போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ்

* புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்
* அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்

என வரையறுக்கப்பட்ட எல்லைகளும் அந்த எல்லைகளில் பல மைல் நீளத்துக்கு புலிகளின் நிலைகளும் காணப்படுகின்றன. புலிகளின் தாக்குதலுக்கு பதில் தாக்குதல் என்று கூறி அரச படைகள் இந்நிலைகள் மீது தமது தாக்குதல்களை நடத்தி தமது பக்க நியாயத்துக்கு வலுச்சேர்க்க முடியும்.

அதைவிடுத்து ஒட்டுமொத்தமாக ஒன்றுமறியாத தமிழ் மக்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கண்மூடியுள்ள சர்வதேச சமூகம்

இவ்வாறாகப் பொதுமக்களைப் படுகொலை செய்யும், பணயம் வைக்கும் தென்னிலங்கையின் நடவடிக்கைகள் தான் பயங்கரவாதம் என அரசு கூறும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்களை பலவந்தப்படுத்தியது என்பதை தென்னிலங்கையும் சர்வதேசமும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் தென்னிலங்கையோ அல்லது சர்வதேசமோ அதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த 28ஆம் திகதி ஒஸ்லோவில் இடம் பெற்ற இணைத்தலைமை நாடுகளின் விசேட மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை இலங்கையில் உருவாகிவரும் மோசமான நிலைகுறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டிருப்பதுடன் அவற்றை நிறுத்துமாறு அவசர வேண்டுகோளையும் விடுத்துள்ளது. எந்த ஒரு வன்முறைச்சம்பவத்தையும் அறிக்கை குறிப்பிட்டுக் காட்டவில்லை.

இவ்வாறு அரசாங்கத்தை தடவிக் கொடுக்கும் வகையில் மெத்தனப் போக்குடன் சர்வதேச சமூகத்தால் வெளியிடப்படும் அறிக்கைகள் தமிழ்த்

**சுபாஷ்**

தலைமையையும் அவர்களின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் மக்களையும் பலத்த ஏமாற்றத்துக்குள்ளாக்கி உள்ளன.

"இலங்கை அரசு பகிரங்கமாக போர்ப் பிரகடனம் செய்து மட்டுப் படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களைப் படுகொலை செய்ததுடன் ஆயிரக் கணக்கானவர்களை நடுத்தெருவிலும் நிறுத்தி வைத்துள்ளது. அரசின் இந்த [illegible] கண்டிக்க சர்வதேசம் தவறிவிட்டது.

இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து இந்தக் கொடூரங்களைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டது. இது எமக்கும் தமிழ் மக்களுக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை - அரச பயங்கரவாதத் தாக்குதல்களை - சர்வதேச சமூகம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு சீர்குலைக்க முயற்சிப்பதையும் தமிழ் மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டு இருப்பதையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது." - என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கவன ஈர்ப்புச் செய்துள்ள இந்த விடயத்தை சர்வதேசம் புரிந்து கொள்ளுமா?

கொழும்பில் இராணுவத்தளபதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலை முண்டியடித்துக்கொண்டு தீவிரமாகக் கண்டித்த உலக நாடுகள் அந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக அப்பாவித் தமிழ் மக்கள் மீது அரச தரப்பு கட்டவிழ்த்துவிட்ட காட்டுத்தர்பார்

> மஹிந்தர் சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்கப்போவதாகத் தொடர்ந்து கூறி வருகிறாரே அன்றி அது தொடர்பாக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. பேரினவாத அரசியல் கலாசாரத்தின் பின்னணியில் வளர்ந்த அவரால் தமிழ் மக்களுக்கு கௌரவமான சமாதானத்தை எப்படி ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

பற்றியும் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்கள், அழிவுகள் பற்றியும் மௌனம் சாதிப்பது ஏன்? கிழக்கில் சம்பூர் பகுதியில் இடம்பெற்ற அரச பயங்கரவாதத்தை சர்வதேச சமூகம் கண்டும் காணாததுபோல் இருப்பது தமிழர் தரப்புக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சர்வதேசத்தின் இந்தப்போக்கு இரண்டு விபரீத விளைவுகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துவிடும்.

1.தமது உரிமைப்போராட்டத்தில் சர்வதேசம் நியாயமான போக்கை கடைப்பிடிக்கும் என்ற தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு வெறும் பகற்கனவு ஆகிவிடும். சர்வதேச சமூகம் நம்பிக்கை மோசடி செய்துவிட்டது என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் தள்ளப்படும்போது பிற வழிகளை அவர்கள் நாடவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

2.அரச பயங்கரவாதத்தை தட்டிக் கொடுப்பதுபோல சர்வதேசம் நடந்து கொள்ளுமானால் அரசாங்கம் தனது கண்மூடித்தனமான இனவெறித்தாக்குதலைத் தொடர்வதற்கு அது உந்து சக்தியாக அமையும்.


எனவே, சர்வதேச சமூகம் தனது

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக தேர்தல் களம் பரபரப்பு

# வாக்குறுதிகள் தடல் புடல்

தமிழகத் தேர்தலில் கட்சிகளின் வாக்குறுதிகளை நினைத்தால் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. ஜெயலலிதா ஒருபுறம் வக்குறுதிகளை அள்ளிவீச கருணாநிதியோ தி.மு.க. வென்றால் குடும்பத்துக்கு ஒரு வர்ணத்



தொலைக்காட்சிப் பெட்டி இலவசம் என்று அறிவித்திருக்கிறார்.

மின்சாரம், குடிநீர், வீதிகள் என்று உட்கட்டமைப்பு வசதிகள் எவ்வளவோ செய்யப்படவேண்டியிருக்க தொலைக்காட்சிப்பெட்டி தேவைதானா என்று நையாண்டி செய்கின்றனர் எதிர்க்கட்சிகள். இந்த வாக்குறுதிகள் ஒரு நாகரிகமடைந்த சமூகத்தை நோக்கிவிடுக்கப்பட்டவை அல்ல என்பது அவர்களது வாதம். வழக்கமாக கல்வியறிவற்ற பாமர கிராம மக்களுக்கு அ. தி. மு. கவில் பிரியம் அதிகம். தி. மு. கவுக்கு வாக்களிப்போர் படித்த, நடுத்தர மற்றும் மேல் நடுத்தர, மேல் வகுப்பினர் தான். இந்தமுறை பாமரர்களையும் குறிவைக்கிறது தி. மு. க. அதனுடைய நிர்ப்பந்தம் அது. ஆளும் கட்சிக்கு எதிராக பலமான அலை ஏதும் வீசாத நிலையில் தி. மு. கவுக்கு வெற்றி என்பது கிடைத்தாலும் இலகுவாகக் கிடைத்துவிடாது என்று சொல்லப்படுகிறது.

ஒருவேளை கூட்டணி ஆட்சியைக்கூட ஏற்க நேரலாம். வைகோவின் சுறுசுறுப்பு தமிழக அரசியலில் எவரிடமும் இல்லை. இது தி. மு. கவுக்கு வயிற்றைக் கலக்கும் சங்கதி என்பதில் சந்தேகமில்லை. அது மட்டுமின்றி வைகோவின் தாக்குதல் கருணாநிதி குடும்பத்தை நேரடியாக இலக்குவைப்பதுதான் பெரிய சிக்கல். மாறன் குடும்பமும் கருணாநிதி குடும்பமும் டி. வி. ஆதிக்கத்தைக் கொண்டிருப்பது, கேபிள் டி. வி உரிமத்தை வேறு எவருக்கும் வழங்காதிருப்பது எல்லாமே தாக்குதலுக்கான விஷயங்களாகியுள்ளன. வர்ணத் தொலைக்காட்சியை இலவசமாக வழங்குவது என்பது, தமது கட்சியின் டி. வி. ஆதிக்கத்தினூடாக மக்களை மூளைச்சலவை செய்யவே என்று வைகோ கூறிய குற்றச்சாட்டுக்கு கருணாநிதி குடும்பத்திடம் தெளிவான பதில் இல்லை. அந்தக் குடும்பம் சென்னை விமான நிலையத்தை வாங்குவதற்குக்கூட முயற்சிப்பதாக வைகோ கூறியுள்ளார். போகிற போக்கில் முழுத் தமிழகத்தையும் கருணாநிதி குடும்பம் விலைபேசி வாங்கிவிடும் என்ற பாணியில் பிரசாரம் தொடர்கிறது. ஜெயலலிதா ஊழல் செய்து அரசுப்பணத்தை ஏப்பம் விட்டார் என்று குற்றஞ்சாட்டிய காலம்போய் இப்போது கருணாநிதி தமிழகத்தை விலைபேசி வாங்கப் போகிறார் என்று கூறப்படுவது விந்தைதான்.

*அ. தி. மு. க. அனுதாபிகள் எம். ஜி. ஆர். 'ஏழைத்தோழன்' என்று எண்ணுவதால் கருணாநிதி குடும்பம் பணத்தில் மிதக்கிறது என்ற பிரசாரம் அந்த ஏழைகள் மத்தியில் எடுபடலாம். மொத்தத்தில் வைகோவின் அதிரடிக்குப் பதிலின்றி கருணாநிதி கலங்கிப்போயிருப்பது உண்மைதான்.*

அ. தி. மு. க. அனுதாபிகள் எம். ஜி. ஆர். 'ஏழைத்தோழன்' என்று எண்ணுவதால் கருணாநிதி குடும்பம் பணத்தில் மிதக்கிறது என்ற பிரசாரம் அந்த ஏழைகள் மத்தியில் எடுபடலாம். மொத்தத்தில் வைகோவின் அதிரடிக்குப் பதிலின்றி கருணாநிதி கலங்கிப்போயிருப்பது உண்மைதான்.

இதையெல்லாம் ஓரமாக நின்று வேடிக்கை பார்க்கிறார் ஜெயலலிதா. சென்றமுறை முதல்வராக இருந்தபின்னர் நடந்த சட்டசபைத்தேர்தலில் தனது தொகுதியான பர்கூரில் கூட ஜெயலலிதா தோற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தடவை அவ்வாறு இவர் சொந்தத் தொகுதியில் தோற்குமளவுக்கு இல்லை. ஆண்டிப்பட்டியில் போட்டியிடும் அவர் அங்கு வெற்றிபெறுவது உறுதி என்பது தெளிவாகிவிட்டது. மற்றைய இடங்களிலும் அவ்வாறே படிப்படியாக வெற்றியை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை அவர் கிரமமாக செயற்படுத்தி வருகிறார். தி. மு. கவினர் விழிப்பாக இல்லாவிட்டால் வெற்றிக்கனி கைநழுவிப் போய்விடும் வாய்ப்பு நிச்சயமாக இருக்கவே செய்கிறது.

இதற்கிடையில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் நடைமுறைகள் முடிவடைந்ததையடுத்து யார் யார் எந்தத் தொகுதிகளில் போட்டியிடுகின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. மிகக் கூடுதலாக விஜய்காந்தின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் 225 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதற்கடுத்து பி. ஜே. பியும், அ.தி.மு. கவும் களத்திலுள்ளன. தி. மு. க. வெறும் 126 தொகுதிகளில் தான் போட்டியிடுகிறது. இவ்வாறே வேறெந்தத் தேர்தலிலும் இல்லாதவாறு சினிமா நடிகர் பட்டாளம் தேர்தல் பிரசாரத்தில் இறங்கியுள்ளது. நீண்டநாள் தி. மு. க. அனுதாபிமான நடிகை ராதிகாவும் கணவர் எம். பி. சரத்குமாரும் அ. தி. மு. கவில் சேர்ந்துள்ளனர். பாக்யராஜ், டி. ராஜேந்தர் ஆகியோர் மீண்டும் தி. மு. க அணிக்கு வந்துவிட்டனர். திரைப்படத்தயாரிப்பாளர் சங்கத் தலைவர் அ. தி. மு. க. பக்கம் பாய்ந்துள்ளார்.

இப்படி சினிமாப் பிரபலர்களும் தம்மாலும் அரசியல் முடியும் என்று கூறிக்கொண்டு மீண்டும் அரசியல் மேடைக்கு பிரவேசித்திருப்பது தேர்தல் பிரசாரத்தின் சூட்டை அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர், வீடுதேடிவரும் தொலைக்காட்சி விநியோக உரிமத்தின் ஒரு பகுதியை தனக்குத் தரவேண்டுமென டாட்டா நிறுவனத்தை நிர்ப்பந்தித்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது சட்ட விரோதமென வைகோ உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குரலெழுப்பியுள்ளன. கருணாநிதி குடும்பத்தை தாக்கும் வைகோவின் முயற்சிக்கு இக்குற்றச்சாட்டு புதிய

**எஸ்.சுரேந்திரஜித்**

உத்வேகம் தந்துள்ளது.

மாறன் மந்திய அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்ய நேரிட்டால் அது தி. மு. கவுக்கு புதிய பின்னடைவாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் தென் மாவட்டங்களில் அ. தி. மு. க அணி தனது வெற்றியை உறுதிப்படுத்தும் நிலையில் உள்ளது. வைகோவின் தளமும் தென் தமிழகமே என்பதால் தி. மு. கவுக்கு நெருக்கடிதான். தி.மு. கவின் கூட்டாளிகளில் பா. ம. கவுக்கு தென் தமிழகத்தில் செல்வாக்கு அவ்வளவு கிடையாது. காங்கிரஸ் கட்சிக்கு ஆங்காங்கு தென் தமிழகத்தின் மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஓரளவு செல்வாக்குண்டு என்பது மட்டுமே ஆறுதல் தரும் விஷயம். கருணாநிதி தரப்பு தேர்தல் பிரசாரத்தை இன்னும் உஷாராக நடத்தாவிட்டால் வெற்றி தோல்வியாக மாறக்கூடும். ஜெயலலிதா வெற்றிபெற்றாலும் வைகோவை மீண்டும் சிறையில் போடமாட்டார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஏறி முடிந்தபிறகு ஏணியை உதைப்பது ஜெயலலிதாவுக்கு வழக்கமே. வைகோ இதனை நன்கு அறிவார். எனினும் வேறு வழியின்றியே அவர் கூட்டணி சேர்ந்துள்ளார் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

"என்ன சின்னாச்சி கனடாவிலை தடையாம்?"

சின்னாச்சியைச் சீண்டியபடியே அரட்டையை ஆரம்பித்தான் லோகன்.

"என்னத்துக்கு, கனடாவிலை கடலை விக்கிறதுக்கே தடை?" சிரிக்காமல் பதிலடிகொடுத்தாள் சின்னாச்சி.

"சின்னாச்சி, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கனடா நாட்டிலை தடையெல்லே! அதைத்தான் லோகன் சொல்லுறான்" நண்பனுக்கு உதவினான் டானியல்.

"அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் இப்ப இங்க கடலைவிக்கக்கூடாது என்று தடை வந்தால், இங்கேயிருக்கிறவையின்ரை ஆதரவு இருக்கேக்கை அவைக்கு கடலை விக்கிறது கஷ்டம் இல்லை. என்ன இப்பமாதிரி வெளிப்படையாக விற்க ஏலாதுதான். ஆனால் வேற வழி ஆயிரமிருக்கு. தடைசெய்யவேண்டாம் என்று முதலிலை கதைச்சுப்பாக்கிறதுதான். அதுக்கும் ஏலாதென்று தடையைப் போட்டால் கடலை விக்கிறதுக்கு வேற வழியைப் பார்க்கிறதுதானே! அதை விட்டிட்டு இத்தனை வருஷமாக வித்த கடலை வியாபாரத்தை இவையின்ரை கண்டறியாத தடைக்குப் பயந்து கைவிட்டுவேனோ?" கோபத்தைக் காட்டாமலே பேசித்தீர்த்த சின்னாச்சிக்கு மூச்சு வாங்கியது. ஆனாலும் விடாமல் "தம்பி லோகன், நீர் ஏதோ புலிகளுக்கு தடைகிடை என்று ஏதோ சொன்னீர். அதுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை சரியோ" என்று நமுட்டுச் சிரிப்புடன் முடித்தாள்.

இவர்களது அரட்டையை ரசித்துக்கொண்டிருந்த முதியவர்கள் இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

"தம்பிமார் கிழவி பார்க்கிறதுக்கு நெளிஞ்ச பேணி மாதிரி இருக்கென்று கதை விடவேண்டாம். பழைய பேணி காலில் குத்தினால் ஏற்பாக்கிப்போடும். கவனம்" சிரிப்பு மாறாமல் சொன்னார் விநாசியர்.

"லோகன், உந்த வெளிநாடுகளின்ரை தடைகள் வன்முறை, தீவிரவாதம் என்று அடிப்படையிலை போடப்படுகிறதென்றே நினைக்கிறீர். ...தெல்லாம் அந்தந்த நாட்டின்ரை ...நல நோக்கத்தோடை சம்பந்தப்பட்ட ...ஷயங்கள் பாருங்கோ" விஷயத்துக்கு ...ந்தார் மாஸ்டர்.

"ஏன் மாஸ்டர்? பயங்கரவாதப் பட்டியலிலை இடம்பெறும் அமைப்புகளைத்தானே தடைசெய்யினம்?" கேட்டான் லோகன்.

"ஓம்தம்பி, அப்பிடித்தான் சொல்லுகினம். ஆனால் பயங்கரவாதம் என்று எதைச் சொல்லுகினம் என்பதுதானே பிரச்சினை."

"மாஸ்டர், எதிர்த்தரப்பை கொல்லுகிறதை தீவிரவாதம் என்று வரையறுத்து, சுதந்திரப் போராட்டங்களையுமெல்லே பயங்கரவாதமாக்கியிருக்கினம்" என்றார்விநாசியர்.

"இதிலைதான் அவையவையின் வசதிக்கு ஏற்றமாதிரி வரையறுக்கினம்" என்று கூறிய மாஸ்டர், கைகளை பின்புறம் ஊன்றியபடியே கால்களை நீட்டிக்கொண்டு பேசைத் தொடர்ந்தார்....

"1975ஆம் ஆண்டு அமெரிக்காவிலை இருந்த பிரிட்டிஷ் குடியேற்றங்கள் இணைந்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக வாஷிங்டனை தளபதியாக்கி சுதந்திரப் போராட்டத்தை நடத்தினது எல்லோருக்கும் தெரிந்த கதைதானே!"

"அமெரிக்கச் சுதந்திரப் போர் என்று சரித்திரத்திலை இடம்பெற்ற அந்தப் போர் எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதானே!" தனது வரலாற்றுப்பாட அறிவை காட்டினான் டானியல்.

"ஓம் தம்பி அப்போது 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி. உளவாளிகள் ஆணைக்குழு என்று ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் அமெரிக்காவின் அப்போதைய அறிவு ஜீவிகளான ஜோன் ஆடம்ஸ், தொமஸ் ஜெபர்சன், எட்வேட் ருட்லெட்ஜ், ஜேம்ஸ் வில்சன், ரொபேர்ட் லிவிங்ஸ்டன் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தக் குழு அமெரிக்கக் காங்கிரஸுக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது" என்று கூறியபடியே சால்வையால் வியர்வையைத் துடைத்த மாஸ்டர் மேலும் தொடர்ந்தார்....

"அந்த அறிக்கையிலை 'அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்துக்கு ஊறுவிளைவிக்கும், எதிரிப்படைக்குத் தகவல் கூறும் எவரானாலும் மரணமே தண்டனை' என்று கூறப்பட்டது. இதைவைச்சு பரலோகத்துக்கு அனுப்பப்பட்டவை ஏராளம்.தங்கடை சுதந்திரத்துக்காகப் போராடும்போது இப்பிடிச்செய்த அமெரிக்கா இன்றைக்கு வேறயாராவது இப்பிடிச் செய்யும்போது தீவிரவாதம், பயங்கரவாதம் என்று கூச்சல்போடும். இதுதான் தம்பி சர்வதேசம்."

நீண்டநேரம் பேசியதால் மூச்சு வாங்கினார் மாஸ்டர்.

"இதிலை இன்னொரு விஷயமும் இருக்காம். கனடாவிலை இருந்து வந்த ஒருவர் சொன்னவர்." வழக்கம்போல பீடிகையுடன் ஆரம்பித்தார் விநாசியர்.

"அண்ணை இழக்காமல் சொல்லுங்கோ!" என்றான் லோகன்.

"இப்ப மூன்றாம் உலக நாடுகளிலை இருந்து முன்னேறிய நாடுகளுக்கு அகதிகளாக அரசியல் தஞ்சம் பெற்றவர்களாக நிறையப்பேர் போய்க் குடியேறியிருக்கினம். இவை அந்த நாட்டுக்காரராக மாறாமல், தங்கடை இன, கலாசாரத் தனித் தன்மையைக் காப்பாற்ற தனித்துவமாக இருக்கினம். இது மேற்கத்தைய நாடுகளுக்கு பிரச்சினைகளைத் தருகுதாம்."

"சரியாய்ச் சொன்னீங்கள் விநாசியண்ணை! கிட்டடியிலை டென்மார்க்குக்குப்போட்டுவந்த பத்திரிகையாளர் ஒருவர் சொன்னவர், இஸ்லாமிய இறைதூதர் முகமதுவின் கேலிச்சித்திரத்தை அங்குள்ள பத்திரிகை வெளியிட்டு பிரச்சினை ஆனது. அப்ப அங்குள்ள சிற்றுண்டிச்சாலையொன்றிலை வேலைசெய்யிற பலஸ்தீன இளைஞனை, 'முகமது கேலிச்சித்திரம் பற்றி என்ன நினைக்கிறீர்' என்று பத்திரிகையாளர் கேட்டாராம்.அதுக்கு அந்த இளைஞன் 'டென்மார்க் காரர் யுத்தம் என்றால் நாங்களும் அதற்குத் தயார்' என்று கூறினாராம்." கேட்டதைக் கூறினான் லோகன்.

"பலஸ்தீன இளைஞன் என்றால் அப்பிடித்தானே சொல்வான்." குறுக்கிட்டான் டானியல்.

"அதிலைதான் விஷயமிருக்கு. அந்த இளைஞனின் பெற்றோர் தனித்தனியே டென்மார்க்குக்கு வந்து அங்குதான் திருமணம் செய்தவர்கள். அந்த இளைஞன் டென்மார்க்கில் பிறந்தவன்.அந்த நாட்டைவிட்டு வெளியே போகாதவன். பலஸ்தீன மண்ணை கண்ணால் கூடப் பார்க்கவில்லை. டென்மார்க்கில் அந்த அரசின் உதவியுடன் படித்து பல்கலைக்கழகத்தில் கற்றுவரும் இளைஞன், பலஸ்தீனன் என்ற அடையாளத்துடன் டென்மார்க்காரர் யுத்தத்தை விரும்பினால் நாங்களும் தயார் என்று கோபமாகச் சொல்லியிருக்கிறான்." என்று முடித்தான் லோகன்.

'இதுதான் தம்பி மேற்கத்தைய நாடுகளுக்குப் பிரச்சினை. புலம்பெயர்ந்து வந்த மக்கள் தங்கடை அடையாளங்களை இழக்காமல் ஒரு தனி இனமாகவே தொடர்ந்து தனித்துவத்துடன் வாழ முற்படுகினம். இது அந்த நாட்டு வெள்ளையர்களுடன் முறுகல், பிணக்குகள் ஏற்படக் காரணமாகுதாம்."

"ஓம் விநாசி, சில மாதங்களுக்கு முதல் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஆபிரிக்காவிலிருந்து புலம் பெயர்ந்து குடியேறினவர்கள் செய்த கலவரத்திலை நகரமே சின்னாபின்னப்பட்டுப் போனதெல்லோ!" என்று கூறினார் மாஸ்டர்.

"அதுதான் மாஸ்டர், இப்பிடி புலம்பெயர்ந்த மக்களை தனித்துவத்தோடை அடையாளப்படுத்தும் சக்திகளை தங்கடை மண்ணிலை தடைசெய்யிறதன்மூலம் அந்த மக்கள் கூட்டத்தை அந்த நாட்டுடன் கலக்கியடிக்கிறதுக்கும் இந்த மாதிரித்தடைகள் பயன்படுத்தப்படுகிறதாம் என்று அந்தக் கனடாக்காரர் சொல்லுகிறார்."

கூறி முடித்துவிட்டு விநாசியர் எழவே மாஸ்டரும் எழுந்தார்.

அவ்வழியே பாட்டுடன் ஐஸ்கிறீம் வான் போனது.

"ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும்
ஆதவன் மறைவதில்லை....
ஆணைகளிட்டே யார் தடுத்தாலும்
அலைகடல் ஓய்வதில்லை....
ஆடிவா.... ஆடிவா....ஆடிவா."



# அரட்டையும் அலசலும்

-பரமரன்-

## தமிழக தேர்தல் களம்



தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க, தி.மு.க உள்ளிட்ட 34 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மொத்தம் 2586 பேர் போட்டியிடுகின்றனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் வரலாற்றில் இந்தத் தேர்தலில் மிகவும் அதிகபட்சமாக 160 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இத் தேர்தலில் மொத்தம் 1222 சுயேச்சை வேட்பாளர்களும் களத்தில் குதித்துள்ளனர்.

தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் ஸ்டாலின் போட்டியிடும் ஆயிரம் விளக்குத் தொகுதியில் அதிக பட்சமாக 26 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மிகக் குறைவாக ஓரத்தநாடு தொகுதியில் 4 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

## இந்தியப் பிரதமர் தமிழகத்தில்

இந்தியப் பிரதமர் மன்மோஹன் சிங் இம்மாதம் 4 ஆம் திகதி தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் செய்கிறார்.

தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் சூறாவளிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். புதுடில்லித் தலைவர்களும் தமிழகத்தில் குவிந்தவண்ணம் உள்ளனர்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி கடந்த 25 ஆம் திகதி சென்னை, மதுரை, புதுவை ஆகிய இடங்களில் மூன்று கூட்டங்களில் பேசினார்.

மேமாதம் முதல் வாரத்தில் மீண்டும் தமிழகம் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 4 ஆம் திகதி தமிழகம் வரும் பிரதமர் மன்மோஹன் சிங் பல கூட்டங்களில் பங்கேற்றுப் பேசுகிறார். அவரது பிரசார நிகழ்ச்சி நிரலை தமிழக காங்கிரஸ் தயாரித்து வருகிறது.

## கருணாநிதி ஆட்சியில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு

தமிழகத்தில் கருணாநிதி ஆட்சிக்கு வந்தவுடன் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்த முயற்சிப்போம் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

திண்டிவனம் பகுதியில் ஊடகவியலாளர் மத்தியில் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே டாக்டர் ராம்தாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

இலங்கை அரசுக்கு சரியான நிர்ப்பந்தங்களைக் கொடுத்து ஈழத்தமிழர்கள் சம உரிமையுடன் சமத்துவமாக வாழ்வதற்கும் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கவும் இந்திய அரசு முயற்சி எடுக்க வேண்டும். இலங்கை விடயத்தில் உலக நாடுகள் தலையிடவேண்டும் என்று தெரிவித்தார்.

## கூட்டணி ஆட்சிக்கு மக்கள் தயாரில்லை

வைகோ

கூட்டணி ஆட்சிக்கு தி.மு.க தயாராக இருக்கலாம்.ஆனால் அதற்கு தமிழக மக்கள் தயாராக இல்லை என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ தெரிவித்தார்.

கபிலர் மலை தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் டி.என்.குருசாமியை ஆதரித்து பரமத்திவேலூரில் நடந்த கூட்டமொன்றில் பேசும்போதே இவ்வாறு கூறினார் வை.கோ.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி ஏற்படும் என தமிழக முன்னாள் காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் கூறியபோது அவரைக் கிண்டல் செய்த தி.மு.க தலைவர் இப்போது தோல்விப் பயத்தால் கூட்டணி ஆட்சிக்கு தயார் என்று கூறுகிறார். அவர் தயாராக இருக்கலாம். ஆனால் தமிழக மக்கள் தயாராக இல்லை" என்றார்.

# பிரிவிக் கவுன்ஸில் வரை சென்று வென்ற கோடீஸ்வரன் வழக்கு!

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு , தொடர் அரசியல் கட்டுரையாக 'சுடர்ஒளி' வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

GCSU எனப்படும் அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கத்தைப் போலன்றி தமிழ் அரச ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் (AES) தனது கோரிக்கைகளை முன்வைத்து ஒருபோதும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை.பிரச்சினை ஏற்படும்போது சந்திப்புகள், பேச்சுவார்த்தைகள் போன்ற நடவடிக்கைகளில் மட்டுமே அதனால் இறங்கமுடிந்தது. இதுவும் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பொறுத்தே அமைவதாய் இருந்தது. அரசாங்கத்தின் பிரதிபலிப்புகள் உள்நோக்கம் கொண்டவையாக இருந்திருக்க முடியும். ஏனென்றால் பிரச்சினைகள் யாவும் அரசின் திட்டமிடப்பட்ட உருவாக்கங்களே.

தொழில் சூழ் நிலைகள், வேலைக்கமர்த்தும் நிபந்தனைகள், பொதுச் சேவை மற்றும் நிதி தொடர்பான விதிமுறைகள்,ஒய்வூதிய நிகழ்ச்சித் திட்டம் போன்ற அரசாங்கசேவை தொடர்பான அனைத்துமே ஒரு தலைப்பட்சமாக சிங்கள அரச ஊழியர்களுக்கு சார்பாக மாற்றப்பட்டன. சிங்களம் மட்டும் சட்டத்துக்குக் கீழ்ப்படிய தமிழ் ஊழியர்களைக் கட்டாயப்படுத்தும் வகையில் புதிய நிபந்தனைகளும், விதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழ் அரசாங்க ஊழியர்களதும் அவர்களின் குடும்பங்களினதும் துன்பங்கள் குறித்து அரசு எதுவித அக்கறையும் காட்டிக்கொள்ளவில்லை. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் கோரிக்கைகளுக்கெல்லாம் அரசாங்கம் வாக்குறுதிகள் வழங்குவதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை. வாக்குறுதிகள் ஒருபோதும் நிறைவேற்றப்படுவதுமில்லை.

**நீதிமன்றம் செல்லும் யோசனை**

நம்பிக்கை இழந்து விரக்திக்குள் தள்ளப்பட்டு விட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், நீதிமன்றம் மூலம் நியாயம் பெறுவதுபற்றிய யோசனையில் இறங்கியது. வேறு எதுவிதத்திலும் நியாயத்தைப் பெற முடியாது என்று சங்கம் கருதியது.

சிங்களத்தை மட்டுமேஅரசகரும மொழியாக்கிய 1956ஆம் ஆண்டுச்சட்டம் அரசியல் அமைப்பின் 29ஆவது ஷரத்துக்கு முற்றிலும் முரண்பட்ட செயல் என்ற வகையில் சட்டவல்லுநர்கள் மத்தியில் அபிப்பிராயம் வலுப்பெற்றிருந்தது.

அரசியல் அரசமைப்பின் 29ஆவது ஷரத்தின் மூலம் தடைசெய்யப்பட்டவற்றை மிக மோசமாக மீறுவதாகவும், மிக வெளிப்படையாகவே பாரபட்சம் காட்டுவதாகவும் அமைந்த சட்டம் ஒன்று இருந்திருக்குமானால் அதுவே இந்த அரசகரும மொழிச்சட்டம். அவ்வாறு இல்லையெனில், பாரபட்சமான சட்டங்களிலிருந்து சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு 29ஆவது ஷரத்தை உருவாக்கியவர்கள் நினைத்தது வெறும் கனவாகத்தான் இருந்திருக்க முடியும்.

சாதாரண காலங்களில் என்றால் நீதிமன்றத்தில் வாதிட்டுத் தீர்மானிக்க வேண்டிய ஓர் அரசியல் சட்டப் பிரச்சினையாக இது இருந்திருக்கும். ஆனால், சிங்கள - தமிழ் பிணக்குடன் பின்னணியையும் இந்தச் சட்டத்தின் வரலாற்றையும் பார்க்கையில் முக்கியமாக இது ஓர் அரசியல் பிரச்சினையே. இரு தரப்புகளுக்கிடையிலும் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாதவிடத்து அரச சேவையிலுள்ள தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது. இந்தப் பிரச்சினையின் உண்மையான நிலைப்பாடு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்குத் தெரியாதது அல்ல.

தமிழ் தொழிற்சங்க அமைப்பான அரசாங்க எழுதுவினைஞர் சங்கமானது தமிழரசுக்கட்சியிடமிருந்து ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெற்றுக் கொண்டது.

அதனுடன் சேர்ந்து சமாந்தரமாக செயற்பட்டு வந்தது. ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் தமிழரசுக்கட்சியிடமிருந்தே பெற்றுக் கொண்டது. தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை அரசியல் மட்டத்தில் தேசிய ஒடுக்கு முறைகளுக்கெதிராக நீதிமன்றங்களில் வாதிடுவதில்

**தமிழ்ப் 'பேனா'**

எல்லாவித நம்பிக்கைகளையும் அது இழந்து விட்டிருந்தது. அரசியல் வழக்குகள் தொடர்பாக அதற்கு, நீண்டகால கசப்பான அனுபவமுண்டு.

மகாதேசாதிபதி என்ற முறையில் சோல்பரி பிரபு யாழ்ப்பாணத்திற்கு முதன்முதலாக விஜயம் செய்ததையொட்டிய யாழ். நகரமண்டபம் தொடர்பாக யாழ்ப்பாண மேயருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு முதற்கொண்டு ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ். நடேசபிள்ளை மற்றும் வி.குமாரசுவாமி போன்றவர்களுக்கு எதிராக நடைபெற்ற தேர்தல் வழக்குகள் இறுதியாக பிரிவிக்கவுன்சில் வரை சென்ற கோடக்கன் பிள்ளை வழக்கு ஆகியவற்றில் தமிழரசுக்கட்சிக்கு அனுபவமிருந்தது. பாசிஸ மனம்கொண்ட ஓர் அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான ஒழுங்கு முறையானது நீதிமன்றங்கள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டிய ஒருவிடயமல்லவென்ற நிலைக்கு தமிழரசுக்கட்சியை இந்த அனுபவம் இட்டுச் சென்றிருந்தது. இருந்தபோதிலும் இந்த விடயத்தை எம்.திருச்செல்வம் கியுசியுடன் ஆலோசிக்கும்படி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்கு ஆலோசனை கூறியிருந்தார் எஸ்.ஜே.வி. செல்வநாயகம். தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் பிரச்சினையை தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு மற்றும் அனுபவங்களுக்கு அப்பால் முழுவதுமாக ஒரு சட்டப் பிரச்சினையாக அவர் அலசிப் பார்ப்பார் என்று செல்வநாயகம் கருதினார். எனவே, திருச்செல்வத்தின் ஆலோசனையின் பேரில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குரிய சட்ட பூர்வத்தன்மையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதென்று அரசாங்க எழுவினைஞர் சங்கம் முடிவு செய்தது.

தீர்மானம் எடுப்பதென்பது ஒன்று, ஆனால், பூனைக்கு மணிகட்டுவதற்கு ஒருவரை தெரிவுசெய்வதென்பது முற்றிலும் வித்தியாசமான விடயம். அரச சேவையில் தொடர்ந்து இருந்துகொண்டே பகைமைப் போக்கும், பழிவாங்கும் நோக்கமும் கொண்ட ஓர் அரசாங்கத்தை எதிர்த்து ஒருவர் வழக்காடுவதென்பது சாதாரண விடயமல்ல. அதன் பாதகமான விளைவுகளையும் எதிர்கொள்வதற்கு துணிச்சல் இருக்க வேண்டும்.

செல்லையா கோடீஸ்வரன் என்ற அரசாங்க ஊழியர் வழக்காளியாக நிற்கவும் தன் சொந்தப் பெயரில் வழக்கைப் பதிவு செய்யவும் முன்வந்தார். தொழில் திணைக்களத்தில் பணியாற்றிய ஓர் எழுதுவினைஞரான இவர் லண்டன் பல்கலைக்கழக கலைப் பட்டதாரி. வழமையாக அவருக்கு சாதாரண வழிமுறையில் வரவேண்டிய சம்பள உயர்வு, சிங்களத்தில் அவர் தேர்ச்சி பெற்றிருப்பதற்கான ஆதாரத்தை காட்டத் தவறியதால் நிறுத்திவைக்கப் பட்டிருந்தது. சிங்கள அரிச்சுவடியே தெரியாதவராக இருந்தவர் அவர்.

இவ்விதமாக அரசாங்கத்துக்கெதிராக, கோடீஸ்வரன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

வருடாந்தம் தமக்கு வழங்கப்பட்டு வந்த ரு10/- சம்பள உயர்வு திறைசேரியின் சுற்றறிக்கையொன்றின் பிரகாரம் நிறுத்தப்பட்டிருப்பதனால் அச்செயல் சட்டவிரோதமானது என்றும், அந்த சுற்றறிக்கை சட்டவிரோதமானது என்றும் அந்த சுற்றறிக்கை ஒரு சட்டத்தை அமுல்படுத்த முனைவதால் அந்த சட்டமும் கூட ஒரு சட்டமே அல்ல என்று அறிவிக்க வேண்டும் என்றும் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் கோரப்பட்டிருந்தது.

அதாவது,

1956ஆம் ஆண்டின் அரசகரும மொழி சட்டத்தை அமுல்படுத்த முனையும் திறைசேரியின் சுற்றறிக்கை அரசியல் அமைப்பின் 29ஆவது ஷரத்தின்படி செல்லுபடியாகாது என அறிவிக்கும்படி கோரப்பட்டிருந்தது.

அரசாங்கம் தனது தரப்பில் முன்வைத்த பதிலில், குறிப்பிட்ட சட்டம் 29ஆவது ஷரத்தை மீறவில்லை என்று வாதிட்டது. ஆரம்ப ஆட்சேபனையாக, கோடீஸ்வரன் ஒரு அரச (முடிக்குரிய) ஊழியர் என்ற முறையில் தனது தொழில் வழங்குநரை எதிர்த்து சம்பளம்கோரி வழக்குத்தொடர முடியாது என்றும் சட்டப்படி முடிக்குரிய ஊழியர் ஒருவர் 'அரசின் விருப்பத்துக்கமையவே' தொழிலில் இருப்பதால் அரசுக்கெதிராக சம்பளத்துக்காக வழக்குத் தொடர முடியாது என்றும் வாதிட்டது.

இந்த வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிவான் ஓ.எல்.கிரெட்சர் கோடீஸ்வரனுக்கு சாதகமாக தீர்ப்பளித்தார்.

அரச ஊழியர் ஒருவர் முடிக்குஎதிராக சம்பளம் கேட்டு வழக்குத் தொடரமுடியும் என்றும் அரச கரும மொழிச்சட்டம் அரசியல் அமைப்புக்கு மாறானது என்றும் எனவே 29 ஆவது ஷரத்தை மீறுவதாகவுள்ளது என்றும் தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்பிற்காக பிற்காலத்தில் கிரெட்சர் பெரும் இழப்புகளை சந்திக்க நேர்ந்தது. நீதித்துறை வழக்கப்படி உச்ச நீதிமன்றுக்கான அவரது பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அரசாங்கம் உச்ச நீதி மன்றத்துக்கு மேன் முறையீடு செய்தது.

உச்ச நீதிமன்றம், அரச ஊழியர்கள் சம்பள விடயமாக முடிக்கெதிராக வழக்குத் தொடர முடியாதெனக் கூறி மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை மாற்றிவிட்டது


அரச கரும மொழி தொடர்பான பிரச்சினையை உச்ச நீதிமன்றம் கண்டு கொள்ளவில்லை. அதுபற்றிய தீர்ப்பு அவசியமற்றது எனக் கூறி விட்டது.

இந்நிலையில் கோடீஸ்வரன் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து பிரிவிக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்தார்.

(தொடரும்)

அரசியல் அமைப்பின் 29ஆவது ஷரத்தின் மூலம் தடைசெய்யப்பட்டவற்றை, மிக மோசமாக மீறுவதாகவும் மிக வெளிப்படையாகவே பாரபட்சம் காட்டுவதாகவும் அமைந்த சட்டம் ஒன்று இருந்திருக்குமானால் அதுவே இந்த அரசகரும மொழிச்சட்டம். அவ்வாறு இல்லையெனில், பாரபட்சமான சட்டங்களிலிருந்து சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு 29ஆவது ஷரத்தை உருவாக்கியவர்கள் நினைத்தது வெறும் கனவாகத்தான் இருந்திருக்க முடியும்.





# ஆஷஸ் தொடருக்கான தயார்ப்படுத்தல்கள்

இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான ஆஷஸ் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடர் கடந்த முறை இங்கிலாந்தில் நடைபெற்றது. தொடரையும் இங்கிலாந்தே கைப்பற்றியது.

இம்முறை இந்தத் தொடரைக் கைப்பற்றுவதற்காக இருநாட்டு வீரர்களும் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றனர். கடந்த முறை விட்ட தவறுகளைச் சீர்செய்வதற்காக இருநாட்டு வீரர்களும் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர்.
கடந்த ஆஷஸ் தொடரின் போது அவுஸ்திரேலிய அணியினர் களத்தடுப்பில் மிகமோசமாக இருந்தனர். இதுவே தோல்விக்குக் காரணம் என்று பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. அந்தத் தொடரிலே இங்கிலாந்து அணி வீரர்களின் 17 பிடிகளை ஆஸி. அணியினர் தவற விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடைசி டெஸ்ட் ஆட்டத்தின் போது கெவின் பீற்றர்ஸன் 15 ஓட்டங்களை எடுத்திருந்த வேளை பிரட் லீயின் பந்து வீச்சில் ஷேன் வோர்னிடம் ஆட்டமிழக்கும் சந்தர்ப்பம் ஒன்றை வழங்கினார். ஆனால், அந்த இலகுவான பிடியை ஷேன் வோர்ன் தவற விட்டார். இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பீற்றர்ஸன் 158 ஓட்டங்களைப் பெற்று அந்த ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடிக்க உதவினார்.

பீற்றர்ஸனின் அந்தப் பிடியை ஷேன் வோர்ன் தவறவிடாமல் இருந்திருந்தால் அவுஸ்திரேலியா அந்த ஆட்டத்தை வெற்றிகொண்டு இங்கிலாந்து அணி கிண்ணத்தைச் சுவீகரிப்பதைத் தடுத்திருக்கலாம்.

இம்முறை இதைச் சீர்ப்படுத்தும் வகையில் களத்தடுப்புப் பயிற்சியாளர் ஒருவரை ஆஸி. அணி நியமித்துள்ளது. அமெரிக்க 'பேஸ் போல்' அணியின் முன்னாள் பயிற்சியாளரான இவர் ஆஸி. அணியின் களத்தடுப்பில் உள்ள குறைபாடுகளை நீக்கும் முகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணிவீரர்கள் இங்கிலாந்து அணி வீரர்களுடன் நட்புறவுடன் பழகியமையும் தோல்விக்கு ஒரு காரணம் என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவ் வோவ் குற்றம் சாட்டியுள்ளார். இதனால் இம்முறை ஆஸி. வீரர்கள் இங்கிலாந்து அணி வீரர்களுடன் கடுமையாக நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணியினர் இங்கிலாந்து அணி வீரர்களுடன் வழமைக்கு மாறாகக் கடந்த ஆஷஸ் தொடரில் நட்புறவுடன் பழகினர். மற்றும் ஆஸியணிக்குரிய ஆக்ரோசமான போராட்டக் குணத்தை வெளிப்படுத்தவில்லை என ஸ்ரீவ் வோவ் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரட் லீ தனது பந்து வீச்சுப் பாணியை மெருகேற்றுவதற்காக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான வசீம் அக்ரமைச் சந்தித்து ''ரிவேர்ஸ் ஸ்விங்'' பந்து வீச்சு நுணுக்கங்களைக் கேட்டறிந்துள்ளார். கடந்த முறை ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றுவதற்கு இந்த ''ரிவேர்ஸ் ஸ்விங்'' பந்து வீச்சுப் பாணி பெரிதும் உதவியது. எனவே இதைத் தானும் கற்றுக் கொண்டு அதை இங்கிலாந்து அணிக் கெதிராகப் பயன்படுத்துவதற்கு பிரட் லீ தயாராகி வருகின்றார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் ஆஷஸ் தொடரைக் கவனத்தில் கொண்டு இனிவரும் ஆட்டங்களில் இருந்து விலகியிருக்க வேண்டும் என அந்த அணியின் முன்னாள் வீரர்கள் பலரும் அறிவுரைகள் கூறி வருகின்றனர்.

தொடர்ச்சியாக ஆட்டங்களில் பங்கேற்கும் போது வீரர்கள் காயமடையக் கூடும் இது ஆஷஸ் தொடர் வெற்றியைப் பாதிக்கும் என்ற வகையில் கூறியிருக்கின்றனர். இங்கிலாந்து அணியினர் அவுஸ்திரேலிய அணியினரைப் போல் இந்தத் தொடர் பற்றித் தீவிரம் காட்டாதவர்கள் போல் உள்ளனர். ஆனாலும் அவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஆஷஸ் தொடரை மையமாக வைத்துதான் நடைபெற்று வருகின்றன.

வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் இடம்பெறவுள்ள மினி உலகக்கிண்ணத் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் விலகியிருக்க வேண்டும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் இயன் பொத்தம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியினர் தற்போது பங்களாதேஷுடனான தொடரை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளனர். அவர்களுக்கு அடுத்த தொடர் ஸிம்பாவே அணியுடன் வரும் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளது. இதனால் அவர்கள் ஓய்வு குறித்துப் பெரிதாகக் கவனத்தில் கொள்ளவில்லை.

இங்கிலாந்து அணியிலே இளம் வீரர்கள் இந்தியத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு தமது திறமையை நிரூபித்துள்ளனர். இங்கிலாந்து அணிக்குச் சவாலாகத் தற்போது ஆஸி. அணியின் தூண் என வர்ணிக்கப்படும் மைக்கல் ஹசே இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதே போல் அவுஸ்திரேலிய அணிக்கு இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அன்ட்ரூ பிளின்ரொப் சவாலாக இருப்பார்.

எனவே இம்முறை ஆஷஸ் தொடர் விறுவிறுப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ✱

---

# இடம்பெறுவாரா ஒலிவர் கான்?



கால்பந்து விளையாட்டின் மூலம் ஏராளமான வீரர்கள் பிரபலமாகி உள்ளனர். ஆனாலும் பீலே மற்றும் மரடோனா போன்ற வீரர்கள் கால்பந்து ஜாம்பவான்கள் என அழைக்கப்படுகின்றனர்.

அதேபோல் டேவிட் பெக்காம், ரொனால்டோ, ரொனால்டினோ போன்ற வீரர்களும் தற்போதுள்ள பிரபலங்கள். சரி, விடயத்திற்கு வருவோம். மேலே குறிப்பிட்ட வீரர்கள் அனைவரும் கால்பந்து விளையாட்டில் தனக்கென தனிமுத்திரை பதித்ததன் மூலம் பெயர் பெற்றவர்கள். ஆனால் ஜெர்மனி வீரர் ஒலிவர் கான் கோல் காப்பாளராக விளையாடிப் பெயர் பெற்றவர். இவரை பிறநாட்டுக் கால்பந்து வீரர்கள் ''ஆயிரம் கை கொண்ட கொரில்லா'' என்று செல்லமாக அழைப்பார்கள். எதிரணி வீரர்கள் பந்தை எவ்வளவு லாவகமாக கடத்தி வந்து கோல் அடிக்க நினைத்தாலும் தன்னுடைய அபார ஆட்டத்தால் தடுத்து விடுவார்.

சிறப்பாக ஆடிய ஒலிவர் கான் கடந்த உலகக்கிண்ண போட்டிக்கு ஜேர்மன் அணியின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். இவரது தலைமையில் ஜேர்மனி அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.இறுதிப் போட்டியில் பிரேஸில் அணியை எதிர் கொண்டது ஜேர்மனி. அப்போது எதிரணிவீரர்கள் இவரது எதிர்ப்பை மீறிக் கோல் அடிப்பது அவ்வளவு எளிதல்ல என்று கூறினர். இறுதி ஆட்டத்தில் கடுமையாகப் போராடிய பிரேஸில் அணி 2-0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது. இந்த இரண்டு கோல்களையும் அடித்தவர் பிரேஸில் நட்சத்திர வீரர் ரொனால்டோ.

கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் கோல்காப்பாளராக இருந்து கொண்டே ஜேர்மனி அணியை வழிநடத்திய ஒலிவர்கானுக்கு வரும் உலகக்கிண்ண போட்டியில் விளையாட வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகம் தான். காரணம் இவருக்கும் அணியின் பயிற்சியாளர் கிலின்ஸ்மேனுக்கும் இடையே நடைபெறும் நிழல் யுத்தம். கிலின்ஸ்மேன் கடந்த வாரம் ஒரு பேட்டி அளித்தார். இதில் ஜேர்மனியின் முதல்தர கோல் காப்பாளர் ஜென்ஸ் லெக்மான். அவர்தான் இன்னும் சில மாதங்களில் நடைபெறவிருக்கும் உலகக்கிண்ண ஆட்டங்களில் விளையாட வேண்டும் என்றார்.

இந்த அறிவிப்பால் நொந்து போயுள்ள ஒலிவர் கான், இதுபற்றி கூறும் போது, '' நான் பல ஆண்டுகளாக ஜேர்மனி அணிக்கு விளையாடி வருகின்றேன். கடந்த உலகக் கிண்ணத்துக்குத் தலைவராக இருந்துள்ளேன். தற்போது என்னை அணியில் இருந்து நீக்கவேண்டும் என்று பலர் நினைக்கின்றார்கள். இதனால் தான் பயிற்சியாளர் கிலின்ஸ்மேன் அப்படிக் கூறி உள்ளார். ஆனாலும் அணியில் எனக்குத் தொடர்ந்து இடம் கிடைக்கும் என்று நம்புகின்றேன். ஒருவேளை பயிற்சியாளர் கூறியது அவரது சொந்தக் கருத்தாகவும் இருக்கலாம்.''

''கடந்த முறை கிண்ணத்தை மயிரிழையில் தவறவிட்டோம். இந்த உலகக்கிண்ணத்தை ஜேர்மனி நிச்சயம் வெல்லும். இந்தப் போட்டித் தொடரில் பிரேஸிலைத் தோற்கடிப்பதே எனது இலட்சியம். ஆனால், அது அவ்வளவு எளிதானது அல்ல. அதே நேரத்தில் ஆர்ஜென்டீனா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற அணிகளையும் குறைத்து மதிப்பிடவில்லை.'' என்றார். ✱



# அரச படைகளுக்கு சோதனைக் களமாகும் யாழ்ப்பாணம்

விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பகாலம் முதல் யாழ்ப்பாணம் முக்கிய முனையாகஇருந்துகொண்டிருக்கிறது.அது மீண்டும் தனது வழமையான போர் முகத்துக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது.அத்துடன் இலங்கையும் சேர்ந்துதான் போரை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.கிட்டத்தட்ட டபோர் தொடங்கிவிட்டது என்றே கருதவேண்டியுள்ளது.இதற்கு சான்றாக யாழ்ப்பாணத்தில் தினமும் தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன.அத்துடன் சராசரியாக தினமும் ஒவ்வொருவர் தாக்குதல்களுக்கு பலியாகிவருகின்றனர்.தினமும் கைக்குண்டுத்தாக்குதல்கள்,துப்பாக்கிச் சூடு,படையினரின் சுற்றிவளைப்பு,கைதுகள் ,தேடுதல்கள் என ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் மீண்டும் யுத்தக் கோடுகள் படியத்தொடங்கிவிட்டன.

எதிர்காலத்தில் இலங்கையில் வெடிக்கப்போகும் பெரும் யுத்தத்தின் பிரதான பகுதி யாழ்ப்பாணமாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.அது பேரழிவு யுத்தமாகவும் இருக்கும் .அது சிலவேளைகளில் இலங்கையின் வரலாற்றை மாற்றஅமைக்கும் வல்லமையுடயதாகவும் இருக்கக்கூடும்.அந்தவகையில் தினமும் படையினருக்கெதிரான தாக்குதல்களும் ,பதிலுக்கு படையினர் நடத்தும் கோரக்கொலைகளும் மக்கள் மத்தியில் பலத்த பீதியுணர்வை ஏற்படுத்திவிட்டுள்ளது.

போர் மூண்டால் தாம் பாரிய யுத்தத்தை சந்திக்கவேண்டிவரும் என்ற படையினரின் எண்ணங்கள் மக்கள் மீது வன்முறையாக மாறிவருகின்றது .படையினரின் கீழ்மட்டங்கள் மட்டுமன்றி தலைமைகள் மத்தியிலும் புலிகள் குறித்தும் தமிழ்மக்கள் புலிகளுக்குக் காட்டிவரும் ஆதரவு குறித்தும் அச்சம் நிலவிவருகிறது.படையினரின் மக்கள் மீதான வன்முறைகள் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் புலிகளின் பகுதி நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.சமாதானம் என்ற கோஷத்தின் கீழ் சிறிய அளவிலான போர் (17ஆம் பக்கம் பார்க்க)

Gateway2uk ·Education

Education Provider DfES, BCS, Home Study, ACCA,

**Free Spot Admissions Seminar**
**02/05/2006**

Meet
Mr.Graham Minshaw (International Consultant),
Mr.Kiran. Nagpure (Regional Manager Gateway2UK).

**Courses:**

- Computing & Information Systems
- Business & Management Studies
- Accounting & Finance Facilities Management
- Hospitality, Travel Management, Medical and Nursing
- ACCA, Specialist and Professional Programmes
- Engineering, Medical related couresss
- Information Technology
- Accountancy & Finance
- Business & Finance
- Marketing
- Economics
- BBA, MBA
- LLB
- HND
- IMIS

- Full visa support - No visa full fees refund after deduction of hundred pounds registration fee.
- Student loan support
- Scholarships application Welcome

**For Further Information:**
Gatway 2UK Education,
1,Sycamore Avenue, South Ealing, London,
W5 4LH, UK

**Venue:** Seminar on 2/5/2006 at 10am to 4pm book your appointment in advance.

**SriLanka Office**
**M.H. Riyas**

**SKY LINE** Travels & Services
Professional Overseas Educational Consultants

*No.7-1/2, W.A.De Silva Mawatha,(Facing Galle Road) Colombo-06, Sri Lanka.*
**Hotline: 0773 175 767**
**Office : 0114 942 337**
Mail: mohamed_hanifaa_riyas@yahoo.co.uk




## நேபாளத்திலும் எரிக் சொல்ஹெய்ம்

நேபாளத்தில் மாலோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் அந் நாட்டின் அரசுக்கும் இடையில் சமரசம் செய்து வைப்பதற்கான அனுசரணைப் பணியில் ஈடுபட நோர்வே முன்வந்துள்ளது.



நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் சிரேஷ்ட சமாதான ஏற்பாட்டாளருமான எரிக் சொல்ஹெய்ம் இந்த அனுசரணைப் பணியில் ஈடுபட இருக்கிறார்.

தவிர கடந்த பல ஆண்டுகளாக முடக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத்தை மீளச் செயற்படுத்த மன்னர் ஜியானேந்திரா முன்வந்ததை அடுத்து நேபாளத்தை உலுக்கிய போராட்டம் முடிவடைந்துள்ளது.

இப்போது 84 வயதுடைய கிரிஜா கொய்ராலா அந்நாட்டின் பிரதமராக ஏழு கட்டிச் கூட்டணியினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## முஷாரப் அமெரிக்க வேட்டைநாய்



பாகிஸ்தான் ஜனாதிபதியை அகற்ற பாகிஸ்தான் மக்களும் இராணுவமும் தயாராக வேண்டும் என அழைப்பு விடுத்திருப்பதுடன், இந்தியாவின் அணு சக்தித் திட்டத்துக்கு அமெரிக்கா உத்வேகம் அளித்து வருகிறது எனவும் ஒசாமா பின்லேடனின் தலைமையிலான அல்குவைதா தீவிரவாத அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

தவிர பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாராப் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராகவும் அமெரிக்காவுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வருகிறார் எனபக் குற்றஞ்சாட்டியுள்ள பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் முஷாராப்பை அமெரிக்காவின் வேட்டை நாய் என்றும் வர்ணித்துள்ளனர்.

## புஷ்ஷின் செல்வாக்கு சரிகிறது



அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் செல்வாக்கு சரிந்து வருவதை சி.என்.என். என்ற செய்தி நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்புகள் எடுத்துக்காட்டி உள்ளன.

கடந்த மார்ச் மாதம் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் புஷ்ஷுக்கு 36 சதவிகிதம் செல்வாக்கு இருந்தது. தற்போது எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் அது 32 சதவீதமாகக் குறைந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தனது பணியை திருப்திகரமாகச் செய்யவில்லை என்று 60 சதவீத அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சீன விமானங்களில் இந்திய சிட்டுக்கள்



இந்தியாவுக்குச் செல்லும் விமானங்களில் இந்திய பணிப் பெண்களை நியமிக்க சீனாவின் ஈஸ்டன் எயர்லைன்ஸ் விமான நிறுவனம் முடிவு செய்துள்ளது. சீனாவுக்கு அடிக்கடி சென்றுவரும் இந்தியர்கள் மத்தியில் இம்முடிவு பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

ஹங்காங் நகரிலிருந்து புதுடில்லிக்குச் செல்லும் விமானங்களில் இந்தியப் பணிப்பெண்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவரென சீன விமான நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈரான் எச்சரிக்கை

பொருளாதாரத் தடை விதித்தால் பெற்றோலிய எரிபொருள் விநியோகத்தை நிறுத்தி விடுவோம் என்று ஐ.நா சபைக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் அணுகுண்டு தயாரிப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கும் அமெரிக்கா அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவும் ஐ.நாவை நிர்ப்பந்தித்து வருகிறது.

ஆக்கபூர்வமான பணிகளுக்கு மட்டுமே அணு சக்தியைப் பயன்படுத்தப்போவதாகக் கூறிவரும் ஈரானுக்கு ஐ.நா.சபையின் மிரட்டல்கள் எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது.

பொருளாதாரத் தடை விதித்தால் பெற்றோல் விநியோகத்தை நிறுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்று ஈரானின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலி லாரிகான் தெரிவித்திருக்கிறார்.

## மாணவன் சட்டையில் விகாரமான வாசகங்கள்

விகாரமான வாசகங்கள் எழுதப்பட்ட ஆடைகளை அணிந்து மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதை தடை செய்யலாம் என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோ பகுதியில் உள்ள பாடசாலையில் மாணவன் ஒருவன் தன்னுடைய சட்டையில் 'ஹோமோ செக்ஸ்' அசிங்கமானது என்ற வாசகத்தை எழுதிக் கொண்டு வகுப்புக்குச் சென்றான்.

அவனை வகுப்புக்குச் செல்ல பாடசாலை நிர்வாகம் அனுமதிக்காததால் அவன் தனது சுதந்திரம் பறிக்கப்படுவதாகக் கூறி பாடசாலை நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடர்ந்தான்.

கீழ் நீதிமன்றத் தீர்ப்பு அவனுக்கு எதிராக வழங்கப்பட்டதால் அவன் மேன்முறையீடு செய்தான்.

வழக்கை விசாரித்த சேர்க்யூட் நீதிமன்ற நீதிபதிகள் கீழ் நீதிமன்றத் தீர்ப்பு சரியானதே எனத் தீர்ப்பளித்ததுடன் இந்த வார்த்தைகள் மற்ற மாணவர்களின் மனதையும் அவர்களின் படிப்பையும் பாதிக்கும் எனவும் கூறி உள்ளனர்.

## ஈராக் போர் முனைக்கு இளவரசர் ஹரி

ஈராக் போர் முனைக்கு தம்மையும் அனுப்புமாறு பிரிட்டிஷ் இளவரசர் ஹரி கேட்டிருக்கிறார்.



பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் - டயானா தம்பதிகளின் மகனான ஹரி இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் படித்து வருவதுடன் ஏற்கனவே லெப்டினன்ட் அதிகாரிகள் தரத் தேர்வில் சித்தி எய்தி இருக்கிறார்.

இளவரசரை எப்படி போர் முனைக்கு அனுப்புவது என இராணுவ அலுவலகம் தயங்கிக் கொண்டு இருக்கிறது.

"என்னுடன் பயிற்சி பெற்றவர்கள் ஈராக் போர் முனையில் சண்டையிட்டுக் கொண்டு இருக்கும்போது நான் மட்டும் அரண்மனையில் பந்து விளையாடிக் கொண்டு இருக்க வேண்டுமா?" என்று கேட்கிறார் ஹரி.

## பாலஸ்தீனத்துக்கு நிதிவழங்க பிரான்ஸ் ரெடி

பாலஸ்தீன அரசாங்கத்தில் பணிபுரிந்து வருபவர்களுக்கு கொடுக்கப்படாமல் உள்ள ஊதியத்தினை வழங்குவதற்காக உலக வங்கியினால் மேற்பார்வையிடப்படும் விசேட நிதியினை உருவாக்க வேண்டுமென பிரான்ஸ் அதிபர் ஜக் சிராக் கோரியுள்ளார்.



இந்த திட்டத்தினை சர்வதேச அமைதி மத்தியஸ்த குழுவில் இடம்பெற்றுள்ள ஏனைய உறுப்பினர்களுடன் அடுத்த மாதத்தில் ஆலோசிக்கப்போவதாக அவர் கூறியுள்ளார்.

மனிதாபிமான மற்றும் அரசியல் காரணங்களுக்காக உதவி வழங்குவது தொடர வேண்டுமென பிரான்ஸ் அதிபர் ஜக் சிராக் கூறியுள்ளார்.

# புற்று நோய் பரம்பரை நோயா?

கே: வயது 28. எனது தாயார் மார்பகப் புற்றுநோயால் இறந்தார். எனது தந்தை - புரஸ்டேட் (PROSTATE) சுரப்பி புற்றுநோயால் கஷ்டப்படுகின்றார். எனக்கும் புற்று நோய் ஏதாவது வந்து விடுமோ என்று பயமாக இருக்கின்றது. புற்று நோய் ஏற்படாமல் இருக்க ஏதாவது பின்பற்றக் கூடிய வழிமுறைகள் இருக்கின்றனவா?

ப: புற்று நோய் என்பது சில கலன்களின் அதிகளவான வளர்ச்சி என்று சொல்லலாம். இந்த வளர்ச்சி கலன்களின் GENE என்று சொல்லப்படும் மரபணுக்களில் ஏற்படும் திடீர் மாற்றங்களால் ஏற்படலாம். அல்லது இந்த மாற்றங்களுக்கு வழிக்காரணிகளான - IRRITANTS எனப்படும் அழற்சிகள் காரணமாக இருக்கலாம். இந்த அழற்சிகள் CARCINO-GEN எனப்படும் புற்றுநோயைத் தரும் காரணிகளை உருவாக்கின்றன. இந்த காசினோஜன்ஸ் - இரசாயனப் பொருட்களாக, புகையிலையாக எக்ஸ் கதிர்களாக, ஏன் சூரிய ஒளியாகக் கூட இருக்கலாம். இவைகளால் கலன்களில் உள்ள மரபணுக்கள் மாற்றம் பெற்று



புற்றுநோயைத்தரலாம். எனவே புற்றுநோய் எமக்கு ஏற்படாதவாறு - இயலுமானவரை - இந்தப் புற்றுநோயை உருவாக்கும் காசினோஜன்கள் உற்பத்தியாவதை நாம் தவிர்க்க வேண்டும்.

புகை பிடித்தல் - சுவாசப்பை புற்று நோய்க்குரிய காசினோஜன் உருவாக வழி வகுக்கும். உணவில் உள்ள அதிகளவு கொழுப்புச்சத்து - பெருங்குடல், மார்பக, புரஸ்டேட் சுரப்பி புற்றுநோய்கள் ஏற்பட ஏதுவாகின்றது. மதுபானம் அதிகமாக குடிப்பது களம் (OESOPAAGEAL) புற்றுக்கு காரணமாகின்றது. பொரித்த உணவுகள், நெருப்பில் வாட்டி எடுத்த இறைச்சி வகைகள் (BARBEQUE) என்பவை இரைப்பை புற்றுக்கு காரணமாகின்றன.

இவற்றைத்தவிர HEPATITIS B வைரஸால் ஏற்படும் ஈரல் அழற்சி - பிற்காலத்தில் ஈரல் புற்று நோயைத் தரக்கூடும். இது தவிர அஸ்பெஸ்டோஸ் கூரைத்தகடு தொழிற்சாலைகளில் உள்ள அஸ்பெஸ்டோஸ் துகள்கள், கரித்துகள்கள் என்பன சுவாசப்பை புற்றுநோய்களுக்கும், பாக்கு, புகையிலை மெல்லுதல் - வாய்ப்புற்றுக்கும் வழிவகுக்கின்றன.

எனவே இவற்றை அடிப்படையாக வைத்து பின்வரும் வாழ்க்கை முறைகள் புற்றுநோய் அபாயத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கும்.

1.புகைபிடித்தலைத் தவிர்த்தல் அல்லது புகைமண்டல சூழலைத் தவிர்த்தல்

2.முன்னர் பத்தியில் கூறிய தொழில்முறையில், வாழ்க்கை முறையில் சந்திக்கக்கூடிய காசினோஜன் உருவாக்கும் இடங்களைத் தவிர்த்தல்.

3.உணவில் அதிகளவு கொழுப்பை முக்கியமாக இறைச்சிகளில் உள்ள கொழுப்பைத் தவிர்த்தல்.

இவற்றுடன் கிரமமான தேகப்பயிற்சி, நடை , உணவில் பழவகைகள், மரக்கறிவகைகளை அதிகமாகச் சேர்த்தல், அளவாக உடலை வைத்திருத்தல், பருமனைக் குறைத்தல் என்பவை புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் குறைக்கின்றன.

கே: ஆண். வயது 26. ஏதோ ஒரு சந்தர்ப்ப வசத்தால் கொழும்பில் ஒரு விலைமாதுவுடன் ஒரே ஒரு தடவை தொடர்பு கொண்டேன். அப்பொழுது பாதுகாப்பாக ஆணுறை அணிந்திருந்தேன். இத்தொடர்பு கொண்டு ஒரு வாரம் கழிந்ததும் அரைப்பகுதியில் ஆணுறுப்பை சுற்றி அரித்து சிறு கொப்பளங்கள் ஏற்பட்டன. இப்பொழுது உடல் எல்லாம், கை கால்களில் எல்லாம் அரிக்கின்றது - இது என்ன AIDS நோயா?

ப:இளமை வேகத்தில் இழைத்த தவறுக்கு வருந்துகின்றீர்கள். ஆணுறை போட்டு உடலுறவு கொண்டதால் எய்ட்ஸ் - மற்றும் சிபிலிஸ், கொனொரியா போன்ற பால்வினை நோய்கள் தொற்றியிருக்க சாத்தியம் இல்லை. ஆனால் இவை மட்டுமல்ல பால் வினைநோய்கள். பால் உறுப்பு ஸ்தானங்களில் உள்ள மயிர்களில் குடிகொண்டிருக்கும் PEDICULOSIS PUBIS என்கின்ற ஒரு வகை பேன், ஒட்டுண்ணி தொற்றும் சொறி சிரங்கு (SCABIES), தொற்றுதரும் SAR-COPTES SCABIEI ஒட்டுண்ணி ஆகியவை கூட பால்வினை நோய்களாக இன்று கருதப்படுகின்றன. இவை தொற்றியிருந்தால் உடல், கை,கால் பகுதிகளில் சொறிவு, அரிப்பு என்பன ஏற்படும். இவற்றை LINDANE, BENZYLBENZOATE வெளிப்பூச்சுகளை உபயோகிப்பதன் மூலம் குணம் பெறலாம்.

ஆணுறை அணிவதால் மாத்திரம் மற்றைய பால்வினை நோய்கள் எம்மைத் தொற்றாது என்பது தவறு. ஆணுறை உபயோகிக்கும்போது கிழிந்தால் அல்லது உடைந்தால் கூட 'எய்ட்ஸ்' தொற்றலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

கே: வயது 21. பெண். திருமணம் ஆகவில்லை வெள்ளைபடுகின்றது. வெள்ளைபடுவதால் நோய்கள் உண்டாகுமா? பிற்காலத்தில் தாய்மையடைய வெள்ளைபடுதல் நோயால் தடையேதும் உண்டா?

ப: வெள்ளைபடுதல் என்பது பெண் உறுப்புகளில் சாதாரணமாக ஏற்படும் ஒரு கசிவு. பெண்களுக்குரிய ஹோர்மன்கள் பெண் உறுப்பை நீர்த்தன்மை யாக வைத்திருக்க அவற்றின் தாக்கத்தினால் - பெண் உறுப்பு சிசுக்கள் நிறமற்ற தண்ணீர்த் தன்மையான சுரப்புகளைச் சுரக்கின்றன. மாதவிடாய்க்கு கிட்டிய காலங்களில் இந்த சுரப்பு சற்று அதிகமாக இருக்கலாம். உள்ளாடைகளை அடிக்கடி மாற்றும் அளவுக்கு அதிகளவில் இந்த வெள்ளைபடுதல் இல்லையென்றால் அது பற்றிப் பயப்படத் தேவையில்லை.

ஆனால் சிலவேளைகளில் சுரப்பு மிக அதிகமாகவும், மஞ்சள் நிறமாகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் இருந்தால் இந்த வெள்ளைபடுதல் பற்றி கவனத்தில் எடுக்க வேண்டும்.

பற்றீரிய தொற்றுகள் மற்றும் TRICHOMANAS VAGINALIS என்கின்ற நுண்ணுயிர் அங்கியின் தொற்று மற்றும் CANDIDA என்கின்ற பூஞ்சணவகைகளின் தொற்று என்பன அதிகமாக வெள்ளைபடுதலுக்குரிய காரணங்களாகும். சுரப்புகளை நுண்ணுயிர்காட்டியில் வைத்துப் பரிசோதனை செய்வதன் மூலம் எத்தகைய தொற்றின் சுரப்பு என்பதை அறிந்து அதற்குரிய சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

இது தவிர இரத்த சோகை (ANAEMIA) ஏற்பட்டாலும், வெள்ளைபடுதல் ஏற்படும். இரத்தபரிசோதனை மூலம் - இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவை அறிந்து- அது குறைவாக இருந்தால் இரும்புச்சத்துக் கலந்த மாத்திரைகளை உபயோகிப்பதன் மூலம் - வெள்ளைபடுதலை சுகப்படுத்தலாம்.

இவற்றைத்தவிர - கருப்பை வாசலில் ஏற்படும் அழற்சியும் வெள்ளைபடுதலைத்தரும். கருப்பை வாய் அழற்சிக்கு - கருப்பை வாசல் புற்றுநோய் ஒரு முக்கிய காரணம். PAPSMEAR என்கின்ற நோயியல் பரிசோதனை மூலம் இதனைக் கண்டறியலாம்.

குழந்தை பெற்ற பெண்களுக்கு பிரசவத்தின் போது ஏற்படும் கருப்பை வாசல் தாக்கங்களினால் புண்கள் ஏற்பட்டு அதிலிருந்து சுரக்கும் திரவம் - சிகப்பு நிறம் கலந்த வெள்ளைபடுதலாகத் தெரியும். மஞ்சள்நிற சுரப்புகள், துர்நாற்ற சுரப்புகள் முன்னர் நான்கூறிய பற்றீரியா, நுண்ணங்கி, பங்கசு தொற்றுகளின் போது ஏற்படுகின்றன.

சாதாரண வெள்ளைபடுதல் ஒரு நோயல்ல. இதனால் பிற்காலத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

கே: பெண். வயது 56 எனது பிறப்புறுப்பு கடந்த ஒரு மாதமாக அரித்துக் கொண்டிருக்கின்றது. வெட்கத்தினால் மருத்துவரிடம்



சொல்லவில்லை. பரிகாரம் கூறவும்.

ப: மருத்துவரிடம் உடம்பைக் காட்ட வெட்கப்பட்டு எத்தனையோ பெண்கள் ஆரம்பத்தில் முற்றிலும் குணமாக்கக் கூடிய நோய்களை முற்றவிட்டு - பரிதாபமாகக் கஷ்டப்படுவதையும், மரணமடைந்ததையும் என் அனுபவத்தில் கண்டுள்ளேன். எனவே ஒரு பெண் மருத்துவரிடமாவது நீங்கள் பரிசோதனைக்குப் போகவேண்டும். மருத்துவர்கள் கடவுளைப் போன்றவர்கள். எனவே வெட்கப்படாமல் செல்லுங்கள்.

அதற்கு முன்னர் - பெண் உறுப்பில் அரிப்பு - நமைச்சல் ஏற்பட முக்கிய காரணம் நீரிழிவு நோய். உங்கள் வயது - நீரிழிவு நோய் ஏற்படக் கூடிய நேரம். CANDIDA என்கின்ற பங்கசு - நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு பிறப்புறுப்புகளில் தொற்றாக வளரக்கூடியது. இது தவிர உங்கள் வயதில் - கருப்பை, கருப்பை வாசல் புற்று நோய்களும், சுரப்புகளை ஏற்படுத்தி நமைச்சலைத் தரும். பிறப்புறுப்பு பரிசோதனை மாத்திரம் தான் இந்த சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும். எனவே, உடனடியாக வெட்கத்தை விட்டு மருத்துவ ஆலோசனை பெறவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராச்சி மாவத்தை
கொழும்பு - 14

---

# குளுக்கோமா!

இந்தியாவில் பார்வை இழப்பை ஏற்படுத்தும் கண்நோய்களில் குறிப்பிடத்தக்கது, கண்திரவ அழுத்த நோய் ஆகும். இதனை ஆங்கிலத்தில் 'குளுக்கோமா' என்கிறார்கள்.

நம் கண்களில் மெல்லிய குழாய் உள்ளது. இந்தக் குழாய் கண்ணுக்கு ஒருவித திரவத்தை எடுத்துச் செல்கிறது.

இந்தக் குழாயில் கோளாறு ஏற்பட்டால், அல்லது திரவம் செல்லும் வழியில் தடை ஏற்பட்டால் கண்ணில் கண்திரவ அழுத்தம் அதிகமாகும். இது கண்பார்வையைப் பாதிக்கும்.

**பார்வை இழப்பு**

கண்ணின் திரவ உற்பத்திக்கும் அது வெளியேறும் அளவிற்கும் இடையே சம அளவு இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அழுத்தம் கூடும். இதனால், விழிகளுக்குப் பின்பக்கமாக உள்ள பார்வை நரம்பு பாதிப்படையும். பார்வையை பாதிக்கும்.

இதை முதலில் கவனிக்காவிட்டால், அடியோடு பார்வை இழப்பு ஏற்படும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு இது (பார்வை இழப்பு) அதிகமாக ஏற்படுகிறது.

பெரும்பாலும் இந்த நோய் ஏற்படக் காரணம் மரபுக்கூறுகளே. கண் அமைப்பின் வேறுபாடும் இந்தநோயை உண்டாக்கிவிடும். கண்ணில் திரவம் பாயும் வடிகால் பழுதடையும் போது சிறிது சிறிதாக அழுத்தம் அதிகமாகும். பார்வை மங்கல், கடுமையான வலி, குமட்டல், வாந்தி, தலைவலி உண்டாகக் கூடும்.

இந்த அறிகுறி ஏற்பட்டால் உடனே கண்மருத்துவரிடம் போவது நல்லது. இல்லாவிட்டால் நோய் வீரியம் பெற்று, பார்வையை இழக்க நேரிடும்.

கண்ணில் உள்ள திரவ அழுத்தம் சாதாரணமாக இருக்கும் போதுகூட சிலசமயம் பார்வை நரம்பு பழுதாகும் நிலை ஏற்படும். இது பார்வை நரம்புக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் நாளங்கள் குறுக்கமடைவதால் உண்டாகிறது. நீரிழிவும் இதற்குக் காரணமாக இருக்கிறது.

கண்ணில் எரிச்சல், வீக்கம், கண்புரை, காயம்படுதல், திரவவடிகால் பழுதடைதல் காரணமாகவும் இந்த நோய் உண்டாகிறது. இதனைக் குணப்படுத்த, நீரிழிவு உட்பட அடிப்படை நோயுடன் சேர்த்து மருத்துவம் செய்தாக வேண்டும். இளம் வயதினரையும் குழந்தைகளைக் கூட இது பாதிக்கும்.

தாயின் கருப்பையில் குழந்தை இருக்கும் போது கண்திரவ வடிகால் குழாய்கள் தவறாகவோ அல்லது முழு வளர்ச்சி அடையாமலோ அமைந்தாலும் இந்த குறைபாடு உண்டாகும். இந்த குறைபாடு உள்ள குழந்தைகளின் விழி பெரிதாகும். விழிவெண்படலத்தில் மறைப்பு ஏற்படும். கண்ணீர் அதிகமாக வெளியேறும். வெளிச்சத்தைப் பார்க்க முடியாத நிலைமை ஏற்படும்.

கண்மருத்துவரிடம் குழந்தையைக் காட்டி கண்திரவ அழுத்தம், பார்வை நரம்பின் வடிவம், பார்வையின் தன்மை ஆகியவற்றைப் பரிசோதித்து அறியவேண்டும்.

பொதுவாக கண்திரவ அழுத்த நோய் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்களுக்கு அதிகம் வரும். ஏற்கனவே இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் சந்ததிகள், கிட்டப்பார்வை உடையவர்கள் ஆகியோருக்கு இந்த நோய் வரும் வாய்ப்பு அதிகம். இவர்கள் கண் மருத்துவரை சந்தித்துப் பார்வை இழப்பைத் தவிர்க்கலாம்.

கண் திரவ அழுத்த நோயாளர் [illegible] மருந்து சாப்பிட்டும், கதிர் (லேசர்) [illegible] நிவாரணம் பெற முடியும்.

# வன்னிரெக்கின் அறிவியல் பகிர்வு

Vanni Tech
Vanni Institute of Technology

## நிறுவனங்களின் குறுந்தூர வலையமைப்பு
## (Local Area Network with in Offices)

வயர்லஸ் (**Wireless**) வலையமைப்பில் வேக்குறுப் போன்ற அமைப்பை அமைக்கும்போது மையச்சாதனமாக Wireless access point பயன்படுத்தப்படும். படம் 06 இல் காட்டப்பட்டுள்ளது.




படம் 06

***பியற்றுப் பியர் (Peer to Peer)***

இரண்டு கணினிகள் மாத்திரம் தகவல்பரிமாற்றத் தொழினுட்பத்தில் இணைக்கப்பட வேண்டுமெனின் அவற்றை பியற்றுப் பியர் என்ற முறையில் இணைக்க முடியும். கணினிகளில் உள்ள Network Card உடன் Twisted pair கேபிளை இணைத்து தொடர்புகளை ஏற்படுத்தலாம். இந்தப் பியற்றுப் பியர் இணைப்பு மூலம் என்ன பயன்பாடுகளைப் பெறமுடியும் என்று நோக்கினால் இரண்டு கணினிகளும் தமக்கிடையில் கோப்புப் பரிமாற்று (File Chairing) முறை மூலமும் நெற் மீற்றிங் (Net meeting) முறை மூலமும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

**நா.நிரோஜன்**




பியற்றுப் பியர் (Peer to Peer)

***வேக்குறுப் வலைப்பின்னல் (Work group)***

இரண்டுக்கு மேற்பட்ட கணினிகள் மற்றும் கணினியுடன் தொடர்புடைய சாதனங்களை இணைக்கமுறற்படும்போது வேக் குறுப் முறையே துணை போகின்றது. இம் முறையை நிறுவும் போது ஒரு மையச் சாதனத்தை பயன்படுத்த வேண்டி ஏற்படுகின்றது. இந்த மையச்சாதனமாக Hub அல்லது சுவிச் (Switch) பயன்படுத்தப் படுகின்றது. இவற்றில் காணப்படும் RJ45 இணைப்பான்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் கணினிகள் Twisted Pair கேபிளின் மூலம் இணைக்கப்படுகின்றன. இது ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பில் குறுந்தூரத்தில் காணப்படுவதாலேயே இது குறுந்தூர வலைப்பின்னல் அமைப்பு எனப்படுகின்றது. இங்கு எல்லாக் கணினிகளிலும் சமமான அதிகாரங்கள் காணப்படும். அதாவது பிரதான நிர்வாகி இருக்கவேண்டிய தேவையில்லை. கணினிகள் மாத்திரமல்லாது பதிப்பான் பிறின்றர், ஸ்கானர் போன்ற இலத்திரனியல் சாதனங்களையும் பொருத்த முடிகின்றது.


எனவே நிறுவனத்தில் இதன் பயன்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்று பார்த்தால் ஒரு கட்டத்திற்குள் அடங்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பல்வேறு பகுதிகள் காணப்படுகின்றன. எனவே ஒவ்வொரு பகுதிகளிலும் இருந்து ஒரே பிறின்ரரைப் பயன்படுத்திப் பிறின்ற் எடுத்துக் கொள்ள ஆதாரமாக அமைகின்றது. இதனை விடச்சாதனங்களைப் பகிர்தல் முறை மூலமும் இங்கு தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகின்றது. அதாவது நிறுவனங்களின் வேலைத்தளம், சேமிப்பு இடம், நெட்வேக் துணைக்கருவிகளாகிய பிறின்ரர் மற்றும் CD றொம்கள் போன்றவை பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. அத்தோடு கோப்பு பகிர்ந்திடுதல் (File Sharing) ஒரு கணினியிலிருந்து இன்னொரு கணினிக்குக் கோப்புகளை எளிதாகப் பரிமாற்றுதல் மூலம் வேலைகள் இலகுபடுத்தப்படுகின்றன. குறித்த ஒரு கோப்பை பல பாவனையாளர்கள் ஒரே நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. அத்துடன் இணையப் பகிர்வை (Internet sharing) மேற்கொள்ளவும் இவ்வலைப் பின்னல் முறை சாத்தியமாக அமைகின்றது. தூர இடங்களில் பகுதிகளை கொண்டமைந்துள்ள (மாடிக் கட்டடங்கள்) நிறுவனங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட Hub Or Switch ஐ பயன்படுத்தி அவற்றுக் கிடையிலும் இணைப்புக்களை ஏற்படுத்த முடிகின்றது. இந்த வேக்குறுப் முறையை வயரலஸ் (Wireless) வலையமைப்பிலும் இணைக்க முடியும். அவ்வாறு இணைக்கும் போது படம் 07 இல் காட்டிய வாறு அமையும்.




வேக்குறுப் வலைப்பின்னல் முறை (Work group)

***கிளைன் சேவர் வகை வலைப்பின்னல் (Client Sever)***

இந்த வலைப்பின்னல் முறை முன்பு கூறப்பட்ட முறை போலவே இருந்தாலும் மையச் சேமிப்பகம் எனும் பிரதான சாதனத்தைக் கொண்டுள்ளதால் முன்னர் கூறப்பட்ட இரு முறைகளிலும் பார்க்க வசதி வாய்ப்புக்கள் சில அதிகமாகவே காணப்படுகின்றன. நிறுவனங்களில் சேவருடன் கூடிய வலையமைப்பைப் பயன்படுத்துவதற்கு நிச்சயம் நிர்வாகி ஒருவர் தேவை. அவருக்குக் கீழ் இரண்டு வகையான பாவனையாளர்கள் காணப்படுவர். அவர்கள் பவர் யூசர், யூசர் ஆகும்.




படம் 07

இவர்களில் பிரதான நிர்வாகியிலும் குறைவான அதிகாரங்கள் பவர் யூசருக்கும் அவரை விடக் குறைவான அதிகாரங்கள் யூசருக்கும் வழங்கப்பட்டிருக்கும். எனினும் பிரதான நிர்வாகி (Administrator) தான் இவர்கள் இருவரையும் நிர்வகிக்க முடியும். முன்னர் கூறப்பட்ட இரு வலைப்பின்னல் முறைகளுடனும் ஒப்பிடும் போது அங்கு பாவனையாளரில் எந்தவித பேதமும் இருக்காது. எல்லாப் பாவனையாளரும் சமனான அதிகாரத்தையே கொண்டிருப்பார்கள்.

எனினும் இம்முறையில் காணப்படுகின்ற நன்மைகள் பற்றி நோக்குகின்ற போது ஒரு கிளையன் சேவர் வலையமைப்பில் பங்கு கொண்டுள்ள எல்லா பாவனையாளர்களும் தங்களுக்கென ஒரு பகுதியை சேவரில் இருந்து பெற முடியும். அத்துடன் குறிப்பிட்ட வலைப் பின்னலுக்குள் உட்பட்ட அனைத்துக் கணினிகளிலும் ஒவ்வொரு பாவனையாளரும் தமது வேறுபட்ட யூசர் நேம் (User Name), பாஸ்வேட் (Password) என்பன மூலம் திறந்து தமது வேலைகளைச் செய்ய முடியும். (தொடரும்...)

## இன்றைய உலகில் இணையம்



சி.ஜனனி
வி.கலைமதி

இணையம் என்பது கணிப்பொறி வலைகளை இணைக்கும் பெரியவலை. இணையத் தளம் என்பது இந்த வலையைப் பயன்படுத்திப்பெறக்கூடிய இணைந்த பக்கங்கள் என்று எண்ணுமளவிற்று அது பிரசித்தமாகிவிட்டது. இணையத்தளத்தில் உலவும் வசதிபடைத்த மென்பொருட்களான நெஸ்கேப், நேவிகேற்றர் போன்றவைகளில் இணைய வசதிகளான மின்னஞ்சல் (E-mail) போன்றவைகளும் இருப்பதால் குழப்பம்.

உலகத்தில் நிறைய கணினிகள் இருக்கின்றன. உலகில் 150 நாடுகளிலுள்ள சுமார் ஆறுகோடி மக்கள் இன்று இணைய இணைப்பைப் பயன்படுத்துகிறார்கள். இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இந்த இணைப்புக்கு ஒவ்வொருவரிடமும் ஒரு கணிப்பொறி இருக்கிறது. ஓர் அலுவலகத்தில் பதினைந்து கணினிகள் இருக்கின்றன. அவைகளை ஒன்றுக்கொன்று செய்திகளைப் பரிமாறிக்கொள்ள அதன் மொழியில் பேசிக் கொள்ள இணைக்கின்றோம். இந்த இணைப்பையே வலைப்பின்னல் (**network**) என்போம். இந்தச்செயல் உலகெங்கும் விரியும் போது எல்லோரும் எல்லோருடனும் இணைகின்றார்கள்.

(தொடரும்...)

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் அமைப்பினால் நிறுவப்பட்ட ஓர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் ஆகும். வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம் ஆனி மாதம் 2003ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிறுவகத்தின் இலக்குகள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை கற்பிப்பதும், உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், அவர்களை சர்வதேச சந்தையில் போட்டிக்குத் தயார்ப்படுத்துவதும் ஆகும்.

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின்

மூன்றாம் தொகுதி மாணவர்களினால்

தயாரிக்கப்பட்ட கணினி அறிவூட்டல்

சம்பந்தமான இலத்திரனியல் வலையமைப்பு மென்பொருள் ஆகிய பிரிவுகளில் பெரும்பாலும் 9ஆம், 10ஆம் ஆண்டு மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப பாடவிதானத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இது மாணவர்கள் தங்களின் வீடுகளில் இருந்தவாறே தொழில்நுட்ப அறிவை விரிவடையச் செய்யும்.

## ஆர்வமூட்டும் இலத்திரனியல்


ஆர்வம் என்பது தானாகப்பிறப்பதில்லை அதனை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும். அந்த வகையில் வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இலத்திரனியல் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் நாம் இளையமாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி விடக்கூடியவகையிலும் எமது மக்களைத் தொழில்நுட்பத்தில் ஈடுபாடுடையவர்களாக ஆக்கும் நோக்கிலும் மின்சாரத்தைப்பற்றியும் பொழுதுபோக்கு மின்சுற்றுக்கள்பற்றியும் பத்திரிகை வாயிலாக உங்கள் அறிவிற்கு விருந்தளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

### நாங்களும் மின்சாரத்தை அறிய முடியாதா?

நாமும் எமது நாட்டை ஒளிமயமாக்கி முதலாந்தர நாடுகளையும் விஞ்சவேண்டுமெனில் தொழில்நுட்ப வளர்ச்சியில் மேலோங்க வேண்டும் என்பதே இன்றைய உண்மை. நவீன உலகின் தொழில்நுட்பத்தில் ஆதிக்கஞ்செலுத்துவது மின்னியலும் இலத்திரனியலும் என்பதை நாம் உணர வேண்டும். அதாவது, உலகத்தை உங்களது கைகளுக்குள் வைத்திருப்பது மின்சாரம் என்றால் மிகையாகாது.

மின்சாரம் இல்லாவிட்டால் உலகம் அழிந்துவிடும். மனிதன் உயிர்வாழ முடியாது எனும் நிலையில் மின்னாற்றல் எம்மை ஆதிக்கஞ்செலுத்துகிறது. தற்போது வளர்ந்து வருந்தொழில்நுட்பங்கள் அனைத்தும் இந்த மின்சாரத்திலேயே தங்கியிருக்கின்றன. நாம் வீடுகளில் சாதாரணமாகப் பயன்படுத்தும் தொலைக்காட்சி, வானொலி, மின்விளக்கு, கணினி, தொலைபேசி என எண்ண முடியா தளவிற்குப் பல்வேறு வகைகளாகப் பல்வேறு வடிவங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றோம். ஆகவே தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி எல்லாம் எம்மை ஆக்கிரமித்துவிட்டன என்பதற்கப்பால் மின்சாரம் எமது சம்சாரமாகிவிட்டது என்பதே உண்மை. அதனாலேயே மின்சாரத்தைப் பற்றி அறிய வேண்டும்.

(தொடரும்...)




வே.வசந்தகுமார், பி.மார்ஷல், வ.பிரசன்னா, பா.றஜீவ்குமார், கு.சதிஸ்போல், அ.திவாகரன், அ.திருக்குமரன், க.கோகுல்நாத்

# அரசியல் அதிர்வுகள்

-போஸ்-

## கோதாபயவும் மஹிந்தரும்

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகாவை இலக்குவைத்து இராணுவத் தலைமையகத்தில் தாக்குதல் செய்யப்பட்ட செய்தியை முதன்முதல் ஜனாதிபதி மஹிந்தருக்குத் தொலைபேசி ஊடாகத் தெரிவித்தவர் அவரது சகோதரர் கோதாபய ராஜபக்ஷவாம்.

செய்தியைக் கேட்டதும் கலவரம் அடைந்த மஹிந்தர் கவனமாக இருக்கும்படி எத்தனைதடவை அவருக்கு நான் சொல்லி இருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட குண்டு துளைக்காத ஆஊஙி கார் ஒன்றையும் அவருக்கு நான் கொடுத்திருந்தேன். என்று சொல்லிக்கொண்டே போனாராம் மஹிந்தர்.

அவரை இடைமறித்த தம்பியார் கோதாபய இராணுவத் தலைமையகத்துக்கு வெளியில் செல்லும்போதுதான் அவர் அந்தக் குண்டுதுளைக்காத ஆஊஙி வைப் பாவிப்பது வழக்கம் என்றும் இராணுவத் தலைமையகத்திற்குள் பயணம் செய்யும்போது பேஜோ 406ஐப் பாவிக்கிறார் என்றும் சொன்னாராம்.

## ஜே. வி. பிக்குள் முரண்பாடு முற்றியது

அரசுடன் இணைந்துகொள்ளுமாறு ஜே. வி. பிக்கு மஹிந்தர் விடுத்த கோரிக்கை கட்சியில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த பிளவை மேலும் தீவிரமாக்கவுள்ளதாம்.

அரச சுகபோகங்களை அனுபவிக்க விரும்பும் அணிக்கு கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமை தாங்குகின்றாராம்.

கட்சியின் கொள்கைகள் விலைபோகக்கூடாது என்று நம்பும் குழு கட்சியின் செயலாளர் சில்வின் சில்வா தலைமையில் இயங்குகின்றனவாம்.

ஜே. வி. பிக்கு வெளிநாட்டிலுள்ள ஆதரவாளர்களிடம் இருந்து பெருந்தொகை நிதி வந்து சேர்கின்றதாம். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முழுநேர உறுப்பினர்களைப் பராமரிப்பதற்கு வெளிநாட்டு நிதி பயன்படுத்தப் படுகின்றதாம்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஜே. வி. பி. உறுப்பினர்களிடம் மேலதிக நிதி சேகரிக்கச்சென்ற சோமவன்ச அமரசிங்க வாய்திறந்தபோதெல்லாம் ராஜபக்ஷவையும் அவரது அரசாங்கத்தையும் புகழ்ந்து தள்ளினாராம்.

*லண்டனில்உள்ள கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோது மஹிந்தர் திருப்திகரமாகப் பணியாற்றிவருகிறார் என்றும் ஜே. வி. பியின் கொள்கைகளுக்கு ஏற்ப பணியாற்றும் ஜனாதிபதி அவர்தான் என்றும் முழங்கினாராம்.

*அத்துடன் அமைச்சுப் பதவிகளை ஏற்று அரசாங்கத்தில் இணைவதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாகவும் அங்கு தெரிவித்தாராம்.

இவ்வாறு கட்சியின் ஐரோப்பிய சமூகத்தின் மத்தியில் அமரசிங்க ஆற்றிய உரை கட்சியில் இப்போது பலத்த நெருக்கடிகளை உருவாக்கியுள்ளதாம்.

## பெண் குண்டுதாரியின் சிம் கார்ட்

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு முடிவுகட்ட நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் பற்றிய விசாரணைகள் சூடுபிடித்துள்ளனவாம்.

இராணுவத் தலைமையகத்துக்குள் சென்று இராணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்தும் திட்டம் ஐந்து மாதங்களுக்கு முன்பே தீட்டப்பட்டு விட்டது என்று புலனாய்வுப்பிரிவினரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாம்.

அத்துடன் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் புகுந்துகொள்வதற்கு இந்தப் பெண் குண்டுதாரி எவ்விதமான தந்திரோபாயங்களைக் கையாண்டார் என்பதை அறிந்துகொள்வதில் புலனாய்வுப்பிரிவினர் அதீத ஆர்வம் காட்டுகிறார்களாம்.

தவிர இராணுவத் தளபதியின் வாகனத் தொடர்கள் புறப்பட்டுவிட்டது என்ற நியூசை குண்டுதாரிக்கு அவரது மொபைல்மூலம் சொன்னது யார் என்பது பற்றிய துப்பைத் துலக்கும் வேலையும் மும்முரமாக நடக்கிறதாம்.

தற்கொலைப் பெண்ணின் 'சிம்' காட்டும் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்துள்ளதாம். அதை வைத்துக்கொண்டு இவ்விடயத்தைக் கண்டுபிடித்து விடலாம் என்று நம்பப்படுகிறதாம்.

சம்பூர் கிராமத்தின்மீது குண்டுத்தாக்குதல்களை நடத்திவிட்டு இஸ்ரேலியத் தயாரிப்பு'கிபிர்' விமானங்கள் கொழும்புக்குத் திரும்பமுன்னர் தாக்குதல் பற்றிய செய்தி பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ட்ரோவுக்குத் தெரிந்துவிட்டதாம்.

அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்களவை தொலைபேசியில் தொடர்புகொண்டு விசாரித்தபோதுதான் இந்த விடயம் பற்றி முதன்முதலாக அவர் அறிந்துகொண்டாராம்.

ஆனாலும் மங்கள தன்னை முட்டாளாக்கிக்கொள்ளாமல் பூரணமாக முழுவிவரங்களையும் அறிந்தபின்னர் உங்களுடன் தொர்புகொள்கிறேன் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சருக்கு கூறி நிலைமையை நைஸாக சமாளித்து விட்டாராம்.

## இது பெரிய பிரச்சினை

அண்மையில் தமது பிரதித் தலைவர் கரு ஜயசூரியா தலைமையில் ஜனாதிபதியைச் சந்தித்தது ஐ. தே. கட்சியின் தூதுக்குழு. தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் குறித்து அவருடன் உரையாடியபோது பிணக்குவியலின்மேல் அரசியல் நடத்த தமது கட்சி விரும்பவில்லை என்றும் தேசிய பாதுகாப்பையும் இன அமைதியையும் கருத்தில் கொண்டு அரசாங்கத்துக்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்ததாம்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தற்போது யுத்தநிறுத்தம் நடைமுறையில் இல்லாதபோதும் அதைத் தொடர்ந்து பேணப்போவதாகவும் தெரிவித்தாராம்.

அத்துடன் ப்லண்டகோ அதுலட்டம அவில்லா காலர நேமேக்க லொக்கு பிரலியைக் (பாருங்கோ உள்ளுக்கே வந்து தாக்கிவிட்டார்கள் இல்லையா? இது பெரிய பிரச்சினை) என்றும் சொன்னாராம்.

அத்துடன் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தான் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி கூறியபோது அரச தரப்பில் இன்று ஒரே குரலில் கருத்துகள் தெரிவிக்கப்படவேண்டும் என்று கூறினாராம் கரு ஜயசூரியா.

உண்மைதான். ஜே. வி. பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளுடன் சில விடயங்களில் கருத்து முரண்பாடு உள்ளது. ஆனால் விரைவில் சீராக்கிவிடலாம் என்று கூறி விடயத்தை சமாளித்தாராம் ஜனாதிபதி.

## இந்தியத் தூதர் நிருபமாராவ்

சம்பூர் தாக்குதலைத் தொடர்ந்து மஹிந்தரைச் சந்தித்த இந்தியத் தூதர் நிருபமாராவ் இந்தியாவின் கவலையை அவருக்குத் தெரிவித்தாராம்.

இத்தகைய வான் வெளித் தாக்குதல் காரணமாக இந்தியாவுக்குள் நுழையும் அகதிகள் தொகை அதிகரிக்கும் என்றும் தமிழ் நாட்டுத் தேர்தல் அண்மித்துஇருப்பதால் மத்தியில் ஆட்சிசெய்யும் காங்கிரஸ் கட்சிக்கு இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினாராம்.

இதற்குப் பதிலளித்த மஹிந்தர் இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலே என்றும் அது முடிவுக்கு வந்துவிட்டதாகவும் கூறினாராம்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மஹிந்தரைத் தொடர்புகொண்டு அரச படைகளின் தாக்குதல் பற்றி விசாரித்தபோது விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கடல்வழியாக கடத்திவராமல் தடுப்பதற்கு இந்தியக் கடற்படையினர் உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டாராம். இந்தியப் பிரதமரும் அதற்கு ஆம் என்று பதிலளித்தாராம்.

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

சீனாவில் பீஜிங் நகர வர்த்தக மையத்தில் உள்ள கண்ணாடி வயலினை படத்தில் பார்க்கிறீர்கள். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 10 கலைஞர்கள் இணைந்து இரை5 உருவாக்கி உள்ளனர். இதன் மதிப்பு சுமார் 9 1/2 லட்சம் ஆகும்.



* * *

காதலில் தோல்வி அடைந்தவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காக அருங்காட்சியகம் (மியூசியம்) ஒன்று குரோசியா நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. டிராகன், ஒலிங்கா என்ற இரு நண்பர்கள் இணைந்து அமைத்துள்ள இந்த மியூசியத்தில் காதலில் தோல்வி அடைந்தவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ருசிகர கடிதங்கள், நினைவுப் பரிசுகள் போன்றவை சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பொருட்களின் அடியில் அவற்றை வழங்கியவர்களின் காதல் பிரிவு ஏன் ஏற்பட்டது என்பது பற்றிய குறிப்புகளும் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பார்க்கும் போது புதிதாக காதல்தோல்வியைத் தழுவியவர்கள் ஆறுதல் அடைவார்கள் என மியூசியத்தை உருவாக்கிய இருவரும் நம்பிக்கை தெரிவித்தனர்.

* * *

இன்டர்நெட் சூதாட்டங்களுக்கு கணனி தயாரித்த கோடீஸ்வரர் பட்டியலில் இடம் பிடித்துள்ளார் அனுராக் தீட்சித்.

34 வயதாகும் இவர் ஒரு கம்யூட்டர் என்ஜினியர். பிரிட்டனின் மிகப் பெரிய ஆசிய பணக்காரர்களின் பட்டியலில் 3 ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறார். ஆன்லைன் சூதாட்டத்தில் 70 ஆயிரம் பேர் ஈடுபட்டிருக்கின்றனர் என்கிறார் அனுராக் தீட்சித்.

* * *

தற்கொலை செய்து கொள்ளும் டி.வி நடிகைகளின் எண்ணிக்கை அதிகரிக்க, திடீரென உருவாகும் புதிய உறவுகளே காரணம் என்கிறது சின்னத்திரை உலகம். சினிமா நடிகைகள் தற்கொலை செய்வது அதிகமாக இருந்த நிலைமாறி டி.வி நடிகைகளின் தற்கொலைப் பட்டியல் நீண்டு வருகிறது.



இதையடுத்து டி.வி நடிகைகளின் கவுன்சிலிங்குக்கு ஏற்பாடு செய்தது சின்னத்திரை நடிகைகள் சங்கம். தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஷெலின் என்பவர் பயிற்சி அளித்தார். தற்கொலைச் சம்பவங்கள் இனி நடக்காது என நினைத்திருந்த நேரத்தில், வைஷ்ணவியின் முடிவு பலரை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

* * *

இரண்டு ஆண்டு கால வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் சுவிட்சர்லாந்து நாட்டில் இந்த ஆண்டு முதல் குணப்படுத்த முடியாத வியாதிகளால் அவஸ்தைப்படுவோருக்கு ஆஸ்பத்திரி வார்டுகளில் வைத்தே தற்கொலை செய்து கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. ஒரே நிபந்தனை, நோயாளியின் மனநிலை சீரானதாக இருக்க வேண்டும்.

* * *

பண்டைக்காலத்தில் ஐரோப்பாவில் கையெழுத்துப் போடுபவர்கள் முதலில் சிலுவைச் சின்னம் வரைந்த பிறகுதான் கையெழுத்துப் போடுவார்களாம். 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் பெயர் எழுதி கையெழுத்திடும் பழக்கம் வந்தது.

* * *

10 வயதே நிரம்பிய ஒரு சிறுவன் என்ஜினியரிங் கல்லூரியில் சேர்ந்துள்ளான். எங்கே தெரியுமா? சீனாவில்.

சிறுமிகள் 11 வயதிலேயே புகைப்பழக்கத்துக்கு அடிமையாகிறார்கள் என்று கூறப்படுகிறது. இங்கு அல்ல, பிரிட்டனில்.



* * *

உலகின் மிகப் பெரிய பொருட்காட்சிச் சாலை பிரிட்டனில் உள்ளது. 1678இல் ரால்ப் மாண்டேன் என்பவருக்காக கட்டப்பட்ட மாளிகையை, 1757 இல் பிரிட்டன் அரசு இங்கிலாந்து பொருட்காட்சிச் சாலையாக அறிவித்து விட்டது.

* * *

பொஸ்னியா நாட்டின் ஜெனிகா நகரைச் சேர்ந்த 52 வயதுப் பெண்மணி ஒருவர் குப்பைத் தொட்டியைக் கிளறிய போது 15 லட்ச மதிப்புள்ள நோட்டுகள் கிடைத்தன.

* * *

இன்னும் 200 ஆண்டுகளில் லண்டன் மாநகரம் கடலில் மூழ்கிப் போகும் அபாயம் உள்ளதாம்.

எத்தனை இரவுகள்
விழித்திருந்தேன்!
எத்தனை கனவுகள்
சுமந்திருந்தேன்!
இலவு காத்த
கிளியானேன்!
என் காதல்
கனவாகுமென்று
தெரிந்திருந்தால்
கற்பூரமாய் நான்
கரைந்திருக்க மாட்டேன்!
கல்லாகவே
இருந்திருப்பேன்!

* * *

இந்த மனித உள்ளம் இருக்கிறதே அது எப்போதுமே அமைதியில் நிலைத்திருப்பதற்கான ஆற்றலைப் பெற்றதாய் இருப்பதில்லை. அல்லல்படும் சமயங்களில் தான் அது அமைதியை விரும்புமே தவிர, அமைதியாய் இருக்கும் நேரங்களில் பரபரப்புக் கொள்வதிலேயே அது நாட்டம் உடையதாய் இருக்கும்.

* * *



"அந்த ஆள் ஏன் சாப்பாட்டை வேகமாக அள்ளிச் சாப்பிடறார்?"
"ஃபாஸ்ட்பு (Fast food) என்டு சொல்றதை தப்பா புரிஞ்சுட்டார்"

# அ.முகம்மது சமீமின் எனது இலக்கியத் தேடல்



அ.முகம்மது சமீம் இலங்கை - பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர். கல்வி கற்ற கொழும்பு சாகிராக் கல்லூரியின் விரிவுரையாளர், உப அதிபராகவும் பதவி வகித்து சில காலம் அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கைக் கல்விச் சேவையில் மாகாணப் பணிப்பாளராக இணைந்து கல்வி அமைச்சில் முதலாந்தரக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினார். தற்போது கொழும்பில் ஹறோ சர்வதேசக் கல்லூரியின் பணிப்பாளராகப் பணிபுரிகிறார்.

ஆசிரியர் அ .முகமது சமீம் அவர்கள் எழுதி, அடிக்கடி பத்திரிகைகளில் பிரசுரமான கட்டுரைகளின் தொகுப்பு 'எனது இலக்கியத் தேடல்' ஆகும்.




கைலாசபதியின் முற்போக்கு இலக்கிய இயக்கமும்- செ.கணேசலிங்கனின் நினைவுகள்- கைலாசபதியின் பார்வையில் கலை இலக்கியம்- தமிழில் தோன்றிய அற இலக்கியம் வர்க்கச் சார்புடையது. - நீர்வை பொன்னையனின் 'ஜென்மம்'- எழுபதுகளில் இலங்கையில் சிறுகதை வளர்ச்சி- நீ.பொ.வின் நாம் ஏன் எழுதுகின்றோம் - 'கைலாசபதியின்முன்னுரைகள்'- 90களின் கவிதை- என்.கே.ரகுநாதனின் 'பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி, தான் தோன்றிக் கவிராயரும், திருச்சிற்றம்பலக்கவிராயரும்- விஜயனின் அன்னையின் நிழல் யதார்த்த இலக்கியத்திற்கு முன்மாதிரி- மருதூர்கனி, மனிதநேயத்தின் ஆத்மா மறைந்துவிட்டது. முஸ்லிம் அகதிகளின் சோககீதம். ஒருமைப்பாட்டு கோட்பாடு - தேசிய இலக்கியம் என்பன 'எனது இலக்கியத் தேடல்' - என்ற நூலில் உள்ளடக்கமாகி உள்ள கட்டுரைகள் ஆகும். ஆழமானதோர் வாசிப்புக்கு வாசகர்களை இட்டுச்செல்லும் கட்டுரைகள் இவை.

அ. முகம்மது சமீம் மார்க்ஷிய சிந்தனையாளர். அதனை வெளிப்படையாகவே சொல்பவர். சிறுகதைகளை, நாவல்களை, கவிதைகளை அவர் மார்க்ஷிய சிந்தனை வீச்சின் கருவூலம் மூலமே அணுகுகிறார், விமர்சிக்கிறார்.

மக்கள் வாழ்வைப் பற்றிச் சொல்லாத இலக்கியம் இலக்கியமே அல்ல என்றும், சமூக வாழ்வின் வரலாற்று மாற்றத்திற்கு துணை போகாத சமூக நோக்கு அற்ற எழுத்தாளன் எழுத்தாளனே அல்ல வென்றும் அவர் அடித்துச் சொல்கிறார்.

முற்போக்கு இலக்கியம், முற்போக்கு இயக்கம், வர்க்க சார்பு, மார்க்ஷியப் பார்வை, பரிணாம வளர்ச்சி,யதார்த்த இலக்கியம்,முற்போக்காளர் யோசனை என ஒவ்வொரு கட்டுரைக்கும் அவர் பயன்படுத்தும் சொற்கள் அவர் ஆழ்மனதின் சிந்தனை ஓட்டத்தின் விளைவாக மேலெழும்பும் அலைகளாகவே இருக்கின்றன.

இலக்கியத்தை நல்ல இலக்கியம், நசிவு இலக்கியம் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். நல்ல இலக்கியம் மனித நேர்மையையும், சிறந்த தீர்க்க தரிசனத்தையும் கொண்டது என்றும், சிதைந்து சீரழிந்து வருகின்ற சமூகத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற இலக்கியம் நசிவு இலக்கியம் என்றும் ப. ஜீவானந்தம் குறிப்பிடுகின்ற கருத்தினை தனது முன்னுரையில் பதிக்கும் ஆசிரியர் சமீம், இந்திய நவீன இலக்கியத்தின் முன்னோடி முற்போக்கு இலக்கியப் படைப்பாளியொருவரை ஆழமாக நேசித்து ஏற்றுக்கொள்கிறார் என்பதைக் காணமுடியும்.

'நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்குழைத்தல்
இமைப் பொழுதும்
சோராதிருத்தல்' என்ற கவிபாரதியின் கவிதையினை முன் நிறுத்துவதில் அவர் மனம் பெருமை காண்கிறது.

'கலையானது மக்களுக்கு உரியதாகும். உழைப்பாளி மக்களிடையே அதன் வேர்கள் ஆழப்பதிந்திருக்க வேண்டும். அது அவர்களுடைய சிந்தனையையும்,சித்தத்தையும் ஒன்றிணைத்திட வேண்டும்' என்ற லெனினின் கலாசாரம், கலை தொடர்பான கருத்தையும் முன்வைக்கும் நூலாசிரியர் சமீம் எமது தமிழ் படைப்புகளையும் அவ்வாறே நோக்குகின்றார் என்பதைக் காணமுடியும். புனைக் கதைகளாகட்டும், கவிதைகளாகட்டும், கட்டுரைகளாகட்டும் அவை சமூக வரலாற்றை எவ்வாறு பரிசீலிக்கின்றன, விளங்கப்படுத்த முனைகின்றன என்பதே அவருடைய முதலாவது ஆய்வாக அமைகின்றது. அதன் உள்ளடக்கமே அவரின் ஆய்வின் முதற்கூறு . மார்க்ஷிய கருதுகோள் அவருடைய ஆய்வுக்கான திறவு கோலாகின்றது.

கதைகள், கவிதைகளிலும் அவருடைய தேடல் அதுவே. கதை என்னசொல்கிறது. பாத்திரங்களின் சமூகத்தளம் என்ன? என்ற இரண்டாவது கூறின் பின்னணியில் பாத்திரங்களின் யதார்த்தமான தன்மையைத் தேடுகின்றார்.




இதன் பின்னரே அவை குறித்த விமர்சன குறிப்புகளைத் தருகிறார். கதைகள் வெறும் ஆத்மதிருப்திக்காக அல்லது பொழுது போக்குக்கானவை அல்ல என்பது அவர் ஆய்வின் தேடுதலும், வலியுறுத்தலுமாகும்.

சமூக நோக்குடைய யதார்த்தமான சிறு கதைகளை, நாவல்களை கவிதைகளை, சமீம் உயர்த்திப் பேசுகிறார். அடை மொழியைப் பதித்து அத்தகைய இலட்சிய நோக்கம் படைத்த எழுத்தாளர்களை சிறந்த படைப்பாளிகள், சமூகசிந்தனைகள் எனப் போற்றுகிறார். இந்த வகையில் நீர்வை பொன்னையன், செ. கணேசலிங்கன், கே. டானியல், என்.கே.ரகுநாதன், இளங்கீரன், கே. விஜயன் என பல எழுத்தாளர்களையும்,அவர்களுடைய படைப்புகளையும் இந்நூலில் விதந்துரைக்கிறார்.

பேராசிரியர் கைலாசபதியின்மீது அவருக்கு ஆழ்ந்த பற்றுதலும், மரியாதையும் உண்டு என்பதை அவர்பற்றி எழுதிய கட்டுரைகளில் காணமுயும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனின் போராட்டத்தைச் சித்திரிப்பவைதான் இலக்கியம். இலக்கியத்தை மார்க்ஷிய கண்ணோட்டத்தில் பார்த்தவர்களில் ஒருவர்தான் பேராசிரியர் கைலாசபதி. அவருடைய வருகையின்மூலம் தமிழ் இலக்கிய ஆய்வில் மார்க்ஷிய நெறி உறுதிப்பட்டது என்ற இந்திய விமர்சகர் ஞானியின் கருத்தோட்டத்தை முதன்மைப்படுத்துவதன் மூலம் பேராசிரியர் கைலாசபதிக்கு புகழ்மாலை சூடுகிறார்.


தேசிய இலக்கியம், மண்வாசனை என்ற கருத்துகளை முன்வைத்தோடு, ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட

-கே.வி-

(17) பக்கம் பார்க்க....

# இரசித்ததும், சுவைத்ததும்

## ஒரு தேனான கானம்



திரையில் பாடலென்றால் சில நல்ல சினிமா விமர்சகர்களுக்கு கசக்கிறது. வீட்டிலிருந்து படம் பார்க்கும்போது பாடலை விரைவாக ஓடவிட்டே பார்க்கிறார்கள்.

கவியரசர் கண்ணதாசன் திரைப்படப் பாடலாசிரியராகத் திகழ்ந்தபோதும் மரபுக்கவிகளையும் இயற்றத் தவறவில்லை. இதன் காரணமாகவே கவிஞர் சுரதா அவரை 'திரையுலகக் கம்பன்' என போற்றிப் புகழ்ந்தார்.

கம்பர் ஒரு பாடலில் ஆறு தேன் வைத்தார்.

'ஆலைவாய்க் கரும்பின் தேனும்
அரிதலைப்பாளைத் தேனும், சோலைவாய் கனியின் தேனும் தொடைகிழி கிறாவின் தேனும்' என்று கம்பன் ஆறுதேன்களைகவித்துவமிக்க வரிகளாக்கினான்.


கண்ணதாசன் மிகவும் விரும்பிய கம்பன் கவிதைகளில் இதுவும் ஒன்று என்று பேராசிரியை டாக்டர் சரசுவதி ராமநாதன் தனது கம்பனும் கண்ணதாசனும் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இனி கண்ணதாசனின் வரிகளில் எத்தனை தேன் வழிந்தோடுகின்றன என்று பார்ப்போம்.

**பார்த்தேன்;** சிரித்**தேன்;** பக்கத்தில் அழைத்**தேன்;**
உனைத்**தேன்** என நான் நினைத்**தேன்**-
அந்த மலைத்**தேன்** இவள் என மலைத்**தேன்.**
**பார்த்தேன்; சிரித்தேன்**- பக்கம் **வரத்துடித்தேன்**
**நினைத்தேன்** என நான் **நினைத்தேன்**-அந்த
மலைத்**தேன்** இவர் என மலைத்**தேன்.**
கொடித்**தேன்** இனி எங்கள் குடித்**தேன்**-என ஒரு
படித்**தேன்;** பார்வையில் குடித்**தேன்**
துளித்**தேன்** சிந்தாமல் களித்**தேன்** கைகளில்
அணைத்**தேன்** அழகினை ரசித்**தேன்**
(பார்த்தேன்)
மலர்ந்**தேன்** போல் நானும்
மலர்ந்**தேன்** - உனக்கென
வளர்ந்**தேன்** பருவத்தில் மணந்தேன்
எடுத்**தேன்,** கொடுத்**தேன்,** சுவைத்**தேன்,** இனித்**தேன்**
இல்லாதபடி கதை முடித்தேன்
(பார்த்தேன்)

தேனான இந்தப் பாடல் சொல் விளையாட்டிலும் தேனாக இனிக்கிறது. நின்னை + (உன்னை) - தேன் - என நான் நினைத்தேன். மலையிலிருக்கும் தேன் என நான் மலைத்தேன் என பிரித்து பொருள் கொள்ளும்போதும் நாவில் தேன் இனிக்கிறது

அஷ்ரஃப்




# அடப்பாவமே பொமிலா கதைகளா?

பரபரப்பாக ஓடிக்கொண்டிருந்த சஞ்சாரியை இளம் படைப்பாளி ஒருவன் இடைமறித்தான்.

''என்ன அண்ணே! எங்கே ஓட்டம்?''

''கூட்டத்திற்கு''

''என்ன கூட்டம்?''

''இலக்கியக் கூட்டம் தான். கலாநிதி ஒருவர் செ. கணேசலிங்கனின் படைப்புகள் குறித்துப் பேசுவார்.''

''என்ன அண்ணே நீங்க. இன்னும் பழைய உலகத்திலே இருக்கீங்க. கலாநிதிகளாவது எங்கள் நாட்டுக்கதை, கதைகளை வாசிப்பதாவது''

நக்கலாகச் சிரித்தான்.

''பட்டங்களுக்காகவும், டிப்ளோமாக்களுக்காகவும் தலையை பிய்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு இதையெல்லாம் வாசிக்க ஏது அண்ணே நேரம். மேடையில் ஏறி கொஞ்சம் சுயபுராணம் பாடுவார்கள். மைக்கை விடச் சொல்லி இழுத்தாலும், அதை உடும்புப்பிடியாக கௌவிக்கொண்டு நிற்பார்கள்.''

''அடப்பாவி''

ஸ்ரீமான் அதிர்ந்து போனார்.

''ஆமா அது சரி நீ எங்கே?''

''சவோய் தியேட்டரிலே நல்ல கிளுகிளுப்பான படம் ஒன்று ஓடுதண்ணே, போகலாமே வாங்களேன்.''

''கிழிஞ்சுது போ'' ஸ்ரீமான் கூட்டத்திற்குப் பறந்தார்.

09.04.2006 (ஞாயிறு) பெண்கள் கல்வி ஆய்வு மண்டபம். மாலை 5.00 மணி. கலாநிதி செ. யோகராசா பேசிக்கொண்டிருக்கிறார். இலக்கிய ஆர்வலர்களும், எழுத்தாளர்களும் சபையில் கூடியிருக்கிறார்கள். எழுத்தாளர் செ. கணேசலிங்கனின் மகன் குமரனும் அங்கிருந்தார். எல்லோரும் உன்னிப்பாக கலாநிதி செ. யோகராசாவின் உரையை செவிமடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

விபவி கலாசார மையத்தின் ஏற்பாட்டில் முற்போக்கு கலை இயக்கியப் பேரவை இந்தக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது. ஈழத்து மூத்த படைப்பாளிகளில் ஒருவரான செ. கணேசலிங்கனின் படைப்புகள் குறித்து கலாநிதி செ. யோகராசா ஆய்வு செய்தார்.

''செ. கணேசலிங்கன் ஓர் இடதுசாரி கலை இலக்கிய முற்போக்குவாதி. மார்க்ஷிய தத்துவத்தை ஏற்றுக் கொண்டவர். அவருடைய ஆரம்பகால படைப்புகள், கீழ்தட்டு மக்கள், தொழிலாளர் வர்க்கம், சாதிப்பிரச்சினைகள் என்பவற்றை அடிநாதமாகக் கொண்டிருந்தன. என்றாலும் பின்னாளில் எழுதப்பட்ட அவருடைய சிறுகதைகளிலோ, நாவல்களிலோ அந்த வீச்சைக் காணமுடியவில்லை. அநேகமான கதைகள் ஒரே மாதிரியான காதலைப் பின்னணியாகக் கொண்டிருந்தன. காதல் கதைகள் எழுதக்கூடாது என்பது அல்ல. மார்க்ஷியத்துடன் பெண்ணிலை வாதத்தை அவர் முன்வைக்க முனைந்ததன் விளைவு இது.''

கலாநிதி செ. யோகராசாவின் விமர்சன விளாசலின் இரத்தினச் சுருக்கம் இது.

'என் தாய் கேட்டிருக்க வேண்டும் இதை' என கட்டப்பொம்மன் திரைப்படத்தில் சிம்மக்குரலோன் சிவாஜி உறுமுவதைப் போல அந்த அருமையான உரையை 'அந்த கிளுகிளுப்பு சினிமா இரசிகன்' கேட்டிருக்க வேண்டும் என கர்ஜிக்க வேண்டும் போலிருந்தது. தம்பி மூக்கல்லோ உடைபட்டிருப்பான்.

கலாநிதிக்கு பாராட்டுக்கள். செ. கணேசலிங்கனின் அனைத்து நூல்களையும் அவர் வாசித்திருக்கிறார். ஆழ அகலித்த வாசிப்பு, அதன் பின்னர் விமர்சனம் பாராட்டத்தானே வேண்டும். எங்கள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கலாநிதிகள் ஆகியோரை எமது எழுத்தாளர் ரொம்பவும் மட்டமாக அல்லவா எடை போட்டிருக்கிறார்கள். அடக்கடவுளே! இது நல்லதல்ல.

* * *

சபையோர் கருத்தரங்கில் ஈடுபடும்வேளை, ஒருவரும் ஆரம்பித்து வைக்கும் சங்கை ஊதுவதாகக் காணோம்.

''என்ன சீமான் உமது சிண்டு முடிச்சை ஆரம்பியுமே'', என பக்கத்து ஆசன வயோதிபம் தொடையைக் கிள்ள, சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டியாக அடியேன் அவதாரமெடுக்க, புற்றுப் பாம்புகளென முரண்பாட்டுப் பாம்புகள் சீறிச்சினந்து எழுந்தன.

தலைமை வகித்துக் கொண்டிருந்த பெண்ணிலைவாத ஆய்வாளர் செல்வி திருச்சந்திரன், தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்பு வல்லுனரான சிவகுருநாதன், எழுத்தாளர் நீர்வை பொன்னையன், எழுத்தாளரும்(கற்பகம் சஞ்சிகை) ஆசிரியருமான தா. சிவசுப்பிரமணியம், ஆய்வாளர் நா. ரவீந்திரன், இலக்கிய ஆர்வலர் பாக்கியன் என பலரும் கருத்து மோதலில் கலந்து கொண்டார்கள்.

'நாங்கள் சமூக நோக்கமுடன் இலக்கியம் படைக்க இவரென்ன கொம்பன் இதற்குள் குறை கண்டுபிடிக்க குடைகிறார்' என்ற கோபம் சிலரின் பேச்சில் உறங்கிக் கிடந்தது.

''திருக்குறள் கதைகள் எழுதுவது போல, முற்போக்கு எழுத்தாளர்களில் சிலர் மார்க்ஷியப் பொமிலா கதைகள் எழுதுகிறார்களா? அவர்களின் கதைகள் சமூக யதார்த்தத்துடன் ஒட்டியும் ஒட்டாத தொப்புற் கொடி உறவுகளாக இருக்கின்றனவே''

இது சீமானின் கேள்வி.

''அப்படிப்போடு'' என சிலர் சபையில் தலை ஆட்டினார்கள்.

(17) பக்கம் பார்க்க....

# தலைமையின் ○○○

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பாதுகாப்பு நிலைமை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளமை பற்றி கவலைஅடைந்துள்ள இந்தியா இங்கு தோன்றியுள்ள அசாதாரண நிலை குறித்து முக்கிய சந்திப்புகளையும் நடத்தியிருக்கிறது.

கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி மஹிந்தருடன் தொடர்புகொண்டு இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத் தியுள்ளார்.

''அரசியல் வன்முறையை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இன நெருக்கடிக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தையே சிறந்தது'' - இவ்வாறு அவர் மஹிந்தருக்கு அறிவுறுத் தியிருக்கிறார்.

நெருக்கடியான நேரத்தில் பாகிஸ்தான் எமக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்துள்ளது என தனது பாகிஸ்தான் விஜயத்துக்குப் பின்னர் மஹிந்தர் வெளியிட்ட கருத்தும் இந்தியாவின் நெஞ்சை உறுத்தியிருக்கும். குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சிக்கும் பாகிஸ்தானின் எண்ணங்களைப் புரிந்துவைத்துள்ள இந்தியா எதிர்காலத்தில் தனது மென்போக்கை கைவிட்டு இராஜதந்திர வழிகளில் இலங்கை மீது கடும்போக்கைக் கைக் கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கலாம்.

இவ்வாறு விரிந்துவரும் கள நிலையில் ஐரோப்பிய நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடைசெய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடமும் சமாதானப் பேச்சுவார்த்தையில் அவர்களைப் பங்குபற்றச் செய்வதற்கு அழுத்தம் கொடுக்கும்படி இணைத்தலைமை நாடுகளிடமும் கோரிக்கை விடுப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான கலாநிதி பாலித கொஹன தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் வெவ்வேறு பெயர்களில் இயங்கும் புலிகள்அங்கு திரட்டுகின்ற நிதிகளைக்கொண்டு பல்வேறு வகையான பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றனர் என்று ஊடக அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தரப்பில் இருந்து வெளிப்படும்இவ்வகையான கருத்துகள் வெந்த புண்ணில் வேல் பாச்சுவனவாக இருப்பதுடன் சமாதானப்பேச்சில் விடுதலைப்புலிகள் வைத்துள்ள நம்பிக் கையையும் சிதறடிக்கவைக்கின்றன. சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு இருதரப்பினருக்குமிடையில் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப இத்தகைய கருத்துகள் ஒருபோதும் உதவப் போவதில்லை.

தேசபக்தி என்றும் நாட்டின் இறைமை என்றும் கூறி இவ்வாறான நச்சுக் கருத் துகளே தென்னிலங்கை அரசியல் சக்திகளால் விதைக்கப்படுகின்றன.

எனவே, தற்போது இராணுவத்தரப்பு கட்டவிழ்த்துள்ள வன்முறைகளையும் மற்றும் அரச அதிகாரிகள் வெளியிடும் வரம்பு மீறிய கருத்துகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மஹிந்தர் தவறுவாரேயானால் நாட்டின் எதிர்காலம் நிச்சயம் சூனியமாகவே இருக்கப்போகிறது.

# போரா? சமாதானமா? ○○○

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

மென்போக்கை அல்லது நெகிழ்ச்சிப் போக்கை கைவிட்டு, அரசாங்கத்தின் அராஜகத்தை உடைத்தெறிந்து நியாயத்தை நிலைநாட்ட முன்வர வேண்டும். அது தற்போது பின்பற்றும் மெத்தனப்போக்குத் தான் இப்போது தென்னிலங்கையை சன்னதம் கொண்டு ஆடவைத்துள்ளது. என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

## விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும்

இந்த ஆட்டத்தின் ஓர் அங்கமாக ஐரோப் பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாடுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளது இலங்கை அரசு.

மஹிந்தரின் வெளி உறவு அமைச்சர் மங்கள சமரவீர, தான் போகும் வெளி நாடுகளில் எல்லாம் புலித்தடை பற்றியே உரக்க குரல்கொடுத்து வருகிறார்.

மேற்கு நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளில் புலிகளுக்கு தடை ஏற்படுத்துவதன் மூலம் புலிகளின் வாலை ஒட்ட நறுக்கிவிடலாம் என மனப்பால் குடிக்கிறது தென்னிலங்கை.

ஆனால் இந்தகைய தடையை புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் ஏற்படுத்து மானால் அது பாரிய பின்விளைவுகளுக்கு காரணமாக அமைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

*அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பகை உறவு நிரந்தரமானதாக மாறிவிடும்.

* புலிகளுடன் ஐரோப்பிய ஒன்றியத்துக் குள்ள நல்லுறவு சீர்குலைவதுடன் புலிகள் மீது ஒன்றியம் செலுத்தக்கூடிய செல்வாக்கு, அழுத்தம் போன்றவற்றையும் இழக்க நேரிடும்.

இவ்வாறானதொரு நிலைமை உருவாகும் பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகளுடன் வைத்துள்ள நேரடித் தொடர்பாடல் வசதிகள் அனைத்தையும் இழந்து அறிக்கைகளை மட்டும் வெளியிட் டுக்கொண்டு இருக்க வேண்டிய துரதிர்ஷ்ட வசமான நிலைக்குத் தள்ளப்படலாம்.

பேரினவாதிகளை இறுக அணைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஊடாக தீர்வுகாண் பதற்கு சர்வதேசம் அழுத்தத்தைப் பிரயோகிக் கும் என்று பூச்சாண்டிகாட்டி விடுதலைப் புலிகளை பணியவைக்க அரசு தரப்பு நினைக்குமானால் அது தன்னையே தான் ஏமாற்றிக் கொள்கின்றதே அன்றி வேறொன் றும் இல்லை.

## மேற்கு நாடுகளின் பணி

எனவே, இன்றைய களநிலையில் இணைத்தலைமை நாடுகள் வெறும் கண் துடைப்பு அறிக்கைகளை மட்டும் வெளியிட் டுக் கொண்டு இருக்காது துடிப்புடன் செய லாற்ற முன்வர வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக சமஷ்டித் தீர்வின் அடிப்படையில் பிரச்சினைக் குத் தீர்வுகாண ஆவன செய்ய வேண்டும்.

மஹிந்தர் சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்கப்போவதாகத் தொடர்ந்து கூறி வருகிறாரே அன்றி அது தொடர்பாக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. பேரின வாத அரசியல் கலாசாரத்தின் பின்னணியில் வளர்ந்த அவரால் தமிழ் மக்களுக்கு கௌரவ மான சமாதானத்தை எப்படி ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

யுத்தமே பிரச்சினைக்கு பரிகாரம் என்பதை வெளிப்படையாக மஹிந்தர் அறிவித்தா னால் தாமும் அந்த நிலைமையை எதிர்கொள் ளத் தயாராக இருப்பதாகவே விடுதலைப் புலிகளும் அறிவித்துள்ளனர்.

போர் என்றால் போர் என சிங்கள தேசம் முழங்கிய காலம் மலையேறிவிட்டது. இப் போது தமிழ் தேசம் போர் என்றால் போர் என முரசம் அறைகிறது. சமாதானமா? போரா? தெரிவு மஹிந்தரின் கைகளிலேயே. அச்சுறுத் தல்கள் மூலம் தமிழ் இனத்தை அடிபணிய வைக்க முடியாது என்பதை மஹிந்தர் அனுபவம் மூலம் உணர்ந்து கொள்ளும் காலம் விரைவில் மலரும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 210

சொற்சிலம்பம் 210 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் மே 14 ஆம் திகதி ஆகும். விடைகள் மே 21ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 28ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.208க் கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக் காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப் படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ் டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படு வார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

'சுடர் ஒளி'

85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 208

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | ர | 2 சா | 3 ர | ம் | ■ | 4 ம | 5 து |
| ர | ■ | 6 ம | தி | ■ | 7 பா | ல | ம் |
| 8 மா | 9 த | ர் | ■ | 10 கு | ட | ம் | பி |
| 11 த | ரி | த் | 12 தி | ர | ம் | ■ | க் |
| ம் | ■ | 13 தி | ட | ல் | ■ | 14 கு | கை |
| ■ | 15 கா | ய | ம் | ■ | 16 சி | று | ■ |
| 17 கா | ல | ம் | ■ | 18 ந | ர | ம் | 19 பு |
| 20 து | ணி | ■ | 21 கொ | டு | ம் | பா | வி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 210

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | | 15 | | | ■ |
| 16 | | ■ | 17 | | | ■ | 18 |
| 19 | | | ■ | | ■ | 20 | |
| 21 | | ■ | 22 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.210

### இடமிருந்து வலம்

1. வீரதீரச் செயல்
4. மிகுந்த
7. முனிவர் இயற்றுவது.
8. ஒருவரின் வதனத் தோற்றத்தின் பலன்
9. சரஸ்வதி
11. ரக
12. மரம்
13. சமுத்திரம்
14. சிங்கக் கதிரை
16. பின் அல்ல
17. மேடு/களம்/மைதானம்
19. நித்திரையில் காண்பது
20. தடிமன் பிடித்தால் வருவது
21. தாங்கள்
22. ஒன்றின் பெயரால் மற்றொன்று அழைக்கப்படுவது

### மேலிருந்து கீழ்

1. பாதகம் அல்ல.
2. துன்பத்தால் வருவது.
3. இணக்கச் சொல்
4. உள்
5. தமிழகம் இதற்குள் அடங்கும்
6. ஊறுதல்.
8. இது காலில் குத்தும்.
10. இறுதிச் சடங்கு.
13. நெருப்பு
14. தேர்தலில் வேட்பாளருக்கு ஒதுக்கப்படுவது; கட்சி சார்ந்தோருக்கு கட்சிகுரியது கிட்டும்.
15. கிரியை
16. முன்னிலையில்
18. பனி காலம் வந்து விட்டால் இது வாட்டும்.
20. ஒழித்தல் குறி

## சொற்சிலம்பம் போட்டி இல. 207

1. எ.இரட்ணம், மே/பா. ந.இராசலட்சுமி, இராமநாதன் ஒழுங்கை, கோப்பாய் தொற்கு, கோப்பாய்.
2. ச.சுகன்யா, இல.42, முகமதியா நகர், மட்கோ, திருகோணமலை.
3. ர.சாயிசரண்யா, 'லக்ஷ்மி' பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

### பாராட்டுப் பெறுவோர்

1. ஆர்.ரஞ்சினி, இல.50, அருளம்பலம் வீதி, அரியாலை.
2. எஸ்.வரதராஜன், மணிமேகலை இல்லம், வந்தாறுமூலை.
3. கே.ஏ.வரன், யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன், புத்தூர்.
4. சு.பால்ராஜ், அரசரத்தினம் பாடசாலை, புதுக்குடியிருப்பு.
5. இரா.இறையானன், தென்னிந்திய திருச்சபை, கொக்குவில்.
6. எஸ்.எஸ்.பவானந்தன், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
7. து.சாம்பவி, மயிலாணி, சுண்ணாகம்.
8. பா.நியூட்டன் சதீஷ், மீசாலை கிழக்கு, மீசாலை.
9. சே.இந்திராணியம்மா, தாமரைக்குளத்தடி, துன்னாலை, கரவெட்டி.
10. பொ.நமச்சிவாயர், திருநெல்வேலி, யாழ்.

# எனது இலக்கிய....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

உழைக்கும் வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக இலக்கியம் பயன்பட வேண்டும் என்ற பேராசிரியர் கைலாசபதியின் கருத்தினை முழுமையாகவே உள்வாங்கிக் கொண்டுள்ள முகமது சமீம் அவர்கள் தனது விமர்சனக் குறிப்புகளை அவ்வகையில் வகுத்துக்கொண்டு தனது படைப்புகளை முன்கொண்டு செல்கிறார். தனது பக்தி எழுத்துக்களை இவ்வாறு விரிவாக முன்கொண்டு செல்வது, ஒரு முக்கியமான வரலாற்றுக் கடமையாகும் என்பதை மறுத்தல் இயலாது. அதன்மூலம் நமது புனைக்கதை உலகம் உன்னத நிலையை எய்துவதற்கான வழி அமைக்கப் படுகின்றது. மேலும் அவருடைய பல இலக்கியத் தேடல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

'எனது இலக்கியத் தேடல்' நூலாசிரியரான அ. முகம்மது சமீம் இலங்கை கல்விச் சேவைக்குப் பெரும் பங்களிப்பு செய்தவர்; செய்து கொண்டிருப்பவர். வரலாற்றுடன் இலக்கியம் அவருடைய உயிர் நாடியாக அமைந்துள்ளது.

பதுளை அவருடைய பிறப்பிடம். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றை சிறப்புப் பாடமாகக் கொண்டவர். கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் விரிவுரையாளர், உப அதிபர் பின்னர் அதிபர் பதவி வகித்தவர். இலங்கை கல்விச்சேவையில் மாகாணப்பணிப்பாளர், கல்வியமைச்சில் முதலாம் தரக் கல்விப்பணிப்பாளராகக் கடமை புரிந்தவர். இன்று ஹரோ சர்வதேசக் கல்லூரியில் பணிப்பாளராகப் பணி புரிகின்றார்.

'ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்' என இவரால் நான்கு பாகங்களாக வெளிவிட்ட நூல் இவர் வெளியீட்டவைகளில் பிரதானமானதாகும். தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்கள் எழுதியுள்ளார். 'இஸ்லாமியக் கலாசாரம்', 'இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள்', 'விமர்சனக்கட்டுரைகள்', 'எனது இலக்கியத் தேடல்' என்பன இவருடைய படைப்புகளாகும்.

# அடப்பாவமே....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

''மார்க்ஷ் டாஸ், கெப்பிட்டல் எனும் நூலை எழுதினார். இது தொழிலாளர் வர்க்கம் பற்றியதோர் அற்புதமான படைப்பு. ஆனால் மார்க்ஸ் ஒரு தொழிலாளி அல்ல, மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்''. 'செல்வி திருச்சந்திரன்' என நையாண்டி செய்வது போல சபைக் கருத்துகளுக்கு ஓர் உந்துவிசை ஆனார்.

''தொழிலாளர் வர்க்கப் பிரச்சினைகள், தீண்டாமை, சாதியம் பற்றியெல்லாம் எமது படைப்பாளிகள் எழுதியிருக்கிறார்கள். இவை வெறும் கற்பனைகள் அல்ல. மக்களோடு மக்களாக வாழ்ந்து பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடுகள்.'' இப்படிச் சொன்ன நீர்வை பொன்னையனின் குரலில் சீற்றம் இருந்தது.

''தமிழ் எழுத்தாளர்கள் வெறும் கற்பனைக் கதைகளைத்தான் எழுதுகிறார்கள் என்று சிங்கள விமர்சகர்கள் கூறுகிறார்கள். இதற்காக கீழ்த்தட்டு சமூகக் கதைகள் எழுதுபவர்கள் அந்த சமூகத்தில் இருந்து உதிக்கவேண்டும் என்பது பிழையான கருத்தாகும்'' என்றார் சிவகுருநாதன்.

''எல்லாவற்றுக்கும் அடிப்படைக்காரணம் அழகியல் கோஷம்தான்'' என ஆய்வாளர் ரவீந்திரன் கொஞ்சம் வெறுப்பாகவே சொன்னார்.

''எழுத்தாளர் பாலமனோகரனின் நிலக்கிளி ஓர் அற்புதமான படைப்பு, மண்வாசனையுடன் எழுதப்பட்டுள்ளது. சீமான் சொல்வதுபோல சமூகத்திலிருந்து அல்லது அதே சமூகத்துடன் இரண்டறக்கலந்தவர்களால் மட்டுமே அவ்வாறு யதார்த்தமாக எழுத முடியும்.'' என்றார் இலக்கியன்.

முரண்பாடான கருத்துகளின் மோதலாக கருத்தரங்கு சுவாரஸ்யமாக இழுபட்டு முடிவுக் கட்டத்தை எட்டிக் கொண்டிருந்த வேளையில் நன்றி நவில எழுந்த கற்பகம் சஞ்சிகை ஆசிரியர் த.சிவசுப்பிரமணியத்தின் குரல் ஒலித்தது.

கைலாசபதியுடன் இருந்தது, உரையாடியது, சொ.கணேசலிங்கனின் சமூகவுணர்வு மிக்க முதலாவது சிறு கதையை கற்பகம் சஞ்சிகையில் பிரசுரித்தது போன்ற சம்பவங்களையெல்லாம் அசை போட்டவண்ணம் பிட்டுப் பிட்டு வைத்த அவர், ''இடதுசாரி முற்போக்கு கலை இலக்கியவாதிகள் சமூகஉணர்வுடன் மட்டுமல்லாது, கீழ்தட்டு மக்கள், தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் ஆகியோருடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தே தமது படைப்புகளை வெளிக்கொணர்ந்தார்கள் என்பதை எந்தக் கொம்பனும் இருட்டடிப்புச் செய்ய முடியாது'' என்ற தொனியில் ஒரு சட்டத்தரணியின் ஆக்ரோஷத்துடன் அடித்துச் சொன்னார். சபை கப்சிப் ஆகிவிட்டது.

கடந்த கால சிறப்புகளை மட்டும் சொல்லி சும்மா பெருமையடித்துக் கொண்டிருக்கக் கூடாது. கொஞ்சம் சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக அடியேன் ஏதோ சொல்லிவைக்க அது பிழையாகப் புரிந்துகொள்ளப்பட வந்ததடா சங்கடம் எனப் பயந்து கொண்டிருந்த அடியேனுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இலக்கிய கூட்டமொன்றில் கூழ்முட்டை அடிவிழுந்த சம்பவம் நினைவில் வர பொறிதட்டிப்போன இந்த சஞ்சாரி ஆளை விட்டால் போதும் என தப்பியோடியதி பிழையேதும் இல்லையே.

# அரச படை....

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

தற்போது நடந்து வருகிறது. இதனை தடுநிறுத்தக்கூடிய சக்தி தற்போது சர்வதேதிகளிடம் கூட உள்ளதா என்பது கேள்குறியே ஆகும்.

குடாநாடு எதிர்காலத்தில் பெரும் போ மாறும்போது நிலைமை மேலும் சிக்கலா மக்களின் இருப்பும் கேள்விக்குறியா கடந்த காலத்தில் போரால் கடுமைய இழப்புகளையும் வேதனைகளையும் தவர்கள் குடாநாட்டுமக்கள். இன்னொரு வரக்கூடாது என்பது தான் குடாநாட் உள்ள ஒவ்வொரு தமிழ்மகனினதும் பிர தனையாக இருந்து வருகிறது.

எனினும் நிலைமைகளைக்கையா கூடிய சக்தி சதாரண மக்களிடம் இல்ல இதோ இன்னொரு கொடிய யுத்த அரக்க எமது ஒவ்வொருவரினதும் வீட்டு தலைவத்தட்டிக் கொண்டுநிற்கிறான்.

எனினும் விரைந்த விடுதலைக்க அனைத்து வகையான துன்பங்களை ஏற்போமாக.

மஞ்சரி

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 08-05-2006 முதல் 14-05-2006வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1, 8 ) உரிய செவ்வாய் 3ல் இருப்பது விசேஷம். இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் குறையலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். குறுந்தூரப்பிரயாணம் அமையும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். (2, 7) உரிய சுக்கிரன் 12ல் நல்ல பலன்தருவார். வாகன சுகம் உண்டு. கையில்பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு . பகை விலகும் (3,6) உரிய புதன் இரண்டில் நல்ல பலன் தரமாட்டார். உடல்ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். 4ல் உள்ள சனியை பாராதபடியால் தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை இருக்கும். (9,12) உரிய குரு, 7 ல் நல்ல பலன் தருவார். பிதா நலம். சயனசுகம் உண்டு. இறைபக்தி அதிகரிக்கும்.(10,11) உரியசனி 4ல் இருப்பது கூடாது.தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் பிரச்சினை இருக்கலாம். நண்பர்களுக்கு போதாதகாலம்.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 11ல் இருப்பது விசேஷம். மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,5) உரிய புதன் ராசியில் நல்ல பலன்தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 4க்குரிய சூரியன் 12ல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை, தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினையுண்டு. (7,12) உரிய செவ்வாய் இரண்டில் நல்ல பலன் தரமாட்டார். திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு சயனசுகம் இருக்காது. (8,11) உரிய குரு, 6ல் இருப்பது கூடாது. நண்பர்களுக்கு நல்லபலன் இல்லை. முதலீடுகளால் லாபம் குறையலாம். (9,10) உரியசனி 3ல் இருப்பது விசேஷம். பிதா நலம் தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொதுவாழ்வில் புகழ் நிலைக்கும். தெய்வீக நாட்டம் இருக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 12ல் இருப்பது நல்ல பலன் செய்யாது. மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைக் குறைக்கலாம். தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தாய்க்குநல்லபலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில்பிரச்சினையுண்டு. இரண்டாம் வீட்டில் சனி சுபக்கிரகங்களின் தொடர்பு இல்லாத படியால் வாகன சுகம் இருக்காது. கையில்பணம் இருக்காது. 3க்குரிய சூரியன் 11ல் இருப்பது சிறப்பானது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (5,12) உரிய சுக்கிரன் 10ல் நல்ல பலன் தரமாட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. சயனசுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,11) உரிய செவ்வாய் ராசியில் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லைதருவர். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு 5ல் நல்ல பலன் தருவார். திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். பொதுவாழ்வில் புகழ் நிலைக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கன்னி முதல் விருச்சிகம் வரை சஞ்சரிப்பார். வாரமத்தியில் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். இரண்டுக்குரிய சூரியன் 10ல் நல்ல பலன் தருவார். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். (3,12) உரிய புதன் 11ல் இருப்பது சிறப்பானது. சயன சுகம் உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 9ல் இருப்பது சிறப்பானது. தாய்நலம், தனிப்பட்ட வழியில் சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்லபலன் உண்டு. (5,10) உரிய செவ்வாய் 12ல் நல்ல பலன் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் பிரச்சினை தோன்றலாம். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,9) உரிய குரு 4ல் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (7,8) உரிய சனி ராசியில் நல்ல பலன் இல்லை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 9ல் இருப்பதால் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பதால் ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2,11) உரிய புதன் 10ல் நல்ல பலன் தருவார். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்லபலன் உண்டு. (3,10) உரிய சுக்கிரன் 8ல் நல்லபலன் தருவார். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு இருக்கும். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,9) உரிய செவ்வாய் 11ல் இருப்பது சிறப்பானது. பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் சுகம் உண்டு. (5,8) உரிய குரு 3ல் இருப்பது பாதகமானது. முதலீடுகளால் இலாபம் குறையலாம். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,7) உரிய சனி 12 ல் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 9ல் நல்ல பலன் தரமாட்டார். மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் பலன் குறையும். தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் பிரச்சினை தோன்றலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 7ல் நல்லபலன் தரமாட்டார். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இல்லை. பிதவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய செவ்வாய் 10ல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய குரு, இரண்டில் இருப்பது சிறப்பானது. தாய் நலம். இருப்பிடத்தில் அமைதி இருக்கும். தனிப்பட்ட வாழ்வில் சுகம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. பகை விலகும். (5,6) உரிய சனி 11ல் இருப்பது சிறப்பானது . உடல் ஆரோக்கியம் உண்டு. பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தரும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும் வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். பூர்வசொத்துகள் சேரும்.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 6ல் நல்லபலன் தரமாட்டார். இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதால் ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் இலாபம் குறையலாம். பிரயாணவாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 9ல் நல்ல பலன் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு.(3,6) உரியகுரு ராசியில் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (4,5)உரியசனி, 10ல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்குக் கூடாது. தனிப்பட்ட வாழ்வில் அமைதி குறையலாம். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம்காட்டார். (9,12) உரிய புதன் 8ல் நல்ல பலன் தருவார். பிதா நலம். சயன சுகம் உண்டு. இறைபக்தி அதிகரிக்கும். 10ல் சனி சுபர் தொடர்பின்றி இருப்பதால் தொழில் முன்னேற்றம் குறையலாம்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 8ல் நல்லபலன் தரமாட்டார். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் குறையலாம். தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (2,5) உரிய குரு 12ல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது.மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (3,4) உரிய சனி 9ல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (7,12) உரிய சுக்கிரன் 5ல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. பகைவிலகும். சயன சுகம் உண்டு. 10க்குரிய சூரியன் 6ல் நல்லபலன் தருவார். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். பொதுவாழ்வில் புகழ் இருக்கும். புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு, 11ல் இருப்பது சிறப்பானது. மேலு தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லபலனைத் தரு தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய் நல தனிப்பட்ட வாழ்வில் சுகம் உண்டு. நல்ல இருப்பிடம் அமைய பிரயாண வாய்ப்பு உண்டு. (2,3) உரிய சனி 8ல் இருப்ப பாதகமானது. வாகன சுகம் இருக்காது. கையில் பண இருக்காது. தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் மற்று அயலவர் உதவிசெய்யார். (5,12) உரிய செவ்வாய் 7ல் இருப்ப கூடாது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. சயன சு இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம்காட்டார். (6,11) உ சுக்கிரன் 4ல் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண் வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். நண்பர்களுக்கு நல்லபல உண்டு. (7,10) உரிய புதன் 6ல் நல்ல பலன் தருவார். திரும வாய்ப்புண்டு. பகைவிலகும். தொழில்துறையில் முன்னேற் உண்டு. பொதுவாழ்வில் புகழ் நிலைக்கும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7ல் நல்ல பலன் தரமாட் இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உ தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக் கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3 உரிய குரு 10ல் நல்லபலன் தரமாட்டார். சயன சுகம் இருக் உறவினர் மற்றும் அயலவர் பகைகொள்ளக் கூடும். தக தொடர்ந்து பாதிக்கலாம். (4,11) உரிய செவ்வாய் 6ல் இரு விசேஷம். தாய் நலம் தனிப்பட்ட வாழ்வில் சுகம் உண்டு. பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 3ல் பலன் தருவார். தொழில்துறை முன்னேறும். பொதுவாழ் பொறுப்புகள் வரும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன் பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,9) உரிய புதன் நல்லபலன் தரமாட்டார்.பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. உ ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தரு 7ல் உள்ள சனியை சுபக்கிரகங்கள் பார்க்காத படியால் திரு வாய்ப்பு பாதிக்கலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2**

(1,12) உரிய சனி 6ல் இருப்பது விசேஷம். மே தனது நட்சத்திரத்தில் இருப்பது, நல்ல பலனைத த தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். சயன உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு இருப்பது விசேஷம். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 5ல் நல்ல பலன் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். உறவினர் மற்றும் அயலன் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4, 9) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது சிறப்பானது. பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். இறை பக்தி அதிகரிக்கும். நல்ல இருப்பிடம் அமையும். 7க்குரிய சூரியன் 3ல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகு தோடு நண்பராகும் வாய்ப்பும் உண்டு.

**இவ்வார கிரகநிலை**

| சுக்கிரன் ராகு | சூரியன் | புதன் | செ |
|---|---|---|---|
| | செவ்வாய் புனர்பூசம் குரு<br>சுக்கிரன் உத்திரட்டாதி சனி<br>புதன் கார்த்திகை சூரியன் | | ச |
| | சூரியன் கார்த்திகை சூரியன்<br>குரு விசாகம் குரு<br>சனி பூசம் சனி | | |
| | | குரு | கே |

சித்திரை 25 முதல் 31 வரை

சந்திரன் கன்னி முதல் விருச்சிகம் வ

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8ல் இருப்பது பாதகமான இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண் தொடங்கும் காரியங்கள் தாமதமாகும். தொழில்துறையி முன்னேற்றம் இருக்காது.பொதுவாழ்வில் அவமானம் ஏற்ப இடமுண்டு. (2,9) உரிய செவ்வாய் 4ல் நல்ல பலன் தரமாட்டா வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிதாவுக் நல்லபலன் இல்லை. (3,8) உரிய சுக்கிரன் ராசியில் இருப்ப சிறப்பானது. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். உறவின மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இரு கும். (4,7) உரிய புதன் 3ல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்குக் கூடாது. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை வரலாம். திருமண வாய்ப்புப் பாதிக் கலாம். பகைவரால் தொல்லையுண்டு. வசிப்பிடத்தில் பிர சினை இருக்கலாம். 6இற்குரிய சூரியன் இரண்டில் நல்ல பல தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (11,12) உரிய சனி 5ல் நல்ல பலன் தரமாட் டார். நண்பர்களுக்கு நல்லபலன் இல்லை. சயனசுகம் இருக்காது.


# கலக்கல்
பகீன்




அமெரிக்காவின் ஒதுக்குப்புறமான ஒரு மாநிலத்தில் உள்ள ஏரிப்பகுதியில் தினமும் நடைப்பயிற்சியில் இந்த முதியவர் ஈடுபடுவது வழமை. அந்த ஏரிப்பகுதியில் தினமும் காணப்படும் இந்த வாத்து முதியவருடன் நட்புக்கொண்டுவிட்டது.




ஒருவர் கண்ணாடி அணிந்து மீசை, தாடியுட ன் காணப்படுவதாக நீங்கள் நினைக்கக் கூடும். அப்படி அல்ல; தலையின் பின்புறத்தில் தலைமுடியினால் உருவாக்கிய தோற்றமே இது.



தென்கொரிய தலைநகர் சியோலில், ஜேர்மன் உலகக்கோப்பை உதை பந்தாட்ட போட்டிக்கான மைதானம் போன்ற அமைப்பு கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## நேரத்தை அறிந்துகொள்ள...



இரண்டு நண்பர்கள் இரவு இரண்டாம் காட்சி சினிமா பார்த்துவிட்டு வீதியில் வந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் கடிகாரம் இருக்கவில்லை.

"இப்பொழுது நேரம் என்ன இருக்கும்?" என்று கேட்டான் ஒருவன்.

அடுத்தவன் "இரவு இரண்டு மணி இருக்கும்." என்றான்.

"இல்லை! மூன்று மணியாவது இருக்கும்." என்றான் முதலாமவன்.

சரியான நேரத்தை எப்படித் தெரிந்துகொள்வது என இருவரும் சிந்தித்தனர்.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தனர். வீதியில் ஆள் நடமாட்டமே இல்லை.

இருவரும் ஒரு வீட்டின் எதிரில் நின்று உரத்த குரலில் பாடத் தொடங்கினர்.

சிறிது நேரத்தில் அந்த வீட்டின் மேல்மாடியில் இருந்து ஒரு பெரியவர் "டேய் பசங்களே! மணி இரண்டரை ஆகுது.

நாங்கள் தூங்க வேண்டாமா? ஏன்இப்படி சத்தம் போட்டு ஊரைக்கூட்டுறீங்க?" என்று கத்தினார்.




பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரஸல்ஸில் உள்ள சர்வதேச விமானநிலையத்தில் அண்மையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் ஒருவர் நுழைந்ததால் விமானங்கள் பறப்பது உடனடியாக நிறுத்தப்பட்டது. இதனை அடுத்து அங்கு காத்திருந்த பயணிகள் இளைப்பாறுகின்ற காட்சி.

## தத்துவம்

**பெயர்:**

மற்றவர்களுக்கு சொந்தமான இதனை நீங்கள் அதிகம் பயன் படுத்துவீர்கள். உங்களுக்கு சொந்தமான இதனை மற்றவர்களே அதிகம் பயன்படுத்துவர்.

**பல்:**

சீப்பில் இருந்தால் தலைவார உதவும். வாயில் இருந்தால் கடிக்க உதவும்.

**காரம்:**

இதனுடன் சவர் சேர்த்தால் துவைக்கலாம். பல சேர்த்தால் சுவைக்கலாம்.

**இதயம்:**

அது உன்னிடம் இருந்தால் நீ மனிதன். அது பிறரிடம் இருந்தால் நீ புனிதன்.

## புதுச்சட்டை எங்கே?




ஒருவர்: கடந்தவாரம் தானே புதுச்சட்டை தந்தேன் பின்பு ஏன் கிழிந்த சட்டையுடன் வாறாய்?

பிச்சைக்காரன்: நீங்கள் தந்த சட்டையை அணிந்தால் என்னிடம் மற்றவர்கள் பிச்சை கேட்பார்கள்.

ஒருவர்: ..........!

## சிரியுங்கள்... சிரியுங்கள்....



# பல்சுவை கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்

## செக்ஸ் ரோபோ



செக்ஸ் பசி கொண்டோர் தமது உடலின் உந்துதலை தணித்துக் கொள்வதற்கு உதவி செய்யும் வகையில் இப்போது செக்ஸ் ரோபோ பொம்மைஹம் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுகின்றன. மிக நுட்ப மான முறையில் தயாரிக்கப்பட்ட செக்ஸ் ரோபோ பொம்மைகள் இப்போது ஜெர்ம னியில் சந்தைப்படுத்தப்படுகின்றன.

ஜெர்மனியில் உள்ள விமானங்கள் திருத்துபவர் ஒருவரினால் தயாரிக்கப்பட்ட இந்த செக்ஸ் ரோபோக்களுக்கு பொருத்தப் பட்டள்ள இதயங்கள் உறவின் போது வேக மாக துடிக்குமாம்.

அது மட்டுமின்றி அந்த வேளையில் அவை பலமாக மூச்சுவிடுவதுடன் அவற்றின் உடல் உஷ்ணமும் அதிகரிக்கும் வகையில் வெப்பகருவிகளும் (Heaters) பொருத்தப் பட்டுள்ளன என்று தயாரிப்பாளர் ஹரிமன் சொல்கிறார்.

செக்ஸ் ரோபோக்களை இன்னும் பல நவீன மாற்றங்களுக்கு உட்படுத்தப்போவ தாகவும் நிஜ செக்ஸ் உறவுக்கும் ரோபோ செக்ஸ் உறவுக்கும் இடையில் எதிர்காலத்தில் எந்த வித்தியாசமும் இல்லாத வகையில் அவற்றை தயாரிக்க இருப்பதாகவும் ஹரிமன் சொல்கிறார்.

சாராரண மொடல் 4000 டொலர்களுக்கு விற்பனையாவதாகவும் வாடிக்கையாளரின் விருப்பத்துக்கு ஏற்ப பருத்த மார்பகங்களைப் பொருத்துதல் அல்லது அவற்றின் அங்கங்க ளில் மேலதிக மாற்றங்களைச் செய்தல் போன் றவற்றுக்கு அதிக கட்டணம் அறவிடப்படும் எனவும் ஹரிமன் சொல்கிறார்.

உறவின் போது இந்த ரோபோக்கள் அங்கங்களை அசைத்து உணர்வுகளை வெளிப் படுத்தக் கூடியவை எனவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.



## என்றும் இளமை

*பிரிட்டிஷ் சிம்மாசனத்தை நீண்டகாலம் அலங்கரிக்கும் இராணி என்ற பெருமையை அண்மையில் தனது 80ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய எலிசபெத் மகாராணி தட்டிக்கொள்கிறார்.*

*பிரிட்டனின் அரசி விக்டோரியா* (QUEEN VICTORIA) *64 ஆண்டு காலம் ஆட்சி செய்துள்ளார். 53 ஆண்டுகளுக்கு முன்னர் முடிசூடிய எலிசபெத் அரசி இன்னும் பத்து ஆண்டுகளுக்கு சிம்மாசனத்தில் தொடர்ந்து இருப்பாராகில் பிரிட்டனை மிக நீண்ட காலம் ஆட்சி செய்த விக்டோரியா மகாராணியின் சாதனையை முறியடித்து விடுவார்.*

*இன்றும் பிரிட்டிஷ் முடியாட்சி தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்றே பிரிட்டிஷ் மக்கள் விரும்புவதாகக் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.*

*எலிசபெத் அரசி ஒருபோதும் முடிதுறக்கவோ அல்லது ஓய்வுபெறவோ போவதில்லை எனவும் இந்தத் தள்ளாத வயதிலும் அவர் தன்மீது பிரிட்டிஷ் மக்கள் சுமத்தியுள்ள பொறுப்பைக் கடமை உணர்வுடன் அனுபவித்து வருகிறார் எனவும் அவருக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் பி. பி. சிக்குத் தெரிவித்துள்ளார்.*

## பஷன் ஷோ







கொழும்பில் நடந்த பஷன் ஷோ ஒன்றில் இந்த அழகி இப்படி எடுப்பாக எழில் சிந்தி பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்களித்தார்

நீச்சலுடை பஷன் ஷோ அண்மையில் அவுஸ்திரேலியா சிட்னி நகரில் இடம் பெற்றபோது இந்த மாடல் அழகி இப்படி நீச்சல் உடை அணிந்து போஸ் கொடுத்தார்.

## இரவில் வேண்டாம்



நடிகர் சார்லின் அவரது மனைவி டெனிஸ் றிச்சாட்சன் நிற்கும் இடத்தில் இருந்து 30 அடி தூரத்திலேயே நிற்க வேண்டும் என்று லொஸ் ஏன்ஜலிஸ் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது போன்றே அவரது குழந்தைகள் தொடர்பாகவும் சார்லி நடந்து கொள்ள வேண்டும் என்றும் நீதிமன்றம் அவரைக் கேட்டுள்ளது.

கிழமைக்கு ஒரு தடவை மட்டும் குழந்தைகளைப் பார்க்க றிச்சாட்ஸின் வீட்டுக்கு செல்லுமாறும் நீதிமன்றம் அவரைக் கேட்டுள்ளது.

இரவு வேளைகளில் குழந்தைகளைப் பார்க்க அனுமதிக் குமாறு தனது மனைவி றிச்சாட்னுக்கு விடுத்த கோரிக்கையை அவர் நிராகரித்து விட்டார் என்றும் நீதிமன்றத்தில் சார்லி குற்றம் சுமத்தினார். ஆனால் அவரது குற்றச் சாட்டை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

## முடி அலங்காரத்துக்கு £ 7700




பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயரின் மனைவி செரி பிளேயர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கட்சிக்காகத் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது தனது தலை அலங்காரத்துக்கு அவர் செலவிட்ட 7,700 பவுண்களை கட்சி தனக்கு மீளளிக்க வேண்டும் எனக்கோரியிருப்பது கட்சி வட்டாரங்களில் கடும் கோபத்தைக் கிளறிவிட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது தான் அழகாகக் காட்சி அளிக்கவேண்டும் என்பதற்காக நாளொன்றுக்கு 275 பவுண்கள் தனக்குத் தரப்படவேண்டும் எனக் கட்சியிடம் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இப்போது தொழிற்கட்சி அவர் கோரிய 7,700 பவுண்களையும் அவரது முடியை அழகுபடுத்துபவரான அன்ட்ரே சுவாட்சுக்கு செலுத்தியிருப்பதுடன் அதை தேர்தலுக்கான செலவு என கணக்குப் பதிவேட்டில் குறித்து வைத்துள்ளது.

# கிழட்டு மன்மதன்

# நீலத்தாடி



லெபனான் நாட்டின் திரைப்பட அரங்கொன்றில் 'லேன்ரு' எனும் சினிமா ஓடிக்கொண்டிருக்கிறது. 283 பெண்களை பாலுறவுக் குட்படுத்தி, பலரின் சொத்துகளை தனது உடமையாக்கி, சிலரைத் தீவைத்துக் கொளுத்தியவன் லேன்ரு.

புகழ் பெற்று நாவலாசிரியரான பிரீன் ஹிஸ் ஸாகன் எழுதியதொரு கதையின் திரைவடிவம் அது. உண்மைச் சம்பவங்களைக்கொண்டு அக்கதை எழுதப்பட்டிருந்தது. இப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பெர்னாண்டோ ஸ்கிரட் என்ற பெண் திகைத்து கிரீச்சிட்டு அலறினாள். விளக்கணைக்கப்பட்டு இருளில் மூழ்கிக் கிடந்த சினிமா அரங்கைவிட்டு வேகமாக வெளியேறிய அவ 'ர் ஒரு சட்டத்தரணியைத் தேடி ஓடினாள்.

'என்ன நடந்து விட்டது?'

* * * * *

1921ஆம் ஆண்டு பிரான்ஸின் வார்சேயில்ஸ் நகர நீதிமன்றத்தின் முன்பாக மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. துப்பாக்கியுடன் இராணுவ பொலிஸ் கெடுபிடியும் அதிகரித்துள்ளது. மக்கள் குழப்பமடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். எந்த நேரத்திலும் கலவரம் ஏற்படலாம் என்ற பீதியில் மேலோங்குகின்றது.

நீதிமன்ற விசாரணை ஆரம்பமாகிவிட்டது. நீதிபதி தன் முன்னால் கூண்டில் நின்று கொண்டிருக்கும் குற்றவாளியை நோக்கினார்.

அவன் களைத்தவனாகக் காணப்பட்டான். வழுக்கை, ஆங்காங்கே கேசம் தலை நீட்டிக் கொண்டிருக்க அடர்ந்த தாடி பழுப்படைந்து நீலநிறமாக பிரமை தருகிறது. வயது 52 இருக்கலாம்.

குற்றப்பத்திரிகை வாசிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலங்களை அது விழுங்கியது.

இவன் பெயர் ஹென்றி புளோர் லேன்ரு.

1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி அலெக்ஸாண்டர் தம்பதிகளுக்கு பாரிஸ் நகரில் பிறந்தான். 283 பெண்களை ஏமாற்றி தன் இச்சைக்குட்படுத்தி அவர்களின் சொத்துகளை தனதாக்கிக் கொண்டது, சிலரை தன் வீட்டிற்குள்ளே எரித்தது, மேலும் சில பெண்களை சென்ற இடமே தெரியாமல் செய்தது என்பன இவன் மேலுள்ள குற்றங்களாகும்.

நீதிமன்றத்தில் நிசப்தம் நிலவுகிறது. நீதிபதி உட்பட அனைவரினது கண்களும் குத்திட்ட ஈட்டிகளென அசைவற்று குற்றவாளிக் கூண்டிலிருப்பவனை வெறித்தன.

"உன் மேலுள்ள குற்றங்களை ஏற்றுக் கொள்கிறாயா?" அவன் பதில் சொல்லவில்லை. அவனுடைய களைத்த முகத்தில் ஒரு கேலியான புன்னகை தோன்றுகிறது.

"இவ்வளவு பெண்களும் என்னை விரும்பினார்கள். எனது ஆண்மை அவர்களை விரும்பவைத்தது." அவன் கிண்டலாகச் சொன்னான்.

நீதிபதியின் கண்களில் பொறாமை தீ வெளிச்சம் காட்டியது. 'ஒரு வழுக்கைத் தலையனை இத்தனை பெண்கள் லவ் பண்ணினார்களா? ஆசாமி பெரிய கில்லாடி தான்' என மனதிற்குள் கசந்து கொண்டார். தனது ஒரே இளம் மனைவியை திருப்திபண்ண முடியாமல் அவர் படும் பாடு ஆண்டவனுக்கல்லோ வெளிச்சம்.

கழுத்தில் தொங்கி, அங்கிக்குள் மறைந்து கொண்டிருக்கும் சிலுவையை வெளியில் உருவி முத்தம் கொடுத்து மறுபடியும் உள்ளே மறைக்கிறார்.

நீதிபதி இவனுடைய கொடூரத்தைச் சகிக்க முடியாமல் மனம் குமுறுகிறார். கூட்டத்திலிருந்த ஒரு வயதான அம்மணி கிரீச்சிட்டு கத்தி ஒப்பாரி வைக்கிறாள்.

நீதிமன்றத்தில் சலசலப்பு தோன்றுகிறது.

அமைதி ! அமைதி!! அமைதி!!!

நீதிமன்ற சேவகன் கத்தினான்.

குற்றவாளியான நீலத்தாடி மனிதனின் முகம் கீழே பார்த்துக்கொண்டிருக்கிறது. இரண்டொரு முறை தலையை நிமிர்த்திய நீலத்தாடி, குற்றப்பத்திரிகையை ஒரு சுவாரஸ்யமான நாவலைப்போல் வாசித்துக் கொண்டிருக்கும் நீதிமன்ற கிளாக்கையும், அதனை ஆச்சரியத்தோடு செவிமடுத்துக் கொண்டிருக்கும் சனத்தையும் பார்த்தான். அவன் பார்வையை சந்தித்த பெண்கள் திகிலோடு பார்வையைத் திருப்பிக் கொண்டார்கள்.

"எப்படி இத்தனை பெண்களை உன்னை தேடி வரச் செய்தாய்?"

"விளம்பரம் மூலம் "

"என்ன விளம்பரம் , அழகுப் போட்டி நடத்தினாயா?"

"இல்லை மணப்பெண் தேவை விளம்பரம்"

வக்கீலின் கேள்விகளுக்கு நீலத்தாடி பதில் சொன்னான்.

1915 மே மாதம் 11 ஆம் திகதி பாரிஸ் நகர தினசரி ஒன்றில் வெளியான முதல் விளம்பரம் வாசிக்கப்பட்டது.

'மனைவியை இழந்து வாழும் 43 வயதான நல்ல வருமானமுடைய, சமூகத்தின் உயர் அந்தஸ்து சூழலில் வாழும் ஒருவருக்கு பெண்ணொருத்தியின் துணை தேவை. விண்ணப்பிக்கவும்'. புகழ் பெற்ற கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் எனவும் விளம்பரம் குறிப்பிட்டது.

உண்மையிலே நீலத்தாடி தொழில் எதுவும் அற்று வெறுமனே 'லாட்ரி' அடித்துக் கொண்டிருந்தான். எப்படியோ தோட்டத்துடன் கூடியதொரு வீட்டை சொந்தமாக்கிக் கொண்டிருந்தான்.

மணப்பெண் விளம்பரம் மாபெரும் வெற்றியாகிவிட்டது. பல பெண்கள் அவனுக்குத் துணையாக வாழ விரும்புவதாகக் கடிதம் எழுதினார்கள்; தொலைபேசி அழைப்பு விடுத்தார்கள்.

கடிதம் எழுதியவர்களில் மேடம் அன்னா கொலம்போவை அவனுக்குப் பிடித்தது. வயது குறைவானவளாகவும், சொத்துப்பத்து உள்ளவளாகவும், அழகாகவும் அவள் இருந்தாள்.

லேன்ரு தன்னைப்பற்றி வழங்கிய தகவல்கள் அன்னாவுக்கு பிடித்திருந்தன. மிகவும் வசதிபடைத்தவனென்றும், கண்ணியமானவன் என்றும் அவனை அவள் நம்பினாள். ஏனெனில், இறந்துபோன அவளுடைய முன்னாள் கணவன் மிகவும் மோசமானதொரு குடிகாரனாகவும், கொடுமைக்காரனாகவும் இருந்ததினால் அவள் வாழ்க்கையை வெறுத்திருந்தாள்.

ஒரு கண்ணியமான மனிதனுடன் இன்னும் சிலகாலம் இவ்வுலகில் வாழ்ந்து மடிவது பெரும்பாக்கியம். அதற்கான நல்ல சந்தர்ப்பம் தற்சமயம் கிடைத்திருப்பதாக தன்னுடைய நண்பர்கள், உறவினர்கள் அனைவரிடமும் சொல்லிவிட்டு அவள் அவனோடு சென்றுவிட்டாள்.

மிகவும் சந்தோஷமாகவே அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். ஒருநாள், நீலத்தாடி ஒரு சோகமான கதையை அவளிடம் சொன்னான்.

ஒரு நண்பனை நம்பி தான் மோசம் போய்விட்டதாகவும், அவனுடைய வர்த்தக விருத்திக்காக தனது தோட்டத்தையும், பங்களாவையும் அடகு வைத்ததாகவும், அதனை மீட்க முடியாமல் இருப்பதாகவும், தன் பெயரில் கொஞ்சம் சொத்திருந்தால் அதனை மீட்டு விட முடியும் என்றும், தானும் ஒரு புதிய வர்த்தகத்தில் காலடி பதிக்க முடியும் என்றும் சொன்னான்.

அவள் அவனை முழுதாகவே நம்பியதனால் தனது சொத்துகளை அவன் பெயரில் எழுதினாள். அதன் பிறகு அவர்கள் வாழ்வில் சந்தோஷம் மேலும் அதிகரித்தது. ஒருநாள் இரவு நீலத்தாடியின் வீட்டின் சிம்னியிலிருந்து பிணவாடை வீசும் புகை கிளம்பியது. அதன் பிறகு அன்னா

எழுதுவது: கே.வி

கொலம்பாவோவை எங்கும் காண முடியவில்லை. அவள் வான் மண்டலத்திலுள்ள முகில் கூட்டத்துடன் புகையாகக் கலந்து விட்டாள்.

பத்திரிகைகளில் பல பெயர்களிலான கவர்ச்சிகரமான மணப்பெண் தேவை விளம்பரங்கள் தோன்றின. லேன்ருதான் அவற்றை வெளியிட்டு வந்தான்.

பதில் கடிதங்கள் வந்தன. பதில் கடிதங்கள் பறந்தன; செக்ஸ் உறவுகள் தொடர்ந்தன; சொத்துகள் கைமாறின.

அவனுடைய தோட்டத்தில் சிலவேளை குப்பைகள் எரியும்; வீட்டின் சிம்னியிலிருந்து புகை கிளம்பும்; அவற்றிலிருந்து பிணவாடை நாற்றமடிக்கும்; பெண்கள் சதை பொசுங்கி புகையாகிக் கொண்டிருந்தார்கள்.

சில வருடங்களின் பின்னர்

நகரமேயரின் அலுவலகம்.

ஒரு கடிதத்தைப் படித்த அவர் பரபரப்படைந்தார். ஏற்கனவே பல பெண்கள் காணாமல் போகிறார்கள் என எச்சரித்து பல கடிதங்கள் வந்தபோதும், 'இதென்ன பிரான்ஸில் இது புதிய விஷயமா' என அவர் அலட்சியமாகவிருந்து விட்டார். ஆனால், இந்தக் கடிதம் பெண்கள் நெருப்பில் எரிக்கப்படும் விசயத்தை அல்லவா குறிப்பிடுகின்றன.

'ஐயோ சார்! இங்கே ஒரு வீட்டுச் சிம்னியில் இரவு நேரங்களில் பெரும் புகை வருகின்றது. அதில் மனித சதை எரியும் வாடையடிக்கிறது.

(27ஆம் பக்கம் பார்க்க)

283 பெண்களை பாலுறவுக்குட்படுத்தி பலரைக் கொலைசெய்து , அவர்களின் சொத்துகளையும் பறிமுதல் செய்து உல்லாச வாழ்க்கை வாழ்ந்தான் நீலத்தாடி. அவன் கைது செய்யப்பட்டு , தீர்ப்பு வழங்கப்பட்டு மரண தண்டனைக்குள்ளாக்கப் பட்டான். ஆனால், பல வருடங்களுக்குப் பின்னர் அவனுடைய வரலாறு படமாக்கப்பட்டபோது அதனைப் பார்த்த ஒரு லெபனான் நாட்டு பெண்மணி, 'நான் கொல்லப்படவில்லை இதோ உயிரோடு இருக்கிறேன்' என பிரான்ஸின் நீதிமன்றத்துக்கு எதிராகக் கிளம்பினாள்.




# விண்வெளி சுற்றுலா




நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தைப் போல பல்வேறு நாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்களும் விண்வெளி ஆய்வில் ஆர்வம் காட்டி வருகின்றன. இதில் குறிப்பிடத்தக்கது (Space Adventures) நிறுவனமாகும். இந்த நிறுவனம் விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

இதற்கு ஏற்ப விண்வெளியில் ஹொட்டல்கள் மற்றும் சந்திரனில் குடியிருப்புகள் அமைக்கும் திட்டங்களும் தயாராகி வருகின்றன. சுமார் 25 லட்சம் முதல் 1 கோடி ரூபாக்கள் வரை செலவு செய்யத் தயாராக இருப்பவர்கள் இந்த விண்வெளிச் சுற்றுலா செல்ல முடியும். உலகம் முழுவதும் உள்ள கோடீஸ்வரர்கள் பலர் இந்த விண்வெளிச் சுற்றுலாவில் ஆர்வமாக உள்ளனர். இந்தச் சுற்றுலாவைப் பிரபலப்படுத்தும் வகையில் அரபு நாட்டில் விண்வெளித் தளம் அமைக்கப்பட இருக்கிறது. ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள ரசல்கைமாவில் இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு மொத்தம் 1,200 கோடி ரூபாக்கள்வரை முதலீடு செய்யப்படும். ரசல்கைமாவில் அமைய இருக்கும் விண்வெளித் தளத்துக்கு அதன் ஆட்சியாளர்களும் உதவ முன் வந்துள்ளனர். ரசல் கைமாவின் பட்டத்து இளவரசரும் அதன் துணை ஆட்சியாளருமான ஷேக் சவுத் பின் சாகர் அல் காசிமி இந்தத் திட்டத்துக்கு அனுமதி அளித்து இருக்கிறார். இந்த அனுமதியின் மூலம் ஸ்பேஸ் அட்வன்சர்ஸ் நிறுவனம் ரசல்கைமா வானவெளியைப் பயன்படுத்தி சுற்றுலாப் பயணிகளை அனுப்ப முடியும். இது தவிர ரசல்கைமா அரசு இந்தத் திட்டத்தில் சுமார் 135 கோடி ரூபாவரை முதலீடு செய்யவும் முன்வந்துள்ளது. இது தவிர பல்வேறு தனியார் நிறுவனங்களும் இந்தத் திட்டத்தில் தங்களது பணத்தை முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.

ரசல்கைமாவில் அமைய இருக்கும் விண்வெளி தளத்தில் இருந்து புறப்படும் விமானத்தின்மூலம் ஒரே நேரத்தில் 5பேர் வரை விண்வெளிக்குச் சுற்றுலா செல்ல முடியும். ஒரு நபருக்குக் கட்டணம் சுமார் 45 லட்சம் முதல் 66 லட்சம் ரூபாவரை செலவாகும்.

இங்கிருந்து பயணம் செய்ய இருக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு 4 நாட்கள் மட்டுமே பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சிகள் முடிந்த பிறகு அவர்கள் விமானம் மூலம் விண்வெளிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கு அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் மட்டுமே தங்கி இருப்பார்கள்.

# நெருப்புக் கோளம்




சுட்டெரிக்கும் சூரியனின் மேற்புறத் தோற்றம் தான் நீங்கள் படத்தில் பார்ப்பது. சூரியனை 'நெருப்புக் கோளம்' என்று வர்ணிப்பார்கள். அதை நிரூபிப்பது மாதிரி எப்படி 'செக்கச்செவேல்' என்று சூரியன் இருக்கிறது பார்த்தீர்களா?

சூரியனுக்கு அப்பால் 14 கோடியே 96 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் இருந்து இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு நாசா ரூபா 4,500 கோடி செலவில் விண்ணில் செலுத்திய 'சோஹோ' என்னும் விண் வெளிக்கலம் சூரியனின் புறப்பரப்பை இப்படிப் படம் பிடித்துள்ளது. சூரியனின் வெப்பநிலை 1,50,00,000 டிகிரி செல்ஷியஸ் ஆகும்.

புகைப்படத்தை எடுத்து அனுப்பியதுடன் மட்டுமின்றி 'சோஹோ' சூரியனின் மேற்பரப்பையும் ஆராய்ந்து வருகிறது.

# இடம் மாறாத பெங்குவின்



அண்டார்டிக் பனிப் பிரதேசத்தில் மார்ச் மாதம் முழுவதும் கடுங்குளிர் வீசும். இரவு நேரமும் அதிகமாக இருக்கும். சூரிய வெளிச்சமும் குறைவு. இதனால் இந்த மாதத்தின்போது இப்பகுதியில் வசிக்கும் பெரும்பாலான பிராணிகள் வேறு இடத்திற்குக் குடிபெயர்ந்துவிடும். ஆனால் அண்டார்டிக் பகுதியில் வசிக்கும் 40 ஆயிரம் பெங்குவின் பறவைகள் மட்டும் வேறு இடத்திற்குச் செல்வதில்லை.

குடும்பம் குடும்பமாக வசித்து இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. பெண் பெங்குவின் பறவைகள் கடலுக்குள் முட்டையிட்டுச் சென்று விடும். ஆண் பறவைதான் இரண்டு மாதம் முட்டையின் மீது உட்கார்ந்து அடை காக்கும். அப்போது ஆண் பெங்குவின் பறவைகளுக்குப் பெண் பெங்குவின்களே இரையைச் சேகரித்துக் கொண்டு வந்து கொடுக்கின்றன.

# செவ்வாய் கிரகத்தை ஆராய மார்வல் MARVEL



செவ்வாய்க்கிரகத்தை ஆராய மார்வெல் (MARVEL) என்ற பெயரில் ஆய்வு விண்கலம் ஒன்றை அனுப்ப உள்ளனர். இது செவ்வாய் கிரகத்தில் நுண் உயிர் ஏதாவது உள்ளதா என ஆய்வு நடத்தும்.

அடுத்ததாக (Phoenix) என்ற பெயரில் அனுப்பப்பட உள்ள விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் வடக்குப் பகுதியில் இறங்கி தண்ணீர் இருக்கிறதா என்பது பற்றி ஆராயும்.

இதையடுத்து ஸ்சிம் என்ற பெயரில் அனுப்பப்பட இருக்கும் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் உள்ள தாசுப்படலம் மற்றும் சுற்றுப் புறத்தை ஆராய இருக்கிறது.

செவ்வாய்க் கிரகத்தில் ஆறு மற்றும் கடல் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இவை எப்படி வற்றிப்போய் இருக்கும் அல்லது தண்ணீர் உள்ள நிலையில் உள்ளனவா என்பது பற்றியும் ஆய்வு நடக்க உள்ளது.

# அறிவியல் துணுக்குகள்

*பாலாடைக்கட்டி (சீஸ்-Cheese) பற்றி நீங்கள் தெரிந்து வைத்திருப்பவையுடன் இவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். மொத்தம் 450 இற்கும் மேலான சீஸ்வகைகள் உலகம் முழுவதும் தயாரிக்கப்படுகிறது. அதிகமான சீஸ் ரகங்களைத் தயாரித்து விற்கும் நாடு பிரான்ஸ் தான். இங்கே 210 வகையான பாலாடைக் கட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

*வளர்ச்சியடைந்த மனிதனின் இதய எடை சராசரி 300 கிராம் தான். பெண்களின் இதய எடை சராசரி 250கிராம்.

* பேப்பர் கிளிப்பைக் கண்டு பிடித்தவர் நோர்வே நாட்டின் ஜான்வாலேர் ஆவார். கண்டுபிடித்த ஆண்டு கி.பி.1900.

*அன்ட் (and) என்ற ஆங்கிலவார்த்தையைக் குறிக்க (&) என்ற எழுத்து பயன்படுத்துவது உங்களுக்குத் தெரியும். இக் குறியீட்டை (Amper Sand) என்று கூறுவர். இந்தக் குறியீடு உலகம் முழுவதும் நூற்றுக்கும் மேலான மொழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

*சைபீரியாவில் உள்ள பைகால் ஏரிதான் உலகின் மிக ஆழமான ஏரி. இதன் ஆழம் 5,577 அடிகள். இந்த ஏரி பரப்பளவில் உலகின் மிகப்பெரிய ஏரியான சுப்பீரியர் ஏரியின் நீரைவிட அதிகளவு நீரைக் கொள்ளக் கூடியது.

*டென்மார்க் நாட்டின் தேசியக் கொடி கி.பி 1219ஆம் ஆண்டு முதல் ஒரே வடிவத்தில் இருந்து வருகிறது. சிவப்புப் பின்னணியில் வெள்ளைக் குறுக்குக் கோடுகள் இந்தக் கொடியில் உள்ளன.

# மொபையில் ரீ.வி



இந்தப் போட்டியில் இப்போது பிரான்ஸும் சேர்ந்துள்ளது. இங்கு தயாரிக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகளிலும் பல்வேறு வசதிகளைப் புகுத்தி உள்ளனர். இதனைக் கொண்டு டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். மேலும் ஆடியோ வசதியும் உள்ளது. இந்தப் புதிய தொழில் நுட்பம் இப்போதுதான் பிரான்ஸில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால் பிரான்ஸில் இதற்கு கிராக்கி அதிகம்.

கையடக்க மொபைல் போனில் பல தொழில் நுட்பங்களைப் புகுத்துவதில் வல்லவர்கள் ஜப்பானியர்.

# வாரிக் கொடுக்கிறார் பூஜா



வாங்கிற சம்பளத்தில் ஒரு பகுதியை தொண்டு நிறுவனங்களுக்கு கொடுப்பதை ஒரு கொள்கையாகிக் கொண்டு நடித்துவருகிறார் பூஜா. இவரிடம் உதவி பெற்றவர்கள் அதை வெளியில் சொல்லக் கூடாது என்பதே இவரின் நல்ல நோக்கமாகும். இப்படியான நல்ல நோக்கங்களை கைவசம் வைத்துள்ளார் பூஜா.

# விஜயகாந்தை எதிர்க்கிறார் நடிகை ஜெரினா



அப்டா... இனிமே தங்கம் வாங்கவே முடியாது போலிருக்கிறதே! தங்கம் ஓல்டு பஷன். பேசாம பிளாட்டினம் வாங்கிடுங்க. இப்ப அதுதான் நியூ பெஷன்.

மனோரம்மா கூட பிளாட்டினம் மாலை செய்து சாமி சிலைக்கு காணிக்கையாக கொடுத்திருக்கிறாங்க.

பாத்தீங்களா சாமியே பிளாட்டினம் போட ஆரம்பிச்சிடிச்சு.

விருத்தாசலம் தொகுதியில் விஜயகாந்தை எதிர்த்து யாரோ நடிகை போட்டியிடுகிறதா சொன்னீங்களே? பேப்பர் படிக்கிற பழக்கத்தை விட்டுவீட்டீங்களா? அது யாரோ நடிகை இல்லை. நடிகர் சங்கத் தேர்தலில் விஜயகாந்தை எதிர்த்து போட்டியிடும் நாடக நடிகை தேவி ஜெரினா தான். ஆர் ஜெயிக்கப்போறாங்களோ?

# குத்துப்பாட்டு இல்லாத குருஷேத்திரம்

"என்னோட தனித்தன்மையில் இருந்து மாறவும் இல்லை. மாறப்போவதும் இல்லை" என்கிறார் குருஷேத்திர இயக்குனர் ஜெயபாரதி. வடிவேலு காமெடி, பாட்டு என்று சிலவற்றை மாத்திரமே வைத்திருக்கிறேன். அதற்காக குத்துப் பாட்டு வைத்திருக்கிறேன் என்றெல்லாம் நினைதிடாதீங்க என்றார் அவர்.

குருஷேத்திரத்தில் சத்தியராஜை எப்படிப் பயன்படுத்தியிருக்கிறீங்கள் என்று கேட்டதற்கு இதில நீங்க தேடினாலும் சத்தியராஜ் கிடைக்க மாட்டாரு. கடந்த காலங்களில் அவரோட தவறான நடிப்புக்கு இந்தப் படம் ஒரு பிராயச்சித்தமாக அமையும். இதைக்கூட நான் கூறவில்லை அவரேதான் கூறியிருக்கிறார். வயசுக்கேத்த பொருத்தமான கேரக்டர். இதுல அவருக்கு ரோஜாதான் ஜோடி. சத்தியாராஜுக்கு தேசிய விருது கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்றால் எப்படியான படம் என்று யோசித்துப் பாருங்கள்.



# ஒரு தறுதலை ஒரு தங்கச்சிலை

மானா மதுர குதிர ஒண்ணு கலக்குதடா மாமன் மனச சுண்டி இழுக்குதடா... என்ற பாடலில் விரட்டி விரட்டி ஆட, ஓடிக்கொண்டே மனசை புரட்டு புரட்டென்று புரட்டுகிறார் கிரன். இந்த இளமை ஓட்டத்தை இமை நழுவாமல் கமெராவில் படம் பிடித்து அடைத்துக்கொண்டு வந்திருக்கிறார் இயக்குனர் கோபி.

கிராமங்களில் யாருக்கும் அடங்காத இளசுகளை தறுதலை என்பார்கள். 'திமிரு' படத்தில் அப்படியொரு தறுதலையாக வருகிறார் விஷால். தறுதலை இவர் நல்ல தறுதலை தான்.

தறுதலையை விடுங்கள், அந்த தங்கச்சிலை பற்றி சொல்லுங்கள் என்றால்? எக்ஸ்ட்ரா சதை குறைத்து கிரன் இந்தப் படத்தில் விஷாலுடன் ஒரு பாடலுக்கு ஆடுகிறார். மானா மதுரை குதிர... பாடலில் பாடலாசிரியர் மதுரையை சுற்றியுள்ள இடங்களின் பெயர்களை போட்டு நிரப்பியிருக்கிறார். அதனால் ஒவ்வொரு ஊராக விஷாலையும், கிரனையும் அழைத்துச் சென்று ஐந்து நாள் பெண்ட் எடுத்துவிட்டாராம் டான்ஸ் மாஸ்டர் தினேஷ். சிரித்தபடி சொல்லும் கோபி இளைஞர்களை

குறிவைத்து 'திமிரு' படத்தை எடுப்பதாக கூறுகிறார். ஆக்ஷனும் ஆட்டமுமாக தியேட்டர் கலகலக்கவேண்டும் என்பதே ஒரே நோக்கமாகும் என்றார் கோபி.

# ரஜினி ரொம்ப சிம்பிள்

போகின்றவர்கள், வருகின்றவர்களையெல்லாம் இழுத்து நிறுத்தி உணர்ச்சிவசப்படுகிறார் ஸ்ரீகாந்த். சமீபத்தில் 'சிவாஜி' படப்பிடிப்பு தளத்திற்கு அருகே ஸ்ரீகாந்த் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பும் நடந்திருக்கிறது. ஸ்ரீகாந்த் அருகில் இருப்பது தெரிந்ததும் தங்கள் படப்பிடிப்பு தளத்திற்கு அவரை அழைத்திருக்கிறர்கள் ஷங்கரும் ரஜினியும். ஸ்ரீகாந்த் அங்கு சென்றபோது ரஜினி - ஸ்ரோயா டுயட்டை எடுத்துக் கொண்டிருந்தார் ஷங்கர். பிரமாண்டமான படப்பிடிப்புத் தளத்தை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீகாந்தின் தோளில் விழுந்திருக்கிறது ஒரு கை.

ஸ்ரீகாந்த் உணர்ச்சி வசப்பட, ரஜினியோ தனது காஸ்ட்யூம், நடிப்பு மற்றும் நடனம் பற்றி கேட்டிருக்கிறார். எவ்வளவு பெரிய ஸ்டார் அவர் தன்னோட நடிப்பு எப்படியிருக்குனு கேட்டு தெரிஞ்சுக்கிட்டார். அதுதான் அவர் சூப்பர் ஸ்டாராக இருக்கிறார். ஸ்ரீகாந்த் எதிர்பாராத வகையில் உபசாரங்களை வழங்கினார் ரஜினி.

# ஜோவுக்கு கல்யாணம்



'மணிகண்டா', 'வேட்டையாடு விளையாடு', 'ஜில்லுனு ஒரு காதல்', 'சிலந்தி', 'மொழி' போன்ற படங்களை கைவசம் வைத்திருக்கும் ஜோதிகா அனைத்து ஷூட்டிங்களையும் ஜூலை மாதத்துக்குள் முடித்துவிட வேண்டும் என அந்தந்த இயக்குனரிடம் சொல்லிவிட்டாராம். இப்படி அவசரப்பட என்ன காரணம் என்று பார்த்தால் ஒகஸ்டில் கல்யாணமாம். அதுதான் இந்த அவசரம் என்கிறார். அப்படியா? அப்ப கல்யாண ஆசையும் வந்தாச்சு.

சரத்குமார், தபு கணவன் - மனைவியாக நடித்துக் கொண்டிருக்கும் படம் 'சிலந்தி' இதில் வில்லியாக நடிக்கிறார் ஜோதிகா. 'மொழி' படத்தில் காது கேளாத, வாய் பேசாத பெண்ணாக நடிக்கும் அவர் 'சிலந்தி' படத்தில் எல்லோரும் வெறுத்து ஒதுக்கும் கேரக்டரில் நடிக்கிறாராம்.

# ரஜினி-ஸ்ரேயா தனுஷ்-ஸ்ரேயா

'திருவிளையாடல்' படத்தில் இருந்து ஸ்ரேயாவை நீக்கிவிட்டதாக வெளிவரும் செய்தியில் உண்மை கிடையாது என்று சொன்ன பூபதி பாண்டியன், ஸ்ரேயானவ வைத்து பதினைந்து நாட்கள் ஷூட்டிங் நடத்தியிருக்கிறார். ரஜினி ஜோடியா 'சிவாஜி' படத்திலும், தனுஷ் ஜோடியாக 'திருவிளையாடல்' படத்திலும் நடிக்கும் ஸ்ரேயா. இவ்விரு படங்களும் முடியும் வரை வேறு தமிழ்ப்படங்களில் நடிக்கமாட்டேன் என்று கூறியிருக்கிறார்.

# சினி மினி

கமலை வைத்து தமிழ் நாட்டில் சூடாக அரசியல் நடந்து கொண்டிருக்கிறது. கமல் பிரசாரம் செய்ய நூறுகோடி பேரம் பேசப்பட்டது என்கிறார் ...ரு கட்சித் தலைவர். இது பொய்யான குற்றச்சாட்டு என்று மழுப்புகிறது ...திர்க்கட்சி. இந்த சிக்கல்களை தவிர்த்து கொலிவூட்டில் தசாவதார ...வலையில் மிகவும் பிஸியாக இருக்கிறார் கமல்.

...ரேயொரு பாடலில் ஆடினால் போதும், பிறவிப் பயனை அடைந்து ...லாம் என்று 'சிவாஜி' பட இயக்குனருக்கு தூது அனுப்பியிருக்கிறார் ...பல இந்தி நடிகை ஒருவர்.

நடிப்பைப் போலவே பரத நாட்டியத்தையும் நேசிக்கிறார் பத்மப்பிரியா. ...ய்வு நேரத்தில் பரதநாட்டிய பயிற்சி எடுக்கும் இவரது ஆசை 'சங்கரா ...ரணம்' போன்ற நாட்டியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் ...டிக்க வேண்டும் என்பதே ஆகும்.

வாளமீன் பாடலில் தளுக்கி வழுக்கி நடனமாடிய மாளவிகா மீண்டும் ...ப்படியொரு கானாவில் ஆடுகிறார். ஆனால் இப்படியான கானாக்களில் ...டனமாடுவதைப் பார்த்துவிட்டு என்னை நிர்வாணமாக நடிக்கச் ...சான்னால் அப்படியெல்லாம் நான் ஒருபொழுதும் நடிக்க மாட்டேன் ...ன்று உறுதியாக கூறியிருக்கிறார் மாளவிகா.

படம் இயக்கப்போறேன், ஆஸ்காரை வாங்கப்போறேன் என்று எல் ...லாம் சொல்லிவந்துவிட்டு. ரஞ்சிதா தீடீர் என்று வில்லியாகிவிட்டார். ...பர்ணா நடிக்கும் நெஞ்சில் ஜில் ஜில் படத்தில் தான் இந்த வில்லி ...வதாரம். அவரிடம்உங்கள் கனவு பற்றிக் கேட்டால்? "நடிகை என்றால் ...லுவிதமாக நடிக்க வேண்டும். அப்படி என்றால் தான் முன்னுக்கு ...ரமுடியும்" என்று சமாளித்துவிட்டார் ரஞ்சிதா.

புலிகேசி மன்னன் வடிவேலு இரட்டை வேடத்தில் நடிக்கிறார். கத்திச் ...ண்டை, குதிரையேற்றம் என்று இடைவிடாது நடித்ததில் வடிவேலுவின் ...டை ...றைந்துவிட்டதாம். எடை குறைந்தாலும் இவருடைய கலக்கலில் ...றைவில்லையாம்.

ஆர்யா பட்டியல் படத்துக்குப் பிறகு பார்த்துப் பார்த்து புதுப்பட ...ா...பை ஒத்துக்கொள்ளும் ஆர்யாவிடம், அடுத்து என்ன படத்தில் ...டிக்... போகிறீர்கள் என்று கேட்டால்? "இனிமேல் ஒரு படத்தை முடிச்சிட்டுத்தான் அடுத்த படத்தில் நடிப்பேன். நிறைய பேர் கிட்ட கதை கேட்டுட்டு இருக்கேன். ஆனால் அடுத்த படம் எது என்று இன்னும் முடிவு செய்யவில்லை" என்றார்.

★ பொதுவாக தமிழ் சினிமாவில் ஹீரோக்கள் இறப்பது போன்ற காட்சி இடம்பெறுவது ரசிகர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆனால் புதுப் பேட்டையில் தனுஷ்- சினேகா இறந்து விடுவது போல இயக்குநர் செல்வராகவன் காட்சி அமைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முடிவை மாற்றும்படி செல்வாவிடம் கூறினால் அது தான் அப்படத்திற்கு பொருத்தமான காட்சி என்று மறுத்துவிட்டாராம் செல்வா.

★ மே 8ஆம் திகதி நடைபெற இருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலுக்காக சூடுபறக்கும் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளன அரசியல் கட்சிகள். இவர்களின் அரசியல் சதுரங்கத்தில் இருந்து தப்பிக்க பிரபல சூப்பர் ஸ்ரார்கள் அமெரிக்காவுக்கு தப்பிச்செல்கிறார்களாம்.

★ விஜய்யை தவிர அநேகமாக எல்லோரும் விஜய்யின் அடுத்த படம் குறித்து பேசிவிட்டார்கள். சிந்து துலானியும் தன் பங்குக்கு நான் விஜய் நடிக்கும் படத்தின் இரண்டாவது நாயகி என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறாராம்



## சுட்டிப் பையனும் படுசுட்டிப் பெண்ணும்

திரை விமர்சனம்

குழந்தைகளை குதூகல மூட்டும் 3டி படங்கள் ஆண்டுதோறும் கோடை விடுமுறைக்கு வெளிவருவது வழக்கம். இந்த வருடம் 'சார்க் பாய், லாவா கேள்' என்ற 3டி படதை தமிழில் டப் செய்து 'சுட்டிப் பையனும் படுசுட்டிப் பெண்ணும்' என்ற பெயரில் வெளியிட இருக்கிறார்கள்.

வினோதமான விஞ்ஞான கனவுகளை அடிக்கடி காண்கின்றான் ஒரு சிறுவன், கனவுலகத்தில் சூப்பர் பவர் கொண்ட ஒரு பையனும் பெண்ணும் அவனை விண்வெளியில் உள்ள ஒரு விசித்திர உலகுக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கு மனித முகமும் மனித உடலும் கொண்ட ரோபோ வில்லனை எப்படி அழிக்கிறார்கள் என்பது தான் கதை.

பனி உலகம், உலோக விலங்குகள், விண்வெளி அனைத்தையும் 3டி தோற்றத்தில் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். சிறுசுகள் கோடையை குதூகலமாக கழிக்க சரியான படத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சந்தேசமாக விடுமுறையைக் கழியுக்கள் சிறுசுகளே...



## திருப்பதி டைட்டில் கர்நாடகாவில் தடை

படம் தொடங்கும்போது ஆரம்பித்தது பெயர்ப் பிரச்சினை. இன்னும் அதன் சூடு தணியவில்லை. 'திருப்பதி' என்னுடைய டைட்டில் என்று தமிழ் தயாரிப்பாளர் தொடர்ந்த வழக்கு விசாரணை முடிந்து ஏ.வி.எம்.க்கு சாதகமாக சில நாட்களுக்கு முன்பு தீர்ப்பாயிற்று. இப்போது பெயர் வடிவில் புதிய பூதம் கிளம்பியிருக்கிறது கர்நாடகாவில். 'திருப்பதி'யை கர்நாடகாவில் டப் செய்து திருப்பதி என்ற பெயரிலேயே வெளியிட முடிவு செய்தனர். நடிகர் ராஜ்குமாரின் மறைவால் பெங்களூர் முழுவதும் உள்ள தியேட்டர்கள் மூடப்பட்டு 'திருப்பதி'யின் ரிலீஸ் தேதி தள்ளிப் போனது. கர்நாடகாவில் 'திருப்பதி'யை ரிலீஸ் செய்யலாம் என்றால் தந்திரமாக முளைத்திருக்கிறார் ஆர்.எஸ்.கவுடா.



தமிழில் மிகவும் அடக்கமான பெண்ணாக இடுப்பை மட்டும் காட்டி வருகிறார் சதா. கடந்த ஆண்டு கன்னடத்தில் வெளியான மோனலிசா, பிறகு தெலுங்கிலும் வெளிவந்தது. இரண்டுமே ஹிட். காரணம் என்னவென்றால் 2 வேடத்திலும் சதா ஓவர் கிளாமராக நடித்திருப்பது தானாம். இப்போது டப் செய்து அந்தப் படம் தமிழிலும் வெளிவர இருக்கிறதாம். அதிலும் சதா கிளாமராக நடிப்பாரா என்பது படம் வந்த பிறகு தான் தெரியும்.

## தெலுங்கில் கிளாமர் தமிழில் அடக்கமான பெண்

"பளார்'' என்று கன்னத்தில் விழுந்த அடியினால் துடித்துப் போனாள் அனு. எதிரே அப்பா மிகுந்த கோபத்துடன் நின்றிருந்தார்.

'' ஐயோ வேண்டாங்க அடிக்காம பேசுங்க'' என்று விசும்பலுடன் அம்மா.

''பார் நான் இவ்வளவு பேசிறன் வாயைத் திறக்கிறாளான்னு பார். அவ்வளவு கொழுப்பு'' என்று பொரிந்து தள்ளினார். அப்பா.

'' வாயைத் திறந்து சொல்லேண்டி. இனிமேல் அவனைப் பார்க்க மாட்டேன். அவனோட பேச மாட்டேன் என்று சொல்லடி சொல்லு'' என்று கெஞ்சினாள் அம்மா.

''என்னால அவனைப் பார்க்காமல் இருக்க முடியாதும்மா. அவன் இல்லாம என்னால வாழமுடியாதும்மா. ப்ளீஸ் என்னப் புரிஞ்சிக்கோங்க '' என விசும்பினாள் அனு.

''அடிப்பாவி உன்னைப் பெத்து இவ்வளவு காலமும் வளர்த்ததற்கு நீ செய்யற நன்றிக்கடனாடி இது. இதவிட நீ எங்களைக் கொன்று போட்டுடலாம்''.

''ஐயோ அம்மா'' என அலறினாள் அனு.

''இதப் பாரும்மா உங்கம்மா சொல்றத கேட்டே நீ இப்படி அலர்றியே இந்தக் கல்யாணம் நடந்தால் எங்க பிணத்துக்கு மேலதான் நடக்கும். உனக்கு அதுதான் ஆசையென்றால் நீ இங்கிருந்து போய்விடு'' என்று தீர்மானமாய் சொன்னார் அப்பா.

''அப்பா எனக்கு அவனை ரொம்பப் பிடிச்சிருக்கு, அவனுக்கும் என்னைப் பிடிச்சிருக்கு. அவன் இல்லேன்னா எனக்கு பைத்தியமே பிடிச்சிடும். அவன் எனக்கு வேணும்பா வேணும்.''

''நான் சொல்றதை நல்லா கேள் அனு. அவன் வேற சாதி, நாங்க வேற சாதி. அவன உனக்குக் கட்டி வச்சா இந்த ஊருக்க யாராவது நம்ம குடும்பத்தை மதிப்பாங்களா? இல்ல, சொந்தக்காரங்கதான் நமளை ஏதாவது விசேஷத்துக்குக் கூப்பிடுவாங்களா? அதோட நீ ஒரு பெண்ணில்ல, உனக்கப்புறம் தங்கச்சி இருக்கிறாள். அவளுக்கு அப்புறம் யார் மாப்பிள்ளை கொடுப்பாங்க. சொல்லு. அதனால நீ அவனை மறக்கிறதுதான் ஒரே வழி. இல்லன்னா நாங்க மூணு பேரும் விஷத்தைக் குடிச்சு செத்துப் போயிடுவோம். நீ அவனோடு சந்தோஷமாயிரு'' என்று கூறிவிட்டு மேலேயிருந்த விஷப் போத்தலை எடுத்தார் சிவராமன்.

'' ஐயோ அப்பா விடுங்க'' என அதைப்பறித்து எறிந்தாள் அனு.

''ஏம்பா உங்களுக்கு இந்த ஊர் முக்கியம், சொந்தக்காரரோட விசேஷம் முக்கியம். ஆனா என்னோட சந்தோஷம் முக்கியமில்லை, அப்படித்தானே? அப்பா நீங்களும் அம்மாவை காதலிச்சு வீட்டை எதிர்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கதானே. அப்போ உங்களுக்குத் தெரியாத கௌரவமெல்லாம் இப்போ தெரியுதில்ல, பரவாயில்லை அப்பா. நீங்க எப்போதாவது என்னையும் என் காதலையும் புரிஞ்சுக்கிவீங்க. அது வரைக்கும் நான் காத்திருப்பேன். எனக்கு இந்த ஜென்மத்தில கலியாணம் என்று ஒன்று நடந்தா அது ராஜேஷோடதான். அதுவும் உங்க சம்மதத்தோடதான் '' என்று முடிவாய் சொல்லி விட்டு கட்டிலில் போய் தொப்பென விழுந்தாள் அனு.

க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் படித்து விட்டு வீட்டிலிருந்த அனுவுக்கு தனியார் கம்பனி ஒன்றில் நல்ல வேலை கிடைத்தது.

'' அனு முதல் முதலா வேலைக்குப் போறாய், உனக்கு அனுபவமும் இல்ல. நீ சின்னப்பொண்ணு. உன் துடுக்குத்தனத்தையெல்லாம் அங்க காட்டாதே. உனக்கு மேல வேலை செய்யிறவங்களோட மரியாதையாய் நடந்துக்கோ. அப்புறம்......

''என்னங்க நீங்க, அவளுக்கு நேரமாகிட்டே இருக்குது. இந்த நேரத்தில கீதோபதேசம் பண்ற மாதிரி இவ்வளவு பெரிசா அட்வைஸ் பண்ணிக்கிட்டு, அவ ஒண்ணும் சின்னப்பிள்ளையில்லை. இருபது வயசாச்சு ஞாபகமிருக்கட்டும்''


சிறுகதை

என தந்தையைக் கடிந்து விட்டு அனுவிடம் திரும்பி'' அனு பயப்படாமபோட்டு வாம்மா'' என சிரித்த முகத்துடன் அனுப்பி வைத்தனர்.

அனு படபடத்த இதயத்துடன் ஆபீசுக்குள் நுழைந்தாள். அங்கு அவளைப் போலவே இன்னும் சிலர் வேலைக்குச் சேர்ந்திருந்தார்கள். சற்று நேரத்தில் அவர்களையெல்லாம் சந்தித்த மனேஜர் அவர்களுக்கு வேலையைப் பற்றிக் கூறிவிட்டு ஃபோனில் ''ராஜேஷ் என் ரூமுக்குக் கொஞ்சம் வாங்க'' எனக் கூப்பிட்டார். ''எக்ஸ்கியூஸ் மீ சேர்'' என கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தான் ராஜேஷ்.

எல்லோரது கண்களும் ராஜேஷைப் பார்த்தன. அனுவும் பார்த்தாள். ஆண்மைக்கே உரிய கம்பீரத்துடன்

# சாதி என்னும் சாக்கடையால்



நின்றான் ராஜேஷ். அவனைப் பார்த்ததுமே அனுவுக்கு என்னவோ செய்தது. நெஞ்செல்லாம் படபடத்தது.

''வாங்க ராஜேஷ். இவங்கதான் நம்ம ஆபீசுக்கு புதுசா ஜொய்ண்ட் பண்ணி இருக் கிறாங்க'' என மனேஜர் கூற அவர்கள் பக்கம் திரும்பி சிறிதாகப் புன்னகைத்தான் ராஜேஷ். அந்தச் சிரிப்பில் சொக்கிப் போய் விட்டாள் அனு.

''எனவே வேற ஏதாவது டவுட் இருந்தா ராஜேஷ்கிட்ட கேட்கலாம். அவர் உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவார்'' என கூறிவிட்டு ''நீங்கள் உங்க ரேபிளுக்கு போலாம்'' என்றார் மனேஜர்.

ரேபிளில் போய் உட்கார்ந்த அனுவுக்கு வேலையே ஓடவில்லை. மனசுக்குள் பட்டாம்பூச்சி பறப்பது போன்ற ஓர் உணர்வு, அவளுள் இனம்புரியாத ஏதோ ஒரு மாற்றம். அது என்னவென்று அவளுக்கே புரியவில்லை. மீண்டும் மீண்டும் அவனது அந்தச் சிரிப்பே அவள் கண் முன் ஓடியது. ஒருவாறு லஞ்ச் ரைம் வந்தது. மெதுவாக அவனது ரேபிளருகே சென்ற அனு.

''ஹலோ ஐ ஆம் அனு'' என்றாள்.

''ஹலோ ஐ ஆம் ராஜேஷ்'' என்று புன்னகைத்தான்.

மீண்டும் தடுமாறினாள் அனு. அவள் கண் முன்னே சொடக்குப் போட்டவன்,

''வேலையில ஏதாவது டவுட்டா?'' என வினவினான்

''ஹம் அதெல்லாம் ஒன்றுமில்லை. இங்கு யாரையும் தெரியாது. உங்களை மட்டுந்தான் மனேஜர் அறிமுகப்படுத்தினார். அதுதான்....... என்னுடன் பேசுவதில் உங்களுக்கு ஏதாவது பிரச்சினையா?'' என்றாள்.

''நோ, நோ அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.''.

இவ்வாறு தொடங்கிய சிநேகம் நாட் செல்லச் செல்ல அனுவுக்கு அவன் மீது காதலாக மாறியது. ஆனால் அதை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் தவித்தாள் அனு. ஒருவாறு அவனிடம் அதை சொல்லியும் விட்டாள்.

'' ராஜேஷ், எதுவுமே பேச மாட்டேங்கிறீங்க. நான் ஏதாவது தப்பாக சொல்லி விட்டேனா? ''

''சீச்சீ தப்பொன்றுமில்லை. ஆனால், உங்களுக்கு என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் என்ன தெரியும். நான் ஏற்கனவே கலியாணமானவனாக இருக்கலாம்'' என கூறும்போதே சிரித்து விட்டாள் அனு.

''இதப்பாருங்க எப்ப நான் உங்களை முதல் முதல் பார்த்தேனோ அப்பவே உங்களைப் பற்றி எல்லாம் விசாரிச்சிட்டன். உங்களைப் பற்றி உங்க குடும்பத்தைப் பற்றி எல்லாம்.'' என அவள் கூறும்போதே அவன் முகம் மாறியது.

''எல்லாம் தெரிந்துமா என்னைக் காதலிக்கிறேன் என்று சொல்றீங்க'' என மறுபடியும் கேட்டான் அவன்.

''எனக்குப் புரியல ராஜேஷ் நீங்க எதைப்பற்றி கேட்கிறீங்க.''

'' அதில்ல நீங்க வேற சாதி, நான் வேற சாதி அதுதான்.......

''என்ன ராஜேஷ் மடத்தனமா பேசுறீங்க .சாதி, மதம், அந்தஸ்து இதையெல்லாம் கடந்ததுதான் காதல். அதுவும் இந்த நவீன யுகத்தில சாதி மதம் அது இதன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறீங்களே'' என்றாள் அனு.


யாழ்ப்பாணம்
அனு


''அனு ,இதெல்லாம் பேசிறதுக்கு நல்லா இருக்கும். காதலிக்கும் போதும் இதெல்லாம் தெரியாது. ஆனா கல்யாணம்னு வரும்போது இதையெல்லாம் பார்த்துத்தான் இந்த சமூகம் ஏற்கிறது. அதனால்..... '' என இழுத்தான்.

''இதைப்பாருங்க ராஜேஷ் எனக்கு இந்த சமுதாயம் மத்தவங்களைப்பற்றியெல்லாம் கவலை கிடையாது. வாழப் போறது நாம். அதனால உங்க முடிவ நீங்க சொல்லுங்க'' என முடிவாகக் கேட்டாள் அனு.

''உங்கள வேண்டாம்னு சொல்ற அளவுக்கு நான் ஒன்னும் தியாகி இல்லை. ஆனாலும் இதை உங்க வீட்டில ஏத்துப்பாங்களா? ''

''எங்க வீட்டில இது வரைக்கும் நான் ஆசைப்பட்ட மாதிரித்தான் எல்லாம் நடந்திருக்கு. நான் போடற உடுப்பிலிருந்து நான் பாவிக்கிற எல்லாமே என்னோட சொய்ஸ்தான். அதனால என்னோட வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிறதிலையும் என்னோட விருப்பப்படிதான் நடந்துக்குவாங்கன்னு நான் நம்பிறன். என்னோட விருப்பத்திற்கு மாறா எதுவும் நடக்காது'' என்றாள் அனு.

'' அனு உண்மையை சொல்லனும்னா உங்களைப் பார்த்த நாளிலேருந்து எனக்குள்ளேயே ஒரு இனம் புரியாத மாற்றம். நான் தினம் ஆபீஸ் வரும் போது கடவுள்கிட்ட என்ன வேண்டுவேன் தெரியுமா? ஐந்து மணிக் கக் கூடா துன்னு தான். ஏன்னா ஐந்து மணியானா நீங்க போய்விடுவீங்க. அப்புறம் அடுத்த நாள்தான் உங்களைப் பார்க்க முடியும். ஏனோ என்னால உங்களைப் பார்க்காமல் இருக்க முடியுறதில்லை. ஆனால் நான் இதுக்கெல்லாம் தகுதியானவனான்னு எனக்குத் தெரியல. அதனால்தான் நானே உங்ககிட்ட சொல்ல, ஐ லவ் யூ அனு'' என ஆனந்தத்துடன் கூறினான் ராஜேஷ்.

''ராஜேஷ் இவ்வளவு ஆசையை மனசுக்க வச்சுக்கிட்டு எதுவுமே சொல்லாம இருந்தீங்களா, ஐ லவ் யூ ராஜேஷ், ஐ லவ் யூ சோ மச்''.

அதன் பின் அவர்கள் காதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. நீயின்றி நானில்லை என்னுமளவு நெருக்கம் உண்டானது. இருவரும் காதல் வானில் சிறகடித்துப் பறந்தார்கள். எங்கெங்கோ எல்லாம் சுற்றினார்கள். அப்படி சுற்றும்போது சொந்தக்காரர் ஒருவர் பார்த்து விட்டார்.

அப்புறம் என்ன உடனடியாக அப்பாவுக்கு விசயம் தெரிந்தது. உடனே பூகம்பம் வெடித்தது. இதை அனு சற்றும் எதிர்பார்க்கவில்லை. துடித்துப் போனாள். அப்பாவா இப்படி எல்லாம் பேசுகிறார் என்று அதிர்ந்து விட்டாள். இதற்கு முன் அவரை இப்படிப் பார்த்ததேயில்லை. அதன் பின் ஒரு வாரமாக அவள் ஆபீசுக்குப் போகவில்லை. அழுது கொண்டு வீட்டிலேயே அடைந்து கிடந்தாள்.

வீட்டில் யாரும் அவளுடன் பேசவும் இல்லை. அந்த ஒரு வாரமாக அவள் ராஜேஷைப் பார்க்காமல் துடித்துப் போனாள். வாழ்க்கையே வெறுத்தது. இவ்வாறு ஒரு வாரம் கழிந்தது.

அடுத்த திங்கட்கிழமை வேலைக்குப் போக ஆயத்தமானாள். குளித்து விட்டு உடை மாற்றினாள். அம்மா கதவைத் திறந்து கொண்டு வரும் சத்தம் கேட்டது.

(27ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைப் புனல்

## உயிரோசை

விழியினில் விம்பமாய்
வீழ்ந்தது ஒரு தேவதை
கனவினில் வந்து
காவியம் பாடுதே...

வானம் பூமி வாழ்த்தும்
எம் காதலுக்கு
ஜென்மங்கள் வேண்டாம்
ஓர் நிமிடம் கேட்கிறேன்
என் வாழ்விற்கு உன்னால்
அர்த்தம் வேண்டும்

உன் பார்வையை தந்து செல்
ஓவியம் வரைகிறேன்
உன் புன்னகையில்
புதுச் சிலை வடிக்கிறேன்

வா வா அன்பே
என் உயிரின் ஒளியே

உயிர் பிரிந்து
[illegible]ல் பிரிந்து
காற்றோடு கலந்தாலும்
கண்ணே உன்
நினைவுகளை சுமந்து
காற்றோடு தூசியாய்
கலந்தே வாழ்ந்திடுவேன்.

*மா. சிவசோதி*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## நாளை நாம்

நீதிகளை தகர்த்தெறிந்து
அராஜகங்கள் பல புரிந்து
தமிழினத்தையே அழிக்கும்
இனவாத சக்திகளே!
விடுதலைப் போரினால்
விழிமூடிப் போனவர்கள்
எல்லாம்
புதைகுழிகளில்
புதைக்கப்பட்டவர்கள் அல்ல
விதை நிலத்தில்
விதைக்கப்பட்டவர்கள்
அவர்களுடைய தேசிய
தாகத்தை
தீர்க்கும் வரை
அணையாத தீயாக
ஓயாத அலையாக
சாயாத மலையாக
நாளை நாம் இம்மண்ணில்...

*எஸ். சாது*
*நெடுங்கேணி.*

## பெண்மையின் குமுறல்

ஓ! மானுடமே
மரத்துப் போன மங்கையின்
மனக் குமுறலை மனமிரங்கி
ஒரு நொடி கேளாயோ!

வீதியில் இறங்கி நாம் நடந்தால்
காமுகரின் கழுகுப் பார்வைகளும்
ஆடையின்றித் தெறிக்கும்
ஆபாச வார்த்தைகளும்
நெருஞ்சி முள்ளாய்
நெஞ்சை நெருடுவதை நீ
அறிவாயோ!

சீதனம் எனும் பேரில்
பெண்மையை பேரம் பேசுவதால்
மண மேடை ஏறுவதையும்
பெண்ணைப் பெற்றவர்
பேதலித்து நிற்பதையும்
நீ அறிவாயோ!

தாலி கட்டி தாரமாக்கியதால்
பெண்மையின் உணர்விற்கு
உயிர் கொடுக்க மறுக்கும்
கணவன் என்னும் கயவனால்
கண்ணீரில் மிதக்கும் மங்கையரை
நீ அறிவாயோ!

*க. வாசுதேவன்*
*முருங்கன்.*

## தமிழன் இன்னும் அழியவில்லை

குண்டுகள் பல பொழிந்து
குடித்தாயே பல உயிரை
எறிகணைகள் பலவற்றால்
எம் இனத்தை அழித்தாயே
இன்னும் அழியவில்லை தமிழன்
முழுவீச்சாய் வளர்ந்து விட்டான்
வெட்ட வெட்ட தளிர்க்கும் தமிழினம்
எதிரியே!
உன் குருதியில் எம் மாவீரர் கல்லறை
கழுவப்படப் போகின்றது வெகு
விரைவில்
தூங்கும் மாவீரர்களே,
தூக்கம் ஏன்?
துயிலுங்கள் அமைதியாக
பக்கத்தில் எமது கல்லறைகள்
கவிதைகள் பல புனைவோம்
அருகிருந்தே
பார்ப்போம் தமிழீழம் ஒருநாள்
இன்று நாம் நிமிர்ந்து நிற்கின்றோம்-பல
போராளிகளின் வீரதீரத்தினால்
மாவீரர்களின் அர்ப்பணிப்பால்
பாதை நேர்வழி பலமே எமது ஒரேவழி
பொங்கி எழுந்து விட்டோம்
புலிப்படையாய் தமிழீழத்தில்
எம் தலைவன் வழிகாட்ட
வென்றிடுவோம் தமிழீழத்தை
இன்னுமென்ன தயக்கம் தமிழா?
எழுந்து வா தமிழா, எழுந்து வா!

*இ. இசையரசன்*
*உடுத்துறை.*

## கரும்புலி

கரும்புலியெனும் காவியம்
எம் தேசத்தில் வரையப்படும் ஓவியம்
இவர்களின் இன்றைய சாகியம்
நாளைய எங்களின் தேசியம்
சாவுக்குள் வாழ்வதே இவர்களின் தியாகம்
இவர்களின் அஸ்தமனம்
நாளைய தமிழீழத்தின் உதயம்
பஞ்சு போன்ற இதயம்
இரும்பையொத்த அணியம்
என்றும் இவர்கள் நினைவுடன் பயணிப்போம்

*த. இசையமுதன்,*
*கிளிநொச்சி.*

**உயிருள்ளவரை...**
கல்லறைகள் என்றும்
கண்ணி வெடிகள் என்றும்
கண்கலங்கி நின்றது
போதுமடா
வா, பகைவரை அழிப்போம்!
*ஏ. ஜே. எம். அம்ஜத்*

**உறுதி**
உனது இலட்சியத்துக்கு
நான் தடையல்ல!
வெற்றியோடு வா...
காத்திருப்பேன் உயிர் உள்ளவரை!
*எம். இந்திரகலா*
*உரும்பிராய்.*

**இன்பம்**
துன்பத்திலும் இன்பம்- தேடும்போது
துவண்டு விடாதே
துணிந்து நில்
தூரத்தில் அல்ல இன்பம்!
*என். வாசுகி*
*புதுக்குடியிருப்பு.*

**குழந்தை**
மனிதனால் உருவான
பேசும் தெய்வம்-தினம்
கண்முன் நடமாடும்
குட்டிச் சொர்க்கம்
*சு. பிரீத்திகா*
*புத்தளம்.*

**திருமண**
**நாளன்று...**
மாலை சூடும்
மணவறை தனிலே-நீ
பக்கத்தில் வந்தாய்-நான்
வெட்கத்தில் குனிந்தேன்!
*க. உமா*
*உடுப்பிட்டி.*

**[illegible]டாதே**
எ[illegible]த்தில் அன்பு மலர்களை
தூவ மறந்து விட்டாலும்
என் கல்லறையிலாவது
உன் கண்ணீர் மலர்களை
தூவ மறப்பாயா? மறந்து விடாதே.
*அ. டயானி*
*முரசுமோட்டை.*

**வி(ச)தி**
என்னவளை எண்ணி
என் கண்கள் விட்ட கண்ணீரை
நிறுத்தி விடுவதற்காய்
ஒவ்வொரு இரவிலும்-என்
நண்பன் கூறும்
பெறுமதி மிக்க சொற்கள்
*கு. தெய்வமதன்*
*முள்ளியவளை.*

**விடியலின் விலாசம்**
என் சமுதாயம்
நீண்ட நாட்களாகவே
தேடிக் கொண்டிருக்கிறது
விடியலின் விலாசத்தை
தெரிந்தவரே கூறுங்கள்
வாழவேண்டும்
என் சமுதாயம்
*ம. மதி*
*பூநகரி.*

## பிரிவு

உன் பார்வையை
நீ பேசிய வார்த்தையை
மறக்க முடியவில்லை
அர்த்தம் பிரியாமலே
அவை புதைந்து
கிடக்கின்றன
அதற்குள்ளே - நீ
என்னை விட்டு
பிரிந்து விடாதே
விடைகாணா
நினைவுகளுடன்
தவிக்கிறேன்

*கே. நதியா*
*பூநகரி.*

**அன்றும்... இன்றும்...**
அன்று... ராமனுக்காக
சீதையும் காடு நடந்தாள்
இன்று... ராமன்
சீதையை சிறையிலிட்டு
காட்டிற்கு செல்கிறான்
சூர்ப்பனகை தேடி...
*ஆ. சுதர்சனா*
*நெல்லியடி.*

**தேவை**
கடலுக்கு அலை-தேவை
பூவுக்கு வாசம்-தேவை
வானுக்கு நட்சத்திரம்-தேவை
எனக்கு உன் அன்பு-தேவை!
*சி. றஞ்சிதா*
*புதுக்குடியிருப்பு.*

**காதல்**
கண்ணால் கதை பேசி
உதட்டால் உச்சரித்து
இதயத்தில் கோயில் கட்டி
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது...
*கு. பிரகாஷ்.*

## ஐந்தறிவு மனிதன்

பிறவிகள் எடுக்கும்
மனித ஜென்மமே!
நாயாய் பிறந்து
நன்றி மறந்தாய்!
நரியாய் திரிந்து
வஞ்சனை செய்தாய்
குரங்காய் கூடி
கட்சிகள் தாவினாய்!
காகமாய் மாறி
காட்டிக் கொடுத்தாய்
ஆறறிவை விட்ட நீ
ஐந்தறிவு மிருகமானதால்
ஊரழிவை தோற்றுவித்து
உருப்படாமல்
போய்விட்டாயே!

*நா. ஜெயபாலன்,*
*பிபிலை.*

**குறுங் கவிதைகள்**

எமது அன்புக்குரிய வாசகர்களே! நீங்கள் வழக்கமாக அனுப்பிவைக்கும் கவிதைகளுடன் குறுங்கவிதைகளும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. நான்கு வரிகளுக்கு மேற்படாத உங்கள் குறுங்கவிதைகளை ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள். தரமான கவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க காத்திருக்கின்றது உங்கள் அபிமான சுடர் ஒளி. பிரதி வாரமும் உங்கள் குறுங்கவிதைகள் எங்கள் கவிதைப் புனல் பகுதிக்கு அழகு சேர்க்கும். உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி

குறுங் கவிதைகள்
கவிதைப் புனல்
சுடர் ஒளி,
86, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14

# சிறுவர் பக்கம்





தி. விஜய்
புத்தடி வீதி,
விசுவமடு



க. பிரியா
நாலாம்கட்டை
பூநகரி



கு. சுஜாதா
தரம் 8
மு/ பாரதி வித்தியாலயம்

# மரணத்தின் அழைப்பு



அரபு நாடுகளின் வட்டாரப்பகுதியில் வழங்கப்படும் கதை இது.

மன்சூர் அலி மிகப்பெரிய வர்த்தகப் பிரமுகர். அவரது வேலையாள் கடை வீதிக்குப்போனான். போனவேகத்தில் பின்னங்கால் பிடரியில் படும்வேகத்தில்ஓட்டம் பிடித்து மீண்டும் எஜமானின் வீட்டுக்கு வந்தான்.

அவன் பதறியடித்து ஓடி வருவதைப்பார்த்த மன்சூர் அலி, "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

வேலையாளின் முகத்தில் பீதி, "நான் எமனைப் பார்த்தேன்." பதட்டத்துடன் சொன்னவன் தொடர்ந்தான். "நான் கடைவீதியில் பழங்கள் வாங்கிக் கொண்டிருந்தேன். யாரோ என்னையே பார்ப்பது மாதிரித் தெரிந்தது. திரும்பிப்பார்த்தால் அங்கே எமன் நின்றுகொண்டிருந்தான். தயவு செய்து எனக்கு ஒரு குதிரையைக் கொடுங்கள். எனக்கும் எமனுக்கும் நீண்ட இடைவெளி இருக்கவேண்டும் என நினைக்கிறேன். இப்போதே நான் பாக்தாத் போகப்போகிறேன். அங்கு சிலநாட்கள் தங்கிவிட்டு அதன்பிறகு வருகிறேன்." வேலையாள் பயத்தில் அரற்றினான்.

மன்சூர் அலியும் தன்னிடம் இருக்கும் குதிரைகளிலேயே மிக வேகமாக ஓடக்கூடிய ஒரு குதிரையைக் கொடுத்துஉதவினார். வேலையாள் உடனடியாக அதன்மீது சவாரிசெய்து புயல்வேகத்தில் விரைந்தான்.

வேலையாள் சென்றபிறகுஅவன் சொல்வது உண்மைதானா என்பதை அறிய விரும்பிய மன்சூர் அலி மார்க்கெட்டிற்குச் சென்றார். அங்கும் இங்கும் பார்த்தார்.அப்போது ஒரு இடத்தில் எமன் நிற்பது தெரிந்தது.மன்சூர் அலியைப் பார்த்ததும் எமன் அருகில் வந்தான்.

மன்சூர் அலி ஒரு நிமிடம் அதிர்ந்துபோனார். எமன் அவர் அருகில் வந்ததும் " என் வேலையாளை ஏன் பயமுறுத்தினாய்?" துணிச்சலை வரவழைத்துக்கொண்டு கேட்டார்.

"நானா பயமுறுத்தினேன்! இல்லவேஇல்லை.அவனை நான் இங்கே பார்த்தபோது ஆச்சரி[illegible] அல்லவா அடைந்தேன்?"

"ஆச்சரியமடைந்தீர்களா? ஏன்?"மன்சூர் அலி கேட்டார்.

"ஏனென்றால் இன்று இரவு அவனை பாக்தாத்தில் பார்த்து உயிரை எடுக்க நினைத்திருக்கிறேன்.அப்படி இருக்கையில் அவன் ஏன் இங்கு வந்தான் என்பது புரியாமல் குழம்பினேன்." என்றான், எமன்.

குழந்தைகளே!இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா? மரணத்தை எங்கும் யாராலும் வெல்லமுடியாது என்பதுதான்.

## கேள்வி இங்கே...

1)மனித உடலில் உள்ள உணவுக் குழாயின் நீளம் எவ்வளவு?
2)திரவத் தங்கம் எனப்படுவது எது?
3)சத்திய சோதனையை எழுதியவர் யார்?
4)இந்தியாவின் நுழைவாயில் எது?
5)கங்கை ஆறு எங்கு உற்பத்தியாகிறது?
6)கிரிக்கெட்டில் சர்வதேசஒருநாள் போட்டி முதன்முதலில் எப்போது நடந்தது?
7)ஒலிம்பிக் விளையாட்டின் தாயகம் எது?
8)கம்ப்யூட்டர் எதிரியின் பெயர் என்ன?
9)உலகின் மிகப்பெரிய நூலகம் எங்கு உள்ளது?
10)உலகிலேயே பெண் காவலர்கள் அதிகமாக உள்ள நாடு எது?

## பதில் இங்கே...

1)30அடி.
2)பெட்ரோல்.
3)மகாத்மா காந்தி.
4)மும்பை.
5)கங்கோத்திரி.
6)1971.
7)கிரேக்க நாடு.
8)வைரஸ்.
9)இங்கிலாந்து பொருட்காட்சிச்சாலை நூலகம்.
10)இங்கிலாந்து



இ. ரமேஷ்
தரம் - 11
மு/ அளம்பில் றோ.க வித்தியாலயம்

## பேனா நண்பர் பகுதி




பெயர்: வீ. கருணராசா
கல்வி கற்கும் ஆண்டு: 9 A
பாடசாலை: யா/ விக்னேஸ்வராக் கல்லூரி
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், சித்திரம் வரைதல்
தொடர்பு மொழி: தமிழ்
முகவரி: வீ. கருணராசா
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

## வட்டத்திற்குள் சிக்கும் வார்த்தைப் புதிர்கள்

இங்கு கலைந்த நிலையில் சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி நேர் எதிரே உள்ள கட்டங்களில் நிரப்பவேண்டும். பின்னர் வட்டத்திற்குள் சிக்கியிருக்கும் எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒழுங்குபடுத்தினால் படிப்பினை தரக்கூடிய ஒரு பழமொழி கிடைக்கும். அது என்ன பழமொழி என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ப | ம் | ள | ள் |
| 2. | டி | கி | லா | ல் |
| 3. | அ | கு | ங் | ண |
| 4. | த | த் | பு | ன் |
| 5. | அ | ம் | க | தி |
| 6. | லை | பு | ம | ப் |
| 7. | ந | ம் | ன | ளி |
| 8. | கு | ல் | யி | |





## அன்புக்குரிய தம்பி தங்கைகளே!

உங்களுக்குரிய சிறுவர் பக்கத்தில் பேனா நண்பர் பகுதி ஒன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடவுச்சீட்டு (Passport Size) அளவிலான உங்கள் வர்ணப் புகைப்படத்துடன், உங்கள்

- பெயர் -
- முகவரி -
- பொழுதுபோக்கு -
- கல்வி கற்கும் ஆண்டு -
- பாடசாலை -
- தொடர்பு மொழி -

இவற்றையும் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

வாராவாரம் இவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும். அத்துடன் சிறுவர் பகுதியை அணி செய்ய உங்கள் ஆக்கங்களும் எதிர்பார்க்கப் படுகின்றன.

# பித்தன் பதில்கள்



செ.தமயந்தி, வவுனியா.

கே: பித்தா! புதிய வருடத்தில் உமது மனைவி உம்மை ஒழுங்காக நடத்துவேன் என்று உறுதி பூண்டிருக்கிறாராமே! உண்மையா?

பதில்: ஒ..... ஓம்.... உறுதி பூண்டுதான் இருக்கிறாள். புதுவருடத்தன்று காலையில், 'இனிமேல் என்னை அடிப்பதில்லை' என்று சத்தியம் செய்து தந்தாள். அந்தப் புழுகில் அன்று நான் கொஞ்சம் கூட ஆட்டம் போட்டேன். பொறுக்க முடியாமல் பின்னேரம் அறைக்குள் கூப்பிட்டு வைத்து உதை.. உதை என்று உதைத்து விட்டாள்....



**த.வாகீசன், புதுக்குடியிருப்பு.**

கே: பித்தா! உமக்கு இங்கிலீஷ் தெரியுமா? தெரியுமென்றால் நான் கேட்கும் கேள்விக்கு சரியாகப் பதில் சொல்லும் பார்ப்போம்... A,B,C,D எத்தனை எழுத்துக்கள்...

பதில்: நீர் சாதாரண பார்ட்டி என்றால் எனது விடை - 26. நீர் கொஞ்சம் லொள்ளு பார்ட்டி என்றால் எனது விடை 4

**க.தவச்செல்வன், காரைநகர்.**

கே: பித்தா! தற்போது எல்லோரது வாயிலேயும் முணு முணுக்கப்படும் வாழை மீனுக்கும் - விலாங்கு மீனுக்கும் கல்யாணம் பாட்டு கேட்டீரா... பாடலைப் பாடியவரின் விவரம் தாரும்?

ப: கானா பாடலுக்கு இசையமைப்பாளர் தேவா தான் 'கிங்' என்று புகழ் இருந்தாலும், அதற்கு முன்னரே கானா பாடல்களைப் பாடி பிரபல்யம் பெற்றவர் உலகநாதன். ஏற்கனவே இதே பாடலை தேவாவிடம் பாடிக் காட்டிய போது இது சரிவராது என்று நிராகரிக்கப்பட்டது. தற்போது சித்திரம் பேசுதடியில் இதே பாடலைப் பாடி திடீர் புகழை அடைந்துவிட்டார். பாடியது மட்டுமல்ல... படத்தில் அதே பாடலுக்கு தானே தோன்றி சுண்டுவிரலை உயர்த்தி... உயர்த்திப்பாடி ... டொப்பிலேயும் அனைவரையும் கவர்ந்துவிட்டார் கானா உலகநாதன். இதுவரை காலமும் மிகுந்த பணக்கஷ்டத்தில் வாழ்ந்தவர். மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காக சாவு வீடுகளுக்கெல்லாம் சென்று பாட்டுப் பாடி அந்த வருமானத்தைக் கொண்டு வறுமையாக குடும்பத்தை நடத்தியவர். இன்று வெளியே தலைகாட்ட முடியாத அளவுக்குப் பிரபல்யம். வெளிநாடுகளிலிருந்து கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைப்பு, பல திரைப்படங்களில் பாட சந்தர்ப்பங்கள் வந்து குவிகின்றனவாம். இதிலிருந்து கிடைக்கும் நீதி - அதிஷ்ட தேவதை எங்கே, எப்போ, எப்படி யார் என்று பாராமல் எந்த நேரத்திலும் கதவைத் தட்டுவாள்... முயற்சி செய்தால்....

**கி.சுபாஸ் சந்தியநாதன், கனகாம்பிகை குளம்.**

கே! அன்புள்ள பித்தன் அண்ணா! ஆண்களுக்கு மட்டும் ஏன் வண்டி வைக்கிறது...?

ப: கண்ணு... அது வண்டி என்று அழைக்கப்படுவது அல்ல... தொந்தி, தொப்பை என்று தான் அழைக்கப் படும். இது இன்னோரன்ன காரணங்களால் உருவாகும்.

1.வீட்டிலே வேலை எதுவும் செய்யாமல் சும்மா இருந்து கொண்டு நேரத்துக்கு நேரம் மூக்கு முட்ட ஒரு வெட்டு வெட்டுவாங்களே.. அதனால வரலாம்.

2. பியர், சாராயம், கள்ளு என்று மப்புக்காக மண்டுவார்களே அதனால் வரலாம்.

3. அல்லது மனைவிமாரை அடிக்கடி தொப்பையாக்கி அந்த அழகை ரசிக்கிறார்களே.. அதற்காக கடவுளின் தண்டனையாக இருக்கலாம் இப்படி பல.. பல



**எஸ். மோகனதாஸ், முறிகண்டி.**

கே: ஏன் பித்தா! என் கனவில் தினம் தினம் நமீதா வருகின்றார்... அவர் கனவிலும் நான் தோன்றுவேனா.... பித்தா?

ப: என்னடா... இது சின்னப் புள்ளத் தனமா இருக்கு... உமது கனவில் அவர் வருவது நியாயம். அவர் கனவில் நீர் வருவீரா என்று கேட்பது உமக்கே கொஞ்சம் ஓவராப் படவில்லையா அப்பு... நமீதா காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் பார்ட்டி.. இப்போது மார்க்கட் இருக்கும் போது வாரி சுருட்டிக் கொள்ள வேண்டும் என்ற கொள்கை உடையவர்... அதனால் தூக்கமில்லாமல் ஓடி ஓடி சம்பாதிக்கிறார். இந்த லட்சணத்தில் அவரது கனவில் நீராவது வருவதாவது... சும்மா மனதை அலையவிடாமல் பொத்திக் கொண்டு இரும்... (வாயை) அப்படியே காதைக் கொண்டு வாரும் ஒரு ரகசியம் சொல்கிறேன்.. சும்மா கொழு கொழு மத மத என்று இருக்கும் நமீதா என்னையும் தூக்கத்தில் இடைஞ்சல் பண்ணத்தான் செய்கிறார்... ஆனால் நான் மட்டும் திராட்சைப் பழத்துக்கு ஆசைப்பட்ட நரிபோல எட்டி எட்டிப்பார்க்கவில்லை... சீ... சீ.... இந்தப் பழம் புளிக்கும் என்று விட்டு விட்டேன்....



**கே.துஷா, கிளிநொச்சி.**

கே: அன்புள்ள பித்தா! நான் மறக்க நினைக்கிற சம்பவம் என் கனவில் அடிக்கடி வந்து தொல்லை செய்கிறதே! அதற்கு என்ன செய்யலாம்?

ப: அதற்கு ஒரு சிறிய கதை... ஒரு சாமியார் கல்லை தங்கமாக்கும் மந்திரத்தை தெரிந்து வைத்திருந்தார்... அந்த மந்திரத்தைத் தனக்கு சொல்லித் தரும்படி சாமியாரின் பக்தன் ஒருவன் சாமியாரை 'டார்ச்சர்' பண்ணிக் கொண்டிருந்தான். பக்தனின் இம்சையை தாங்க முடியாத சாமியார் ஒரு நாள் அந்த மந்திரத்தை சொல்லித் தருவதாகச் சொன்னார்.

பக்தனுக்கோ பெரும் மகிழ்ச்சி... ஆனால் சாமியாரோ "மந்திரத்தை உனக்கு சொல்லித் தருகிறேன். ஆனால் இந்த மந்திரத்தைச் சொல்லி கல்லை - தங்கமாக்கும் போது நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் குரங்கை நினைக்கக் கூடாது" என்றார்.

பக்தனோ "பூ... அவ்வளவுதானே மந்திரத்தை சொல்லிதாருங்கள் சாமி... நான் குரங்கை ஏன் நினைக்கப்போகிறேன்" என்றான்.

சாமியாரும் மந்திரத்தை சொல்லிக் கொடுத்தார். பக்தன் வீட்டுக்கு போய் கொஞ்சம் கற்களை எடுத்து அடுக்கி வைத்துவிட்டு மந்திரத்தைச் சொல்ல முயற்சித்தான். ஆனால் இடையிலே 'அடடா.. இந்த நேரத்தில் குரங்கை நினைக்க வேண்டாம்' என்று சாமியார் சொன்னார் அல்லவா என்ற நினைவு அடிக்கடி வந்து வந்து போனது. இந்த நினைப்பின் மூலம் குரங்கை அடிக்கடி நினைக்க வேண்டி இருந்தது.... எவ்வளவோ முயன்றும் குரங்கு நினைப்பை அவனால் தவிர்க்க முடியவில்லை... அதனால் கல்லையும்.. அவனால் தங்கமாக்க முடியவில்லை... இதே நிலைதான் உமக்கும்.. இதனை நான் மறக்க வேண்டும் - மறக்க வேண்டும் என்று அடிக்கடி நினைத்துக் கொண்டிருக்கிறீர் - அதனையும் மறவும் எல்லாம் சரிவரும்.

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

**ம.சீலன், கிரான்.**

கே: பித்தா! உம்முடைய மனைவி எனக்கு லவ்லெற்றர் அனுப்பி இருக்கிறா.... அப்படியென்றால் உம்மை காய் வெட்டுகிற பிளான் போல் இருக்கிறது. கொஞ்சம் கவனியும்.



ப:அப்படி இல்லை... பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். எனவே வீட்டிலே வேலைகள் கூடி விட்டன. எனக்கு வயது கூடி விட்டது... பழைய மாதிரி ஓடி ஆடி வேலை செய்ய முடியாது - எனவே இன்னுமொரு ஆளை உதவிக்கு சேர்க்கும் ஐடியாவாக இருக்கலாம்.

**சு.மதன், ஆலங்கேணி.**

கே:பித்து மச்சான்! நீர் எத்தனையோ வாசகர்களுக்கு பதில் கூறுகிறீர்... உமது மனைவிக்கும் உமக்கும் சண்டை வந்தால் யார் பதில் கூறுவார்கள்?

ப: அகப்பைக் காம்பு, சப்பாத்தி உருட்டும் கட்டை, தோசைக் கரண்டி, ETC..., ETC... ஒரு நாளுக்கு எமது வீட்டில் சண்டை வரும் போது சொல்லி அனுப்புகிறேன் வந்து பாரும்.... கோப்பை பற...பற.... பீங்கான் பறபற... சட்டி பற பற... முட்டி பற..பற.. என்று பாட்டுப் பாடத்தோன்றும்..... உமக்கு.

# கிழட்டு மன்மதன்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொஞ்சம் கவனியுங்கள்" என அவரை மெய்சிலிர்த்து, திகைப்படையச் செய்யும் வரிகளைக் கொண்டிருந்தன.

"அடக்கடவுளே இதென்ன" என மேயர் ஆடிப்போனார். வெலவெலத்துப் போன அவர் கை ,கால் நடுங்க பொலிஸுக்கு ஓடினார்.

பொலிஸ் உஷாரடைந்து விட்டது. நீலத்தாடியின் வீடு முற்றுகை இடப்பட்டது. அவனுடைய தோட்டத்திலும், வீட்டிலும் கருகிப்போன மனித எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. சில டயறிகளும்கண்டெடுக் கப்பட்டன. அவை அவனால் கபளீகரம் செய்யப்பட்ட பெண்களைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்திருந்தன.

நீலத்தாடிக்கு மரண தண்டனை வழங் கப்பட்டது. பிரான்ஸின் வழக்கப்படி கிளட்டினினால் கழுத்து துண்டாடப்பட வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது. 'கிளட்டின்' என்பது பிரான்ஸிய மக்கள் புரட்சியின்போது நிலப்பிரபுக்களின் கழுத்துகளை இரண்டாகத் துண்டாடிய இயந்திரமாகும்.

கிளட்டின் தண்டனை என்றால் பிரான் ஸிய மக்கள் நெஞ்சிலறைந்து கதறுவார்கள்.

நீலத்தாடியின் மரணதண்டனை நாள். இருபக்கமும் காவலாளிகள் வர அவன் கிளட்டினை நோக்கி போய்க் கொண்டிருக் கிறான். அவனுடைய கழுத்து துண்டாடப் படுவதைப் பார்ப்பதற்காக சனம் கூடி நிற்கிறது.

"சாவுக்கு அஞ்சாதே! தைரியமாக இரு" காவலாளிகளில் ஒருவன் சொன்னான்.

நீலத்தாடி சிரித்தான்!

"ஏன் சிரிக்கிறாய்"

"நான் இறந்து போனதன் பின்னர் என்றாவது ஒரு நாள் பிரான்ஸின் நீதி தேவதையைப் பார்த்து உலகம் சிரிக்கும்"

"இது என்ன புதுக்கதை?"

"புதுக்கதை அல்ல தம்பி நிஜம்! என்னால் கொலை செய்யப்பட்ட ஆட்கள் என்று சொல்லுகிறார்களே, அப்பெண்களிலொருத்தி மீண்டும் வந்து இந்தக் காரியத்தைச் செய்வாள். நீதிதேவதையை அவமானப் படுத்துவாள்"

"நிரபராதிபோல், தீர்க்கதரிசனம் சொல் லாதே" கிளட்டினில் லேன்ரு இரண்டாக மடிக்கப்பட்டு, குனிந்த நிலையில் அவனுடைய கழுத்து வைக்கப்பட்டது.

'சளக்' அவன் கழுத்துத்துண்டாடப்பட்டது. அது ஒரு புட் போல் பந்தைப் போல் எகிறிப்பாய்ந்து முன்னாலுள்ள பாத்திரத்தில் விழுந்தபோது மக்களில் ஒரு பகுதியினர் 'ஓ ஜீசஸ்' என அலறினார்கள்.

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் லேன்ரு என்ற பெயரில் நீலத்தாடியின் வரலாற்றுப் படம் வெளியானது. லேன்ருவின் வரலாற்றுக் குறிப்பில் கற்பழிக்கப்பட்டு, சொத்துகள் சூறையாடப்பட்டு, சுட்டெரிக்கப்பட்ட பெண்ணாக நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்ட பெண்ணொருத்தியே அந்தப் படத்தைப் பார்த்து விட்டு பரபரப்படைந்தாள்.

அதுவொரு கட்டுக்கதை எனக் குமுறிய அவள் ஒரு சட்டத்தரணியை அணுகி பிரான்ஸிய நீதிமன்றத்துக்கு எதிராகவும் அந்த சினிமா கம்பெனிக்கு எதிராகவும் வழக்குத் தொடுத்தாள்.

நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதுபோல, தான் நீலத்தாடியினால் எந்த வீதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும், தான் லெபனான் நாட்டில் சுகமாக வாழ்வதாகவும் அவள் வாதாடி, தான் அவமானப்படுத்தப் பட்டு விட்டதாக நஷ்டம் கோரி வழக் காடினாள்.

சினிமா தயாரிப்பாளர் திக்குமுக்காடிப் போனார்.

பிரான்ஸ் அரசு திகைத்தது.

அந்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றம் நிரம்பி வழிந்தது. உலகம் ஆவலோடு கவனித்தது. அது மட்டுமல்லாது விசித்திரமான பேய்க் கதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. நீதிமன்ற வளவில் நீலத்தாடியின் தலையில்லா முண்டம் காணப்பட்டதாகவும், துண்டிக் கப்பட்ட தலை கதறிக்கொண்டு திரிந்ததாக வும் அந்தக் கதைகள் அச்சத்தைப் பரப்பின.

எது எப்படிப் போனாலும் நஷ்ட ஈடாக பெருந்தொகை பிராங்குகளை பிரான்ஸ் அரசும், சினிமா கம்பெனியும் அப்பெண் ணுக்கு வழங்க வேண்டியதாயிருந்தது. நீலத்தாடி பிரான்ஸின் நீதிதேவதையின் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டான்.

# சாதி என்னும்...

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினாள்.

"எங்க கிளம்பிட்டே?" என ஒரு மாதிரிக் குரலில் வினவினாள் அம்மா. "வேலைக்கு".

"நீ இனி மேல் வேலைக்குப் போக வேண் டாம். அதற்கு அவசியமும் இல்ல".

ஏன் என்ற கேள்வியோடு தாயை நோக் கினாள் அனு.

"உன்னை இன்னிக்குப் பொண்ணு பார்க்க வர்றாங்க. எல்லாம் பேசி முடிச்சாச்சு. மாப்பிள்ளை லண்டனாம். இரண்டு வாரத் துல கல்யாணம் முடிச்சு உடனே லண்டன் கூட்டிற்று போய்விடுவாங்களாம். அதனால ஒழுங்கா சொல்றதை கேட்டு முரண்டு பிடிக்காம இரு. அவங்க எப்படியும் 4.00 மணியளவில வருவாங்க. நீ ஏதாவது பிரச்சினை பண்ணினே அப்புறம் என் னையும், அப்பாவையும் உயிரோட பார்க்க முடியாது" என அவளை எதுவும் பேச விடாது மிரட்டி விட்டுப் போனாள் தாய்.

அவள் சொன்னதைக் கேட்டுக் கொண் டிருந்த அனுவுக்கு தலையெல்லாம் சுற்றியது. என்ன செய்வதென்றே புரியவில்லை. மயக்கமே வந்து விடும் போல் இருந்தது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ மறுபடி தாய் வந்து மதிய உணவு உண்ண அழைத்த போது ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்து சென்றாள். அவளின் முகத்தில் ஒரு தெளிவு இருந்தது. பேசாமல் சாப்பிட்டு விட்டு மறுபடி அறைக்குள் வந்து கதவைச் சாத்திக் கொண் டாள். ஒரு பேப்பரை எடுத்து எழுதத் தொடங் கினாள்.

அன்புள்ள அம்மா, அப்பாவுக்கு,

"என்னை மன்னிச்சிடுங்க. நீங்க சொல்ற வாழ்க்கையை என்னால ஏத்துக்க முடியல. அதே நேரம் எனக்குப் பிடிச்ச வாழ்க்கையை உங்களால அமைச்சுக் கொடுக்க முடியல. மனசில ஒருத்தர நினைச்சுக்கிட்டு இன்னொருத்தரோட என்னால் வாழ முடியாது. என்னோட ராஜேஷை என்னால ஏமாத்த முடியாது. அதே நேரம் உங்களை ஏமாற்றி விட்டு அவரோட ஓடிப்போய் வாழவும் எனக்கு இஷ்டமில்லை. என் காதல் உண்மையானது. அதை நான் களங்கப்படுத்த விரும்ப வில்லை. அதனால் நான் இந்த உலகத்தை விட்டே போய் விடுகிறேன். மறுபடியும் என்னை மன்னித்து விடுங்கள்"

உங்கள்
அனு.

கடிதத்தை எழுதி வைத்து விட்டு பரணில் இருந்த பூச்சிகொல்லி மருந்தை எடுத்தாள். கண்களை மூடி ஒரு கணம் ராஜேஷை நினைத்தாள். "நான் போறன் ராஜேஷ். ஐ லவ் யூடா ஐ லவ் யூ சோ மச்" என்றவள் கண்களை மூடிக் கொண்டு மளமளவென்று மருந்தைக் குடித்தாள். அப்படியே கட்டிலில் சாய்ந்தாள்.

முற்றும்



# நடுங்க வைக்கும் படு கொலைகள்

**சிவசைலஜா**

அண்மையில் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலை அடுத்து நாடெங்கும் தமிழர்கள் மீதான விசாரணைகளும் கைதுகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அரசின் வழமையான பாணியில் சொன்னால் நாட்டில் 'பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.'

இராணுவத் தளபதி மீதான தாக்குதல், தற்கொலைக் குண்டுத்தாக்குதல் என்றும் அதை கர்ப்பிணிபோல வேடமிட்டுவந்த பெண் ஒருவர் மேற்கொண்டிருக்கலாம் என்றும் அரசதரப்பு நம்புகிறது.

இது 'தற்கொலைத்தாக்குதல்' என்ற நம்பிக்கையே, பலரையும் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என சிந்திக்கத் தூண்டுகிறது. ஆனால் புலிகள் இத்தாக்குதலுக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று மறுத்துவிட்டனர்.

எப்படியிருப்பினும் குண்டுத்தாக்குதலை அடுத்து இராணுவத்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியன.

திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களும், தமிழ் மக்கள் மீது விசாரணை என்ற பெயரில் தலைநகர் உட்பட நாட்டின் வீதிச்சோதனைச் சாவடிகள் பலவற்றிலும் இடம்பெற்றுவரும் அத்து மீறல்களும் ஆரோக்கியமானவையல்ல.

எந்தச் சம்பவம் ஒன்றுக்காகவும் தமிழ் மக்கள் மீது மட்டும் சந்தேகப்படுவதற்கான 'ஏக போக உரிமையை' கொண்டுள்ளதாக நடந்துகொள்ளும் போக்கு கண்டிக்கப்பட வேண்டியது.

அயல்நாடான இந்தியாவும் ஏனைய சில நாடுகளும் திருகோணமலை சம்பவங்கள் தொடர்பாக அரசிடன் கருத்துத் தெரிவித்திருந்தன.

வெளிநாட்டுச் செய்திச்சேவை ஒன்று அத்தாக்குதல்கள் தொடர்பாக செய்தி வெளியிட்டமைக்காக அரசில் அங்கம் வகிக்கும் இனவாதிகள் பெரும் கூச்சலிடுகின்றனர்.

தமிழர்கள்மீது கெடுபிடிகள் எவையும் செய்யவில்லை, அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தலில்லை எனக் காட்டிக் கொள்வதற்கான அவர்களது பிரயத்தனங்கள் கொஞ்சமல்ல.

ஆனாலும் அதையும் தாண்டி இன்று தமிழ் மக்கள் ஊடகங்கள் பல்வேறு மொழிகளிலும் உலகை சென்றடைகின்றன என்பதே உண்மை.

இத்தகைய சிக்கல்களுக்குள்ளும் சமாதானத்தின் மீதும் சிங்கள மக்கள்மீதும் இருந்துவரும் நம்பிக்கையை தமிழ்மக்கள் இழந்துவிடவில்லை. எப்படியாயினும் மீண்டுமொரு இன வன்முறையை உண்டுபண்ணும் இனவாதிகளது சிந்தனை தோற்கடிக்கப்படும் என்றே தமிழ் மக்கள் நம்பி வருகின்றனர்.

ஆனாலும் அண்மையில் நாட்டின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றுவரும் அநாமதேயக் கொலைகள் அத்தகையதொரு நம்பிக்கைக்கு பங்கமேற்படுத்துவனவாகவே படுகின்றன.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த, வவுனியா பஸ் நிலையத்தில் பழவியாபாரம் செய்தவரான இருபத்தேழு வயதான தருமசேகரன் என்பவரது தலை வெட்டப்பட்டு பொலித்தீன் பையொன்றில் சுற்றப்பட்டு வவுனியா வைரவ புளியங் குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, திருகோணமலை விளாங் குளம் பிரதேசத்திலும் நான்கு தமிழ் இளைஞர்களது சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நாளுக்கு நாள் வெட்டியும் சுட்டும் கொல்லப்படும் அப்பாவித் தமிழர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

இதேபோல கடந்தவாரம் அவிசாவளைப் பகுதியில் மீட்கப்பட்ட தலையற்ற சடலங்களும் தமிழ் இளைஞர்களுடையனவே என மக்கள் அச்சத்தோடு நம்புகின்றனர்.

அவிசாவளை புவக்பிட்டிய எலிஸ்ரன் தோட்டப்பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து இரண்டு சடலங்களும் தெஹியோவிற்ற தெரணியகல பிரதான வீதிக்கு அண்மையில் உள்ள இறப்பர் தோட்டமொன்றிலிருந்து மூன்று சடலங்களுமாக ஐந்து ஆண்களின் சடலங்கள் தலைகளற்ற நிலையில் கடந்தவாரம் மீட்கப்பட்டன.

கொல்லப்பட்டவர்கள் சுமார் இருபத்தைந்து முதல் முப்பத்தைந்து வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலைகளுக்கான சூத்திரதாரிகளை இனங்கண்டு வெளிப்படுத்தவோ, கைது செய்யவோ இயலாத நிலையில் இருப்பதாக பாதுகாப்புத்துறைமீது பலதரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

வழமைபோன்று ஜனாதிபதியின் விசாரணைக்கான உத்தரவும் உரியவர்களின் அசமந்தப் போக்கும் கொல்லப்பட்டவர்கள் தமிழர்களாக இருப்பர் என்ற அச்சத்தை தமிழ் மக்களிடத்தில் தோற்றுவித்திருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் ஒரு கொலை தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கையெடுப்பது பொலிஸாரின் கடமைகளில் ஒன்றே. அதற்கு ஜனாதிபதியின் விசேட உத்தரவு அவசியமானதல்ல என்பது காலங்காலமாக கண்துடைப்பு ஆணைக்குழு நியமனங்களையும் விசாரணைகளையும் கண்டு பழக்கப்பட்ட ஒரு சமூகத்தின் கருத்தாக இருப்பதில் வியப்பில்லைதான்.

உண்மையில் இந்தக் கொலைகள் அரசியல் நோக்கம் கொண்டவையாக அல்லது இனக்குரோத நடவடிக்கையின் வெளிப்பாடாக அமைகின்றன என்பதில் சந்தேகமில்லை.

மாறாக பாதாள உலகக் கும்பல் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட செயலாக இது கொள்ள முடியாதது.

பாதாள கும்பல்கள் குறிப்பிட்ட தொகையினரை இவ்வாறு கடத்திக் கொலைசெய்ய வாய்ப்பில்லை. அதுதவிர தலைகளையும் வெட்டி ஆடைகளையும் அகற்றி அடையாளம் காணமுடியாதவாறு திட்டமிட்டு கொலை செய்யும் தேவை பாதாள உலகக் கோஷ்டிக்கு இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் இக்கொலைகளைச் செய்தவர்கள் எந்த நிலையிலும் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுவிடக்கூடாது என்பதில் அவதானமாக இருந்தே இக்கொலைகளைப் புரிந்துள்ளமை தெரிகிறது. அவை கண்டெடுக்கப்பட்ட இடத்தில் வைத்து அக்கொலைகள் இடம்பெற்றதற்கான சான்றுகள் அங்கு இல்லை. எனவே வேறு ஒரு இடத்தில் வைத்து தலைகள் துண்டிக்கப்பட்டபின்னர் அவ்விடத்துக்கு சடலங்கள் எடுத்து வரப்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்துடன் ஆடைகளோ, பிற அணிகலன்களோ, பாதணிகளோ எதுவும் அங்கு இல்லை. அவை திட்டமிட்டே அகற்றப்பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது.

இவை தமிழ் இளைஞர்களுடையவை என்று இனங்காணும் வாய்ப்பொன்று ஏற்பட்டால் அது அரசுக்கு சர்வதேச மற்றும் தென்னிலங்கை அரசியலிலும் கூட பல நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் என்பது உண்மை. இதனாலேயே இவை மூடி மறைக்கப்படுகின்றன என்ற கருத்தும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ளதைக் காணமுடிகிறது.

இதேவேளை பதுளை தங்கமலைத் தோட்டத்தில் வசித்துவந்த ஐந்து தமிழ் இளைஞர்களைக் காணவில்லை என உறவினர்கள் தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர். அவர்களைத் தேடும் முயற்சியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாருடன் தொடர்புகொண்டதாகத் தெரிகிறது.

ஜே. வி. பி. அமைப்பு இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் தென்னிலங்கையில் இவ்வாறான தலையற்ற முண்டங்கள் கிடக்கக் காணப்பட்டன. அரச படைத்தரப்பைச் சேர்ந்தவர்களும் ஜே. வி. பியைச் சேர்ந்தவர்களும் கொலைசெய்யப்பட்டு ஆறுகளிலும் வீதியோரங்களிலும் வீசப்பட்டிருந்தனர்.

அத்தகைய பாணியிலான கொலைகளே இப்போது தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். 83களுக்குப் பின்னிருந்தே வடக்கு-கிழக்கில் ஆங்காங்கே கைது செய்யப்பட்ட பலர் இரகசிய இடங்களில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக அவ்வப்போது தகவல்கள் வெளிவந்தன.

ஒரு முறை தலைநகரில் உயிரோடு ரயர்போட்டு தீயிலிடப்பட்ட இளைஞனும் அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவன் என்று கூட முன்னர் தகவல்கள் வெளிவந்தன.

இந்தப் பின்னணியிலேயே தற்போது இடம்பெற்றுவரும் பரவலான கொலைகள் வடக்கு-கிழக்கு மலையக மக்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வைத் தோற்றுவித்திருக்கிறது.

எப்படியாயினும் படைத்தரப்பு மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக தமிழர்கள்மீது விசாரணை என்ற பெயரிலான கெடுபிடிகளை அதிகரிப்பதும் உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதும் நியாயப்படுத்த முடியாதவை. அரச தரப்பு காலங்காலமாக தமிழர்களது தனியாட்சி சிந்தனைக்கு உரமூட்டிய வழியும் இதுவே என்பதும் இங்கே நினைவு கொள்ளத்தக்கது.





HOTEL WESTEERN PVT LTD

Danial Banqet Hall (டேனியில் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக் கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளு டன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, ஐ.ஈ.ஈ., தொலைக்காட்சி, மினி பார், ரெஸ்டூரண்ட், பார், விருந் துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518465
Fax : +94 11 4518461 E-mail : info@hotelwesteem.com
Website : www. hotelwesteem.com

EXPOAIR
your friend in the skies...



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப்பத்திரிக்கை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, மே 7 ஆம் திகதி வெளியிடப்பட்டது.